Tamil

# அவுஸ்திரேலியாவில் வாழ்க்கை

© அவுஸ்திரேலிய பொதுநல அரசு 2007

இவ்வெளியீடு பதிப்புரிமை உடையது.

பதிப்புரிமை சட்டம் 1968 இன் கீழ் அனுமதிக்கப்பட்ட ஒரு பயன்பாட்டிற்கன்றி இதன் எந்தவொரு பகுதியும் எவ்விதத்திலும் பொதுநல அரசின் அனுமதியின்றி மீள்பிரசுரிக்கப்படலாகாது.

மீள்பிரசுரம் மற்றும் உரிமைகள் பற்றிய வேண்டுகோள்கள், விசாரணைகள் என்பன அனுப்பப்படவேண்டிய முகவரி:

Commonwealth Copyright Administration
Attorney General's Department
Robert Garran Offices, National Circuit
Barton ACT 2600

அல்லது தெரிவிக்கப்பட வேண்டிய இணையதளம் www.ag.gov.au/cca

ISBN 978 1 921446 55 9

ஒக்டோபர் 2007 இல் பிரசுரிக்கப்பட்டது

இப்பிரசுரம் ஆங்கிலத்திலும் இன்னும் பல சமுதாய மொழிகளிலும் இணையத்தில் உள்ளது. இப்பிரசுரத்தின் பிரதிகளை பெறுவதற்கான வேண்டுகோள்களை பின்வரும் இணையதளத்தில் மேற்கொள்ளலாம் www.immi.gov.au

உரை பெயர்ப்பாளர் சின்னம், தேசிய பொதுத் தகவல் சின்னமாகும். பொதுநலவாய, மாநில மற்றும் எல்லைப் பிராந்திய அரசாங்கங்களின் துணையுடன் பல்-கலாசார விவகாரங்களுக்கான விக்டோரிய அலுவலகம் இதனை வடிவமைத்தது. ஆங்கிலமொழி ஆற்றல் அதிகம் இல்லாதவர்கள் அரசாங்க சேவைகளைப் பயன்படுத்தும் போது மொழி ரீதியான உதவிகளை எங்கே பெற்றுக் கொள்ளலாம் என்பதை இச்சின்னம் சுட்டிக்காட்டுகிறது.

அரசாங்க மற்றும் சமூகநல தகவல் சேவைகளை வழங்கும் இடங்களான, அரச ஆஸ்பத்திரிகள், பொலிஸ் நிலையங்கள், அரச பாடசாலைகள், சமூக மையங்கள், வீட்டு வசதி மற்றும் தொழில் அலுவலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் குடிவருவோர் வள மையங்கள் போன்ற இடங்களின் இந்த சின்னத்தை அவதானிக்கலாம்.

உரைபெயர்ப்பாளர் சின்னம் விக்டோரியாவில் மே 2006 இல் உத்தியோகபூர்வமாக அறிமுகமாகியது.

# உள்ளடக்கம்


**அறிமுகம்** 1

**அவுஸ்திரேலிய விழுமியங்கள் பற்றிய வாக்குமூலங்கள்** 2

தற்காலிக மற்றும் நிரந்தர விசா விண்ணப்பதாரர்களுக்கான அவுஸ்திரேலிய விழுமியங்கள் வாக்குமூலங்கள் 2

தற்காலிக விசா விண்ணப்பதாரர்களுக்கான அவுஸ்திரேலிய விழுமியங்கள் வாக்குமூலம் 3

**அவுஸ்திரேலிய விழுமியங்களும் கொள்கைகளும்** 4

**அவுஸ்திரேலியா - ஒரே பார்வையில்** 8

சில தகவல் விவரங்கள் 10

தேசிய அடையாளங்கள் 11

**தேசமும் மக்களும்** 14

தட்பவெப்ப நிலை 14

சுற்றுச் சூழல் 15

ஆரம்ப அவுஸ்திரேலியர்கள் 16

ஆரம்ப ஐரோப்பியர்கள் 17

ஒரு தேசத்தின் உதயம் 18

யுத்தத்தின் தாக்கம் 19

செழிப்பும் மாற்றமும் 20

அவுஸ்திரேலியாவைத் தாயமாகக் கொண்டோர் 21

ஜனநாயகமும் அரசாங்கமும் 22

**இன்றைய அவுஸ்திரேலிய சமுதாயம்** 26

சட்டங்களும், சமூகப் பழக்கவழக்கங்களும் 26

குடும்பங்களது மாறிவரும் பங்கு 30

அவுஸ்திரேலிய ஆங்கிலம் 32

கொண்டாட்டங்களும் விடுமுறைகளும் 33

விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் கலைகள் 35

அறிவியல் சாதனையாளர்களும் கண்டுபிடிப்பாளர்களும் 36

**அவுஸ்திரேலியாவில் வசித்தல்** 37

தொழில்வாய்ப்பும் வேலைச் சூழ்நிலைகளும் 37

வீட்டு வசதி 38

சமூகப் பாதுகாப்பு 39

ஆஸ்பத்திரி மற்றும் மருத்துவ செலவுகள் 40

ஆங்கில மொழி வகுப்புகள் 40

உரைபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்புகள் உதவி 41

கல்வி 41

வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் 42

முக்கியமான தொடர்பு விபரங்கள் 42

**ஓர் அவுஸ்திரேலியப் பிரசையாதல்** 43

குடியுரிமையினால் கிடைக்கும் சிறப்புரிமைகள் 43

கடமைகள் 43

# அறிமுகம்



அவுஸ்திரேலியாவில் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ வசிப்பதற்கான விசாவுக்காக விண்ணப்பம் செய்வோருக்கு உதவுவதே இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும். அவுஸ்திரேலியாவைப் பற்றியும், அதனது வரலாறு, வாழ்க்கைமுறை மற்றும் நாம் பகிர்ந்துகொள்கின்ற விழுமியங்கள் என்பன பற்றிய ஒரு சுருக்க விளக்கத்தை இது தருகிறது.

அவுஸ்திரேலிய விழுமியங்களை மதிப்பதாகவும், அவுஸ்திரேலிய சட்டங்களுக்கு கீழ்ப்படிவதாகவும் விசா விண்ணப்பிப்போர் பலரும் உறுதிப்படுத்துவது, விசா விண்ணப்பம் பரிசீலிக்கப்படுவதற்கு அவசியமாகும்.

அவுஸ்திரேலிய விழுமியங்களுள் தனிநபரின் சம அந்தஸ்து, கண்ணியம், தனிமனித சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், சமய சுதந்திரமும் சமய சார்பற்ற அரசாங்கமும், மற்றும் கூட்டுச் சேரும் சுதந்திரம், பாராளுமன்ற ஜனநாயகத்துக்கும் சட்டத்தின் மேலாணைக்கும் ஆதரவு வழங்குதல், சட்டத்தின் முன் சகலரும் சமம், ஆண் பெண் சமத்துவம், சம வாய்ப்பு மற்றும் அமைதி பேணுதல் என்பன உள்ளடங்கும். எல்லோருக்கும் நியாயம் கிடைத்தல், பரஸ்பர மரியாதை, சகிப்புத்தன்மை, இயலாதோருக்குக் கருணைக் கரம் நீட்டுதல் மற்றும் பொதுநலனில் அக்கறை போன்றன பற்றிய அபேதவாத உணர்வும் இதிலடங்கும்.

ஆங்கிலமே தேசிய மொழி என்பதும் அவுஸ்திரேலிய சமுதாயத்தை ஒன்றிணைக்கும் அம்சமும் அதுவே என்பதைப் புரிந்து கொள்வதும் அவசியமாகும்.

அவுஸ்திரேலியாவில் சிறிது காலமாக வசித்து வருவோருக்கும் இந்நூல் பிரயோசனம் உள்ளதாக அமையும். குறிப்பாக, குடிவந்தோர்களுடன் பணியாற்றுபவர்கள் அல்லது அண்மையில் அவுஸ்திரேலியாவுக்கு வந்த நண்பர்களையோ உறவினர்களையோ கொண்டவர்கள் ஆகியோரும் பலனடையலாம்.

புதிதாக அவுஸ்திரேலியாவில் குடியேறுபவர்கள் அவர்களது புதிய நாடு பற்றியும் அதன் பாரம்பரியம், மொழி, பழக்கவழக்கங்கள், விழுமியங்கள் மற்றும் வாழ்க்கை முறை பற்றியும் முடிந்தளவு கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் பின்னர் தாம் தகுதிபெறும் போது அவுஸ்திரேலிய குடியுரிமைக்கு விண்ணப்பித்து அவுஸ்திரேலிய சமுதாயத்தின் ஓர் அங்கமாக கூடிய விரைவில் மாறவும் அரசாங்கம் ஊக்குவிக்கிறது.

நீர் புதிதாக அவுஸ்திரேலியாவுக்கு வந்தவராயின் உம்மை நாம் வரவேற்கிறோம். நீர் ஸ்திரத்தன்மை கொண்ட, வளமான, ஜனநாயக நாடொன்றில் வாழப் போகிறீர்.

வேறுபட்ட பின்னணிகளைக் கொண்ட, ஆயினும் பொதுவான விழுமியங்களையும் கடமைகளையும் கொண்டு, ஐக்கியப்பட்ட அவுஸ்திரேலியர்களைக் கொண்ட கலாசார வேற்றுமையில் ஒற்றுமை காணும் ஒரு சமுதாயத்தில் நீர் இணைகின்றீர்.

## மேலதிகத் தகவல் பெற

குறிப்பிட்ட தலைப்புகளில் மேலதிகத் தகவல்கள் பெறவேண்டுமெனின், இப்புத்தகத்தில் ஆங்காங்கு குறிப்பிடப்பட்டுள்ள இணையத்தளங்களையும் மற்றும் வேறு மூலாதாரங்களையும் நாடவும்.

அவுஸ்திரேலியாவில் வாழ்வது மற்றும் தொழில் பார்ப்பது சம்பந்தமாக குடிவரவு மற்றும் குடியுரிமை இலாகா (Department of Immigration and Citizenship) (DIAC) வின் www.immi.gov.com இணையத்தில் 'அவுஸ்திரேலியாவில் வசித்தல்' (Living in Australia) எனும் பகுதியைப் தரிசிக்கவும்.

அவுஸ்திரேலியாவில் குடியமருவது தொடர்பான விரிவான விபரங்களை அறிய DIAC இன் இணையத்தில் காணப்படும் *'அவுஸ்திரேலியாவில் வாழ்வைத் தொடங்குதல்' (Beginning a Life in Australia)* எனும் தலைப்பிலான கைநூல்களை நாடவும். ஆங்கிலத்திலும் வேறு மொழிகளிலும் இந்தக் கைநூல்கள் கிடைக்கின்றன. அவுஸ்திரேலியாவின் ஒவ்வொரு மாநிலத்திற்கும் எல்லைப் பிராந்தியத்திற்கும் தனியான வழிகாட்டி நூல்கள் உள்ளன. உள்ளூர் தகவல்கள் மற்றும் தொடர்புகள் பற்றிய விபரங்களை, நீர் வாழ விரும்பும் மாநிலம் அல்லது எல்லைப் பிராந்தியம் பற்றிய நூலில் பெற்றுக் கொள்ள முடியும்.

கரை தாண்டிய மனிதாபிமான திட்டத்தின் (Offshore Humanitarian Programme) கீழ் அங்கீகாரம் பெற்றவராயின், அவுஸ்திரேலியாவுக்கு வருவதற்கு முன்னர் அவுஸ்திரேலிய கலாசார முன்தகவல் நிகழ்ச்சித் திட்டத்தில் (Australian Cultural Orientation Programme - AUSCO) கலந்து கொள்ளுமாறு ஊக்குவிக்கப்படுகின்றீர். அவுஸ்திரேலியாவுக்கு வருகை தரல் மற்றும் அங்கு குடியமரல் பற்றிய தகவல்களை இந்த நிகழ்ச்சியூடாகப் பெறலாம். ஆசியா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கின் பல்வேறு நிலையங்களில் இது நடாத்தப்படுகிறது.

இந்த நூலின் மேலதிகப் பிரதிகளை குடிவரவு மற்றும் குடியுரிமை இலாக்காவில் கேட்டுப் பெறலாம் அல்லது இலாக்காவின் இணையத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

# அவுஸ்திரேலிய விழுமியங்கள் பற்றிய வாக்குமூலங்கள் (Australian Values Statements)

## தற்காலிக மற்றும் நிரந்தர விசா விண்ணப்பதாரர்களுக்கான அவுஸ்திரேலிய விழுமியங்கள் வாக்குமூலங்கள்

தற்காலிக, நிரந்தர விசா மற்றும் சில குறுகிய கால விசா விண்ணப்பதாரர்கள், இந்தப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கும் அவுஸ்திரேலியாவில் வாழ்வது சம்பந்தமான ஆவணங்களை வாசித்து அல்லது கேட்டு விளங்கிக் கொண்டிருக்க வேண்டும் எனக் கோரப்படுகின்றனர். இவ்விண்ணப்பதாரிகள் பின்பு அவுஸ்திரேலிய குடியுரிமைக்கு விண்ணப்பிப்பதாயின் அவர்களிடம் இருந்து என்ன வேண்டப்படக்கூடும் என்பதையும் அறிந்திருக்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இவ்வாக்குறுதி, குறித்த சகல விண்ணப்பதாரர்களதும் விசா விண்ணப்பப் படிவங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய எல்லா விண்ணப்பதாரிகளும் இதில் கையொப்பமிடல் வேண்டும்.

## அவுஸ்திரேலிய விழுமியங்கள் வாக்குமூலம்

நீங்கள் 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராயின் இவ்வாக்குமூலத்தில் கையெழுத்திடல் வேண்டும்.

*அவுஸ்திரேலிய சமுதாயம் மற்றும் விழுமியங்கள் பற்றி அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கிய தகவல்களை நான் வாசித்தேன் அல்லது அவை எனக்கு விளக்கமாய்ச் சொல்லப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.*

*நான் புரிந்துகொள்வன:*

- *தனிமனிதனுடைய சுதந்திரத்திற்கும் கண்ணியத்திற்கும் மதிப்பளித்தல், மதச் சுதந்திரம், சட்டத்தின் மேலாதிக்கம், பாராளுமன்ற ஜனநாயகம், ஆண்பெண் சமத்துவம் என்பவற்றையும், பரஸ்பர மரியாதை, சகிப்புத் தன்மை, நீதி, அல்லல்படுவோருக்கு கருணை காட்டுதல், சமூக நலனில் அக்கறை முதலியவற்றை உள்ளடக்கிய அபேதவாத உணர்வையும் அவுஸ்திரேலிய சமுதாயம் மதித்துப் போற்றுகிறது.*
- *ஒவ்வொரு தனிநபருக்கும் அவரது இனம், மதம் அல்லது சாதிப் பின்னணி பற்றிய கரிசனை இன்றி, சமமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதை அவுஸ்திரேலிய சமுதாயம் மதித்துப் போற்றுகிறது.*
- *தேசிய மொழி என்ற வகையில் அவுஸ்திரேலிய சமுதாயத்தை ஐக்கியப்படுத்தும் முக்கிய ஆக்கக்கூறாக ஆங்கிலம் திகழ்கின்றது.*

*அவுஸ்திரேலியாவில் நான் இருக்கும் காலத்தில் மேற்படி விழுமியங்களை மதித்து நடப்பதாகவும் அவுஸ்திரேலியாவின் சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதாகவும் இணக்கம் தெரிவிக்கிறேன்.*

*நான் அவுஸ்திரேலியப் பிரசையாகவேண்டுவதாயின், பின்வருவனவற்றையும் புரிந்து கொள்கிறேன்.*

- *அவுஸ்திரேலியக் குடியுரிமை என்பது அவுஸ்திரேலியர்களது வேறுபட்ட தன்மைகளுக்கு மதிப்பளிக்கின்ற அதே வேளை சகல அவுஸ்திரேலியர்களையும், ஐக்கியப்படுத்துகின்றதும் பகிர்ந்துகொள்ளப்படுகின்றதுமான ஓர் அடையாளமும் பொதுப் பிணைப்புமாகும்.*
- *அவுஸ்திரேலிய குடியுரிமையானது, பரஸ்பரம் பகிர்ந்துகொள்ளப்படும் கடமைகளையும் உரிமைகளையும் கொண்டது. அவுஸ்திரேலிய சட்டங்களைப் பேணுதல், தேர்தலில் வாக்களித்தல் மற்றும் ஜூரராக செயற்படுதல் போன்றன அவுஸ்திரேலியக் குடியுரிமையுடன் தொடர்பான கடமைகளில் உள்ளடங்கும்.*
- *அவுஸ்திரேலியாவின் பிரசையாவதற்குரிய சட்டரீதியான தகைமைகளை நான் பெற்று, எனது விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் நான் அவுஸ்திரேலியாவுக்கும் அதன் மக்களுக்கும் எனது விசுவாசத்தைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்பதை அறிகிறேன்.*

இன்டர்நெட் மூலம் விண்ணப்பிக்கும் போது, விழுமியங்கள் பற்றிய அறிவிப்பினை ஒப்பமிட 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற பொத்தானை அழுத்துமாறு பிரதான விண்ணப்பதாரி கோரப்படுவார். 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய குடும்பத்தாரையும் அவர் தனது விண்ணப்பத்தில் இணைத்துக்கொள்வாராயின், அதனோடு இணைந்ததாக பின்வரும் மேலதிகப் பத்தியும் காணப்படும்.





*இந்த விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய ஏனைய அனைவரும் அவுஸ்திரேலிய சமுதாயம் மற்றும் விழுமியங்கள் பற்றி அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்கியுள்ள தகவல்களை வாசித்து அல்லது விளக்கக் கேட்டு அறிந்து கொண்டதாகவும், மேற்படி பிரகடனத்துக்கு இணக்கம் தெரிவிப்பதாகவும் என்னிடம் அறிவுறுத்தினர்.*

இதன் மூலம் விண்ணப்பதாரி தன் சார்பாகவும் தன்னைச் சார்ந்தோர் சார்பாகவும் பிரகடனத்தை மேற்கொள்கிறார்.

## தற்காலிக விசா விண்ணப்பதாரர்களுக்கான அவுஸ்திரேலிய விழுமியங்கள் வாக்குமூலம்

குறிப்பிட்ட தற்காலிக விசா விண்ணப்பதாரர்களும் அவுஸ்திரேலிய விழுமியங்கள் வாக்குமூலத்தில் கையொப்பமிடல் வேண்டும். அவர்களுக்கான விழுமியங்கள் வாக்குமூலம், விண்ணப்பத்தின் பொதுப் பிரகடனங்கள் பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே, விண்ணப்பத்தில் கையொப்பமிடுவதன் மூலம் அவர் வாக்குமூலத்திலும் ஒப்பமிட்டவர் ஆகிறார். இந்த விண்ணப்பதாரிகள் இப்புத்தகத்தை வாசித்திருக்க வேண்டுமென வேண்டப்படுவதில்லை, ஆனால் விரும்பினால் வாசிப்பது நல்லது.

பின்வரும் அவுஸ்திரேலிய விழுமியங்கள் வாக்குமூலம் அனேகமான தற்காலிக விசா விண்ணப்பப் படிவங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

*அவுஸ்திரேலியாவில் நான் தங்கியிருக்கும் காலத்தில், இந்தப் படிவத்தில் பட்டியலிடப்பட்டுள்ளவாறு, அவுஸ்திரேலிய விழுமியங்களை மதித்து நடப்பேன், அத்துடன் அவுஸ்திரேலிய சட்டங்களையும் பேணுவேன்.*

இன்டர்நெட் மூலமான விண்ணப்பங்களில் இவ்வாக்குமூலம் சிறிதளவு வேறுபடுகிறது.

*நான் அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்கும் காலத்தில், இவ்விண்ணப்பத்தின் ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்டுள்ளவாறு, அவுஸ்திரேலிய விழுமியங்களை மதித்து நடப்பேன், அத்துடன் அவுஸ்திரேலியாவின் சட்டங்களைப் பேணி நடப்பேன்.*

18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய சார்ந்திருப்போரைக் கொண்ட இன்டர்நெட்டில் விண்ணப்பதாரரின் படிவத்திலுள்ள வாக்குறுதியில் மேலதிகமாகப் பின்வரும் பத்தியும் காணப்படும்.

*இந்த விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள அனைவரும் மேற்படி நிபந்தனைக்குத் தாமும் இணங்குவதாக என்னிடம் தெரிவித்தனர்.*

இன்டர்நெட்டில் விண்ணப்பிப்பவர்கள், தம் சார்பாகவும் தம்மைச் சார்ந்திருப்போர் சார்பாகவும் (பொருத்தமாயின்) விழுமியங்கள் வாக்குறுதிக்குறிய 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற பொத்தானை அழுத்துமாறு வேண்டப்படுவார்கள்.

# அவுஸ்திரேலிய விழுமியங்களும் கொள்கைகளும்

ஸ்திரமான, அமைதியான மற்றும் வளமான சமுதாயமொன்றைப் பேணுவதற்காக, அவுஸ்திரேலிய சமுதாயத்தின் அடிப்படையாக அமைந்து அனைத்தோராலும் பகிரப்படும் கொள்கைகளையும் விழுமியங்களையும் நிலைநிறுத்த வேண்டுமென சகலவித பின்னணிகளையும் கொண்ட அவுஸ்திரேலியர்களிடமும் எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவின் சுதந்திரமான ஜனநாயக சமுதாயத்துக்கு அடித்தளத்தை இவ்விழுமியங்கள் வழங்குகின்றன. அவற்றுள் பின்வருவன அடங்கும்.

- தனிநபரின் சமத்துவமான அந்தஸ்து, கண்ணியம் மற்றும் சுதந்திரம் என்பவற்றை மதித்தல்
- பேச்சுச் சுதந்திரம்
- மதம் மற்றும் மதசார்பற்ற அரசாங்கம் பற்றிய சுதந்திரம்
- கூட்டிணையும் சுதந்திரம்
- பாரளுன்ற ஜனநாயகத்திற்கும் சட்டத்தின் மேலாதிக்கத்திற்கும் ஆதரவளித்தல்
- சட்டத்தின் முன் சகலரும் சமம்
- ஆண் பெண் சமத்துவம்
- சகலருக்கும் சம சந்தர்ப்பம்
- அமைதி வழி
- சகிப்புத்தன்மை, பரஸ்பர மரியாதை மற்றும் அல்லல்படுவோருக்கு கருணைகாட்டுதல் போன்றவற்றை உள்ளடக்கிய அபேதவாத உணர்வு

பல்வேறு நாடுகளும் ஏதோ ஒருவகையில் இவற்றைப் பகிர்ந்துகொள்கின்ற போதிலும் அவுஸ்திரேலிய விழுமியங்களும், கொள்கைகளும் அவுஸ்திரேலியாவின் தனித்துவ அமைப்புக்கு உகந்ததாக இயைபுபடுத்தப்பட்டு, உலகின் நாலாபக்கங்களிலிருந்தும் வந்த மில்லியன் கணக்கான குடியேறிகளூடாக வடிமைக்கப்பட்டும், நவீனமயப்படுத்தப்பட்டும் உள்ளன. வெவ்வேறு மக்களால் பல்வேறு விதமாக அவை வெளிப்படுத்தப்படினும் அதன் அர்த்தம் ஒன்றேயாகும்.

அபோரிஜினல் பழங்குடி மக்களும் டொரஸ் தீவக மக்களும் அவுஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகளாவர். அவர்களது தனித்துவமான கலாச்சாரமும், பாரம்பரியங்களும் உலகின் மிகப் பழமையானவற்றில் உள்ளவையாகும். அவுஸ்திரேலியாவின் ஆரம்பக் குடியேறிகளில் அதிகமானோர் பிரித்தானியா மற்றும் அயர்லாந்தைச் சேர்ந்தவர்கள். இந்த ஆங்கிலேய – கெல்டியப் பாரம்பரியம், அவுஸ்திரேலியாவின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் அரசியல் பாரம்பரியங்களில் அதிமுக்கியமான தொடர்ந்தேர்ச்சியான செல்வாக்கைச் செலுத்தி வருகின்றது. அதன் பின்னரான குடிவரவு அலை, ஆப்பிரிக்கா, ஆசியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து கணிசமான தொகையினரை அவுஸ்திரேலியாவில் கொண்டு வந்து சேர்த்தது. இவர்கள் அனைவரும் அவுஸ்திரேலியாவுக்கும் அதன் வாழ்க்கை முறைக்கும் தமது தனித்துவமான பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

பகிர்ந்துகொள்ளப்படுகின்ற இவ்விழுமியங்கள் மற்றும் கொள்கைகள் விவரத்தின் நோக்கம் எல்லோரையும் ஒரே நம்பிக்கையுள்ள, ஒரே விதமானவர்களாக மாற்றுவதல்ல. உண்மையில், சுதந்திர சிந்தனையுள்ள தனிமனிதனுக்கு மதிப்பளித்தலும், வேறுபட்டுக் காணப்படுகின்ற உரிமையும் அவுஸ்திரேலிய ஜனநாயகத்தின் அடித்தளங்களாகும்.

ஸ்திரமானதும் உயிரோட்டமுள்ளதும் வேற்றுமையிலும் ஒன்றுபட்டதுமான சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் துணை நின்ற அடிப்படை விழுமியங்களைப் புரிந்து கொள்வதற்கு புதிய குடியிருப்பாளர்களுக்கு உதவுவதே இதன் நோக்கமாகும்.

அவுஸ்திரேலியாவில் மக்கள் பல்வேறு விதமான சுதந்திரங்களைப் பெற்றுள்ளனர். எனினும் இந்த சுதந்திரங்களை அனுபவிப்பதில் ஒவ்வொருவரும் அவுஸ்திரேலியாவின் சட்டங்களுக்கு கீழ்படித்து நடத்தல் அவசியம். இந்த சட்டங்கள் முறையான, சுதந்திரமான, பாதுகாப்பான ஒரு சமுதாயத்தைப் பேணிப் பாதுகாப்பதற்காக, ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்கள் மூலம் இயற்றப்படுகின்றன.







## • அடிப்படைச் சுதந்திரங்கள்

சகல அவுஸ்திரேலியா்களும் பல அடிப்படை உரிமைகளைப் பெற்றுள்ளனா். (சட்டத்தின் வரம்புகளுக்கு உட்பட்டு) சுதந்திரமாகவும் பகிரங்கமாகவும் கருத்து வெளியிடல், கூட்டமைப்புகளில் இணைதல், கூட்டங்கள் நடாத்துதல், தாம் விரும்பும் மதத்தை வழிபடல், அவுஸ்திரேலியா முழுவதிலும் கட்டுப்பாடின்றி சஞ்சரித்தல் போன்றன அவற்றுள் சிலவாகும்.

## • தனிநபரின் சமமான அந்தஸ்து, கன்னியம் மற்றும் சுதந்திரத்தை மதித்தல்

சகல அவுஸ்திரேலியர்களும் சுதந்திரமும் சம அந்தஸ்துமுடையவா்கள். அவா்கள் பரஸ்பரம் ஒருவரையொருவா் கண்ணியமாகவும், மரியாதையாகவும் நடாத்த வேண்டும் என எதிா்பாா்க்கப்படுகின்றனா்.

*இன ரீதியான பாரபட்ச சட்டம் 1975 (Racial Discrimination Act 1975), பாலின பாரபட்ச சட்டம் 1984 (Sex Discrimination Act 1984), அங்கவீனா் பாரபட்ச சட்டம் 1992 (Disability Discrimination Act 1992) மற்றும் வயதுப் பாரபட்ச சட்டம் 2004 (Age Discrimination Act 2004)* போன்ற சட்டங்களின் கீழ் பொது வாழ்வின் பல்வேறு கட்டங்களில் இனம், பால், அங்கவீனம், வயது போன்றவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படுவதை பொதுநலவாய சட்டங்கள் தடுக்கின்றன. இந்த சட்டங்களின் அடிப்படையிலான முறைப்பாடுகளைக் கையாளுவதற்கென, மனித உரிமைகள் மற்றும் சம வாய்ப்பு ஆணையம் (Human Rights and Equal Opportunity Commission) ஒன்று உள்ளது.

நமது சமுதாயத்தில் முரண்பாடுகளைத் தீா்ப்பதற்கான வழிமுறைகளாக வன்முறை, அச்சுறுத்தல் அல்லது இழிவுபடுத்தல் போன்றன பிரயோகிக்கப்படுவதை அவுஸ்திரேலியா்கள் நிராகரிக்கின்றனா்.

### இணையத்தில் தகவல்

மனித உரிமைகள் மற்றும் சம வாய்ப்பு ஆணையம் www.hreoc.gov.au

## • பேச்சுச் சுதந்திரம்

சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்ட விதத்தில், அவுஸ்திரேலிய அரசாங்கம் பற்றியோ, வேறு எந்த விவகாரம் பற்றியோ சமுகப் பிரச்சினைகள் பற்றியோ தாம் சிந்திப்பதை எழுதவும் பேசவும் எல்லா அவுஸ்திரேலியா்களுக்கும் சுதந்திரம் உண்டு. ஆனால் இச்செயல் ஏனைய மக்களுக்கு ஆபத்து ஏற்படுத்துவதாகவோ பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதாகவோ அல்லது அடுத்தவரது கருத்துச் சுதந்திரத்தைத் தடுப்பதாகவோ இருத்தல் கூடாது.

இது அவுஸ்திரேலியாவின் செய்தித் தாள்கள், வானொலி, தொலைக்காட்சி மற்றுமுள்ள அனைத்து வகை ஊடகங்களுக்கும் பொருந்தும். அரசாங்கத்தின் செயற்பாடுகளை எதிா்க்கவும், சட்டங்களை மாற்றுவதற்காகக் பிரசாரம் செய்யவும் அவுஸ்திரேலியா்களுக்கு சுதந்திரம் உண்டு.

பேச்சுச் சுதந்திரமானது, தமது கருத்துக்களை வெளியிடவும், கருத்துகளைக் கலந்தாலோசிக்கவும் மக்களுக்கு இடமளிக்கிறது. பொய்கள் மற்றும் தப்பான தகவல்களிலிருந்து தனிநபரின் நற்பெயரைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் உள்ளன. கலாசாரம், இனம் அல்லது பின்னணி அடிப்படையில் மற்றவா்களுக்கெதிராக வெறுப்புணா்வைத் தூண்டுவதைத் தடுக்கும் விதத்திலான சட்டங்களும் உள்ளன.

## • மத சுதந்திரமும் மதச்சாா்பற்ற அரசாங்கமும்

சகல அவுஸ்திரேலியா்களுக்கும் தாம் விரும்பும் மதத்தை, அதன் நடைமுறைகள் அவுஸ்திரேலியாவின் எந்தவொரு சட்டத்தையும் மீறாதவிதத்தில் பின்பற்றும் சுதந்திரம் உண்டு. எந்த மதத்தையும் பின்பற்றாமல் இருக்கவும் அவுஸ்திரேலியா்களுக்கு சுதந்திரம் உண்டு. மத ரீதியான சகிப்புத்தன்மையின்மை அவுஸ்திரேலிய சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகும்.

அவுஸ்திரேலிய அரசாங்கம் மதச் சார்பற்றது. அங்கு உத்தியோகபூர்வ அல்லது அரச மதம் என்று எதுவும் கிடையாது. அரசாங்கங்கள் தம் பிரசைகளை எவ்வித சமய வேறுபாடுமின்றி சமமாகவே நடத்துகின்றன.

அவுஸ்திரேலியாவில் மதரீயான சட்டங்கள் சட்ட அந்தஸ்துடையனவல்ல. பாராளுமன்றம் இயற்றிய சட்டங்கள் மட்டுமே அங்கு நடைமுறையில் இருக்கும், உதாரணமாக விவாகரத்து விடயங்கள். சில மத ரீதியான அல்லது கலாசார ரீதியான நடைமுறைகளான இருதார மணம் (ஒரே நேரத்தில் ஒன்றிற்கு மேற்பட்டவர்களை மணமுடித்தல்) போன்றன அவுஸ்திரேலியாவின் சட்டங்களுக்கு முரணானவையாகும்.

## • கூட்டுச் சேரும் சுதந்திரம்

அவுஸ்திரேலிய சட்டத்திற்கு உட்பட்ட வகையில், ஒன்று சேர்ந்து அரசாங்கத்துக்கு அல்லது வேறு நிறுவனங்களுக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க அவுஸ்திரேலியர்களுக்கு சுதந்திரம் உண்டு. அத்தகைய எதிர்ப்புகள் அமைதியான முறையில் மனிதர்களுக்கோ சொத்துக்களுக்கோ எவ்வித சேதமோ காயமோ ஏற்படுத்தக்கூடிதாக அமைதல் கூடாது. சட்ட ரீதியான எந்த இயக்கத்திலும் சேரும் அல்லது சேராதிருக்கும் சுதந்திரத்தையும் இது உள்ளடக்குகிறது. அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் மற்றும் சமூகக் குழுக்கள் என்பனவும் மேற்படி இயக்கங்கள் அல்லது குழுக்களில் அடங்குகின்றன.

## • பாராளுமன்ற ஜனநாயகத்துக்கும் சட்டத்தின் மேலாதிக்கத்துக்கும் ஆதரவு வழங்குதல்

அவுஸ்திரேலியா பாராளுமன்ற ஜனநாயகத்தைக் கொண்டது. அதாவது, நாடு நிர்வகிக்கப்படுவதிலும் அவுஸ்திரேலிய சமுதாயத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதிலும் அவுஸ்திரேலிய மக்கள் பங்கெடுக்கின்றனர். அரசாங்கங்கள் சகல மக்களுக்கும் பதிலளிக்க வேண்டும். அவுஸ்திரேலியாவில் சட்டங்களை வகுக்கும் அதிகாரம் அல்லது அத்தகைய அதிகாரத்தை எவருக்கும் வழங்கும் அதிகாரம் பெற்ற நிறுவனங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றங்களேயாகும்.

அரசாங்கங்கள் ஸ்தாபித்த சட்டங்களுக்கு அவுஸ்திரேலியாவிலுள்ள ஒவ்வொருவரும் கீழ்ப்படிய வேண்டும். அவ்வாறே, சகல அவுஸ்திரேலியர்களுக்கும் சட்டத்தின் மேலாண்மை மூலமான பாதுகாப்பு கிடைக்கிறது. எவரும் அதாவது அரசியல்வாதிகள், காவல் துறையினர் போன்ற அதிகாரப் பதவிகளைப் பெற்றவர்களும் சட்டத்திலிருந்து விதிவிலக்கு பெற்றவர்களோ, 'சட்டத்திற்கு மேம்பட்டவர்களோ' அல்லர்.

## • சட்டத்துக்கு முன் சகலரும் சமம்

எல்லா அவுஸ்திரேலியர்களும் சட்டத்துக்கு முன் சமமாவர். அதாவது, எவரும் அவரது சாதி, இனம், பிறந்த நாடு, வயது, பாலினம், குடியியல் நிலை, அங்கவீனம் அல்லது அரசியல், மத நம்பிக்கைகள் எனபவற்றின் அடிப்டையில் மற்றவர்களிலிருந்து வேறுபடுத்தி நடாத்தப்படக்கூடாது. அரச நிறுவனங்களும் சுயாதீன வழக்கு மன்றங்களும் சகலரையும் சரிசமமாக நடத்த வேண்டும்.

சரிசமமாக நடத்தப்படுதல் என்பதன் அர்த்தம், தொழில் வாய்ப்புப் பெறுதல், தரமுயர்த்தப்படுதல் என்பன, சம்பந்தப்பட்டவரது திறமை, ஆற்றல், அனுபவம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டுமேயன்றி, அது அவரது கலாசாரப் பின்னணியை அல்லது அரசியல் நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதாக அமைதல் கூடாது என்பதேயாகும். மேலும் ஒருவரது இனம், நிறம், மதம், பாலினம் அல்லது விவாகமான நிலை போன்றவற்றின் அடிப்படையில் ஒரு வியாபார நிலையமோ, ஹோட்டலோ அல்லது வேறொரு சேவை மையமோ தமது சேவையை எவருக்கும் வழங்க மறுத்தல் கூடாது.

## • ஆண் பெண் சமத்துவம்

அவுஸ்திரேலியாவில் ஆண் பெண் இருபாலாருக்கும் சம உரிமைகள் உண்டு. தொழில்களையும், பதவிகளையும் ஆண் பெண் வேறுபாடின்றி அனைவரும் பெறலாம். இராணுவத்திலும் ஆண்களும், பெண்களும் பணிபுரிய முடியுமாயிருப்பதோடு அரசாங்கத்திலும் அவர்கள் பதவி வகிக்கலாம்.





## • சம வாய்ப்பும் அபேதவாத உணர்வும்

சமவாய்ப்பு வழங்கப்படுவதையும் 'fair go' என அடிக்கடி குறிப்பிடப்படும் நியாய வழியையும் அவுஸ்திரேலியா்கள் வெகுவாக மதிக்கின்றனர். அதாவது ஒருவர் தம் வாழ்வில் அடையப்பெறுகின்ற சாதனைகள் அவரது திறமை, முயற்சி, கடின உழைப்பு என்பவற்றின் பிரதிபலனாக அமைய வேண்டுமேயன்றி, அவரது பிறப்பு அல்லது பக்கச்சார்பான சலுகையை அடிப்படையாகக் கொண்டு அமைதல் கூடாது.

அவுஸ்திரேலியா்கள் பரஸ்பர மரியாதை, சகிப்புத்தன்மை, நியாயம் போன்றவற்றை உள்ளடக்கிய அபேதவாத உணர்வைக் கொண்டவர்கள். இதன் அர்த்தம் சகலரும் ஒரே மாதிரியானவர்கள் அல்லது சம அளவிலான செல்வம் அல்லது சொத்தினைப் பெற்றுள்ளனர் என்பதல்ல. அவுஸ்திரேலிய சமுதாயத்தில் எவ்வித சம்பிரதாய வகுப்பு வேற்றுமைகளும் இருத்தலாகாது என்பதை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

## • அமைதி பேணல்

அவுஸ்திரேலியர் தமது அமைதியான சமுதாயத்தைப் பற்றி பெருமிதம் கொள்கின்றனர். எத்தகைய மாற்றங்களும் அமைதி வழித் தூண்டுதல், கலந்துரையாடல் மற்றும் ஜனநாயக வழிமுறைகளின் அடிப்படையிலேயே இடம் பெற வேண்டும் என அவர்கள் நம்புகின்றனர். மக்களது அபிப்பிராயங்களையோ அல்லது சட்டங்களையோ மாற்றுவதற்கு வன்முறையைப் பிரயோகிப்பதை அவர்கள் அங்கீகரிப்பதில்லை.

இந்த விழுமியங்களுடன், பொது நலனை நாடுவதோடு அல்லல் படுவோருக்கு கருணை காட்டுவதிலும் அவுஸ்திரேலியா்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

அவுஸ்திரேலியா்கள் மத்தியில் இறுக்கமான சமூகப் பற்றுணர்வு காணப்படுவதோடு அவர்கள் தாம் வாழும் சமுதாயத்தை முன்னேற்றி மேம்படுத்த முனைகின்றனர்.

பல அவுஸ்திரேலியா்கள் தமது நாளாந்த வாழ்வில் சமுதாயத்துக்கெனத் தமது பங்களிப்பை வழங்குகின்றனர். சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாத்தல், பொது நலனைக் கருத்திற் கொண்டு தேவையானபோது கைகொடுத்தல், இணைந்து செயற்படல் போன்றவற்றின் மூலம் இதனை அவர்கள் வெளிக்காட்டுவர்.

மற்றவர்களுக்கு, குறிப்பாக அல்லல்படுவோருக்கு உதவிக் கரம் நீட்டித் துணை நிற்கும் உறுதியான 'தோழமைப்' (mateship) பாரம்பரியம் அவுஸ்ரேலியாவில் உண்டு. இவ்வாறு துணை நிற்பவர் பெரும்பாலும் ஒரு நண்பராக இருப்பார். எனினும் அவர் ஒரு வாழ்க்கைத் துணையாகவோ, பங்காளராகவோ, சகோதரராகவோ, சகோதரியாகவோ, மகளாகவோ மகனாகவோகூட இருக்கலாம். அத்தகையவர் ஓர் அறிமுகமற்ற புதியவராகக்கூட இருக்கலாம். சமூக சேவை, தன்னார்வத் தொண்டு போன்றன பற்றிய பலமான பாரம்பரியமும் அவர்களிடத்தில் காணப்படுகிறது.

இங்கு மேலே குறிப்பிடப்பட்ட விழுமியங்கள் பல்லாண்டு காலமாக அவுஸ்திரேலிய சமுதாயத்தினரால் கலந்துரையாடப்பட்டு மேம்படுத்தப்பட்டவையாகும். வித்தியாசமான இனங்களையும் கலாசாரப் பாரம்பரியங்களையும் கொண்ட மில்லியன் கணக்கான மக்களை வெற்றிகரமாக வரவேற்றுக் குடியமர்த்தி அவர்களைச் சமூகத்தின் அங்கமாய் மாற்றுவதில் இவ்விழுமியங்கள் பெரும் துணையாய் அமைந்துள்ளன.

அவுஸ்திரேலியாவின் கலாச்சாரப் பன்முகத்தன்மையானது உயிரோட்டமுள்ள சமுதாயத்தை உருவாக்குகின்ற ஒரு சக்தியாகும். அவுஸ்திரேலிய சட்டங்களுக்கு உட்பட்ட வகையில் தத்தமது கலாசாரம் மற்றும் நம்பிக்கைகளை வெளிப்படுத்தும் உரிமை சகல அவுஸ்திரேலியா்களுக்குமுண்டு.

அதேவேளை, அவுஸ்திரேலியாவுக்கும், அதன் சட்டங்களுக்கும், விழுமியங்களுக்கும் மக்களுக்கும் அதியுயர்ந்த பற்றுறுதியைச் செலுத்தவேண்டுமென சகல அவுஸ்ரேலியா்களிடமும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# அவுஸ்திரேலியா - ஒரே பார்வையில்

## புவியியல்

உலகின் மிகப் பண்டைய நிலப்பரப்புகளில் அவுஸ்திரேலியாவும் ஒன்றாகும். மக்கள் குடியிருக்கும் உலகின் மிகப்பெரிய தீவான இது உலகின் ஆறாவது மிகப் பெரிய நாடாகும். அத்துடன் இது மிகவும் வரண்ட பூமிகளில் ஒன்றுமாகும். இதன் ஆறு விழுக்காடு நிலப்பரப்பு மட்டுமே பயிர்ச்செய்கைக்கு உகந்தது.

விசாலமான நிலப்பரப்பை உடையதால், இங்கு வருவோர் அதன் பருமனையும் ஒரு நகரத்திலிருந்து இன்னொரு நகரத்துக்குச் செல்வதற்கு எடுக்கும் நீண்ட நேர இடைவெளியையும் கண்டு வியக்கின்றனர். அவுஸ்திரேலியா கிழக்கு மேற்காக 4000கிலோ மீற்றர்களையும் வடக்கு தெற்காக 3700 கிலோ மீற்றர்களையும் கொண்டது. சிட்னியில் இருந்து பேர்த் நகருக்கு விமானம் மூலம் செல்வதற்கு சுமார் ஐந்து மணி நேரம் செல்லும்.

அவுஸ்திரேலியா அதன் மொத்தப் பரப்பளவில் (அலாஸ்கா தவிர்ந்த) ஐக்கிய அமெரிக்காவின் நிலப் பரப்புக்குச் சமமானது. இந்தியாவைப் போன்று இரண்டு மடங்கை விடப் பெரியது மற்றும் ஐக்கிய ராச்சியத்தைப் போன்று 32 மடங்கு விசாலமானது.

## மக்கள்

அவுஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகளான அபோரிஜின் எனப்படும் பழங்குடியினரும் டொரஸ் தீவக மக்களும் சுமார் 40000 முதல் 60000 வருடங்களுக்கு முன்பிருந்தே அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார்கள்.

அவுஸ்திரேலியாவில் உள்ள ஏனைய மக்கள் குடிவந்தோர் அல்லது குடிவந்தவர்களது பரம்பரையினர் ஆவர். 1788 ஆம் ஆண்டில் ஐரோப்பியர்களது குடிவரவு ஆரம்பித்ததில் இருந்து இதுவரை சுமார் 200 நாடுகளைச் சேர்ந்த மக்கள் இங்கு குடியேறியுள்ளனர்.

1945ம் ஆண்டில் அவுஸ்திரேலியாவின் சனத் தொகை சுமார் 7 மில்லியன்களாக இருந்தது. அதிலிருந்து இன்று வரை சுமார் 675000 அகதிகள் அடங்கலாக 6.5 மில்லியனுக்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்தோர் அவுஸ்திரேலியாவில் குடியேறியுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் இன்றைய மக்கள்தொகை 21 மில்லியன்களாகும். இவர்களில் 43 சதவீதமானோர் வெளிநாடுகளில் பிறந்தவர்கள் அல்லது அவர்களது பெற்றோரில் ஒருவர் வெளிநாடுகளில் பிறந்தவர் ஆவர்.

எல்லா வித மத, இன, சாதி, சமூகப் பின்னணிகளைக் கொண்டுள்ள அவுஸ்திரேலியர்கள் ஐக்கியமாகவும், சமாதானமாகவும் வாழ்கின்றனர்.

## பகிர்ந்து கொள்ளப்படுகின்ற விழுமியங்கள்

அவுஸ்திரேலியாவுக்குக் குடிவந்தவர்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமான கலாசார மற்றும் சமயப் பின்னணிகளைக் கொண்டிருந்த போதிலும் அவர்கள் ஒரே நாட்டில் குடியேறி, பரந்துபட்ட ஒரு சமுதாயத்தில் வெற்றிகரமாக இரண்டறக் கலந்துள்ளனர். மறுபுறத்தில் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார ரீதியாக அவர்கள் வழங்கிய பங்களிப்பில் அவுஸ்திரேலியா வளமடைந்துள்ளது.

இன்றைய அவுஸ்திரேலிய சமுதாயத்தின் முக்கிய சிறப்பம்சம், அங்குள்ள மக்களின் கலாசார பல்லினத் தன்மை மட்டுமன்றி, அவுஸ்திரேலியா மீதான அபரிமிதமான, அனைத்தையும் கடந்த ஒரு விசுவாசப் பற்றுறுதி மூலம் அவர்கள் ஐக்கியப்பட்டிருக்கும் விதமுமாகும். நல்ல அயலவர்களாகக் கூடிவாழ வேண்டும் என்பதற்காக அவுஸ்திரேலியர்கள் தமது தனிப்பட்ட வேறுபாடுகளை உதறித் தள்ளியுள்ளனர்.

அவுஸ்திரேலிய சட்டத்தின் வரம்புகளுக்குள் நின்று, தமது கலாசாரத்தையும் நம்பிக்கைகளையும் வெளியிடவும், அவுஸ்திரேலியாவின் தேசிய வாழ்வில் சுதந்திரமாகப் பங்கெடுக்கவும் அவுஸ்திரேலியர் அனைவரும் உரிமை கொண்டோராவர். அதேவேளை, அறிமுகம் பகுதியில் விளக்கப்பட்ட, அவுஸ்திரேலிய வாழ்க்கைமுறைக்கு ஆதாரமாக அமைகின்ற பகிர்ந்து கொள்ளப்படக்கூடிய விழுமியங்களையும் கொள்கைகளையும் பேண வேண்டும் என்றும் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கப்படுகின்றது.





## சுயாதீன தேசம்

அவுஸ்திரேலியா சக்தி வாய்ந்த பொருளாதாரத்தைக் கொண்ட சுயாதீனமான வெளியுலகை நோக்கும் ஒரு தேசமாகும். அதன் ஜனநாயக நிறுவனங்கள், கலாசார பல்லினத்தன்மை, ஆக்கபூர்வமான சர்வதேச மற்றும் பிராந்திய உறவுகள் பற்றிய பதிவுகள் என்பன உலக விவகாரங்களில் அதன் ஈடுபாட்டைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

காத்திரமான, சவால் மிக்க ஒரு சூழலில், அவுஸ்திரேலியா தனது உலகளாவிய பொறுப்புகளைக் பேணிக் கொண்டு, தனது தேசிய நலன்களை மேம்படுத்துவதற்காக இருதரப்பு, பல்தரப்பு, மற்றும் பிராந்திய உபாயங்களை மேற்கொண்டு வருகிறது.

## வலுவான பொருளாதாரம்

அவுஸ்திரேலியா, திறந்ததும், நெகிழ்ச்சியும் போட்டித் தன்மையையும் கொண்ட ஒரு சக்திமிக்க சந்தைப் பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது. அதன் ஸ்திரமானதும் நவீன நிறுவனமயமானதுமான கட்டமைப்பு, வர்த்தக நடவடிக்கைகளுக்கு நம்பிக்கையும், சர்வதேச முதலீடுகளுக்கு உற்சாகமும் அளிக்கும் சூழலையும் வழங்குகின்றது.

அவுஸ்திரேலியா ஒரு பிரதானமான பிராந்திய பொருளாதார மையமாகும். அது, நம்பிக்கைக்குரிய உள்ளூர் மற்றும் வெளிநாட்டு போக்குவரத்து அமைப்புகளையும், சர்வதேச தரத்திலான தகவல் மற்றும் தகவல் பரிவர்த்தனை தொழில்நுட்பத்தையும், சிறப்புத் திறமையும் பன்மொழிப் பாண்டித்தியமும் கொண்ட தொழிலாளர்களையும், சட்ட விதிமுறைகள் கொண்ட அமைப்பையும் கொண்டதாய் விளங்குகிறது. அவுஸ்திரேலியாவின் பங்குச் சந்தையானது (stock exchange), சந்தை மூலதனம் மூலம் பட்டியலிடப்பட்ட உலகின் எட்டாவது பங்குப் பரிவர்த்தனையாகும்.

உலகளாவிய வர்த்திகத்தில் அவுஸ்திரேலியா குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கும் ஒரு நாடாகும். அதன் சரக்குகள் மற்றும் சேவைகளின் இரு தரப்பு வர்த்தகம் $400 பில்லியன்களுக்கும் அதிகம் என மதிப்பிடப்படுகிறது. இது உலக வர்த்தகத்தில் சுமார் ஒரு விழுக்காட்டிற்குச் சமமாகும். அவுஸ்திரேலியாவின் பிரதான வர்த்தகப் பங்காளி ஜப்பான் ஆகும். அதனையடுத்து சீனா, அமெரிக்கா, சிங்கப்பூர், பிரித்தானியா கொரியக் குடியரசு என்பன இடம் வகிக்கின்றன.

### இணையத்தின் மூலம் தகவல்

- அவுஸ்திரேலிய புள்ளிவிபர பணியகம் www.abs.gov.au
- அவுஸ்திரேலிய அரசாங்க தகவல் மற்றும் சேவைகள் www.australia.gov.au
- அவுஸ்திரேலிய அரசாங்க பொழுதுபோக்கு மற்றும் கலாசார நுழைவாயில் www.cultureandrecreation.gov.au
- வெளிநாட்டு விவகாரங்கள் மற்றும் வர்த்தக திணைக்களம் www.dfat.gov.au/geo/australia

## சில தகவல் விவரங்கள்

| | |
|---|---|
| தேசிய தலைநகரம் | கன்பெரா |
| நிலப்பரப்பு<br>பிரதான நிலத்தின் கடற்கரையோரம்<br>நாட்டிற்கு அப்பால் உள்ள தீவுகளையும் உள்ளடக்கிய கரையோரம் | 7.74 மில்லியன் சதுர கிலோ மீற்றர்கள்<br>35877 கிலோ மீற்றர்<br>59736 கிலோமீற்றர் |
| பயிரிடத் தகுந்த பூமியின் சதவீதம் | 6 விழுக்காடு |
| சனத்தொகை | 21 மில்லியன் |
| வெளிநாடுகளில் பிறந்தோர் சதவீதம் | சுமார் 22 விழுக்காடு |
| மொழி | ஆங்கிலம் |
| வீட்டில் இரண்டாம் மொழியொன்று பேசுவோர் சதவீதம் | 15 விழுக்காடு |
| பணம் | அவுஸ்திரேலிய டாலர் (A$) |
| பிரதான வர்த்தகப் பங்காளிகள் | ஜப்பான், சீனா, ஐக்கிய அமெரிக்கா, சிங்கப்பூர், ஐக்கிய ராச்சியம், கொரிய குடியரசு. |
| தொழிலாளர் படை | 10.28 மில்லியன் |
| நேரம் - அவுஸ்திரேலியாவில் மூன்று தளநேரப் பகுதிகள் உள்ளன<br><br>பகற்காலத்தை சேமிக்கும் நேரமாற்றம் (தளநேரம் + 1) | கிழக்கு: கிறீன் விச் நேரம் + 10<br>மத்திய: கிறீன் விச் நேரம் + 9.5<br>மேற்கு: கிறீன் விச் நேரம் + 8<br><br>பகற்காலத்தை சேமிக்கும் நேரமாற்றம் நியூ சவ்த் வேல்ஸ், தென் அவுஸ்திரேலியா, தஸ்மேனியா, விக்டோரியா மற்று மேற்கு அவுஸ்திரேலியா அகியவை அக்டோபர் ஆரம்பத்தில் அல்லது இறுதியில் இருந்து மார்ச் முடியும் வரை கடைப்பிடிக்கின்றன. |
| **முக்கிய தினங்கள்**<br>தேசிய தினம் - அவுஸ்திரேலிய தினம்<br>ஈஸ்டர் பண்டிகை<br><br>அன்செக் தினம்<br>நினைவுத் தினம்<br>கிறிஸ்மஸ் தினம் | <br>ஜனவரி 26<br>ஒவ்வொரு வருடமும் மார்ச் இறுதிக்கும் ஏப்ரல் இறுதிக்கும் இடையில்<br>ஏப்ரல் 25<br>நவம்பர் 11<br>டிசம்பர் 25 |





# தேசிய அடையாளங்கள்

## அவுஸ்திரேலியாவின் பெயர்

'தெற்கைச் சார்ந்த' என்று பொருள் படும் *அவுஸ்திரேலிஸ் (Australis)* எனும் லத்தீன் மொழிச் சொல்லில் இருந்து அவுஸ்திரேலியா எனும் பெயர் உருவெடுக்கிறது. கண்டறியப்படாத பாரிய தெற்கு நிலப்பரப்பு *(Terra Australis Incognita)* ஒன்று இருப்பதாக ஒரு பழங்கதை பல நூற்றாண்டு காலமாகவே நிலவி வந்தது. இப்பிராந்தியத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கடற் பிரயாணங்கள் பற்றிய விளக்கங்களில் இது பற்றி குறிப்பிப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவைச் சுற்றி கடற்பிரயாணம் மேற்கொண்ட மத்திவ் பிலிண்டர்ஸ் (Matthew Flinders) தனது அனுபவங்களை *'தெற்கு நிலத்திற்கோர் கடற்பயணம்' (A Voyage to Terra Australis)* என்ற பெயரில் 1814 இல் வெளியிட்டதில் இருந்து அவுஸ்திரேலியா எனும் பெயர் பிரபல்யம் அடையத் தொடங்கியது. அவர் அவுஸ்திரேலியா எனும் பதத்தைப் பிரயோகித்திருந்தார். அதன் பிறகு ஆளுநர் லெக்லான் மக்குரீ (Lachlan Macquarie) தனது உத்தியோகபூர்வ அறிக்கைகளில் இப் பெயரைப் பாவித்ததோடு இப்பெயரை ஏற்றுக் கொள்ளவும் சிபார்சு செய்தார். இந்தக் கண்டம் உத்தியோகபூர்வமாக அவுஸ்திரேலியா என்று பெயரிடப்படுவதற்கு பிரித்தானியக் கடற்துறை நிர்வாகம் 1824 இல் அங்கீகாரம் வழங்கியது.

## அவுஸ்திரேலியாவின் தேசியக் கொடி

அவுஸ்திரேலியாவின் தேசியக் கொடி முதன் முறையாக 1901ம் ஆண்டு செப்டம்பர் 3 ஆம் திகதியன்று மெல்போர்னில் ஏற்றி வைக்கப்பட்டது. கடும் நீலப் பின்னணியைக் கொண்ட இக் கொடியின் இடது மேல் மூலையில், அவுஸ்திரேலியாவில் பிரித்தானியக் குடியேற்ற வரலாற்றை அங்கீகரிக்கும் வகையில், பிரித்தானியக் கொடியின் அடையாளம் காணப்படுகிறது.

தெற்குச் சிலுவை நட்சத்திரக் கூட்டத்தின் ஐந்து நட்சத்திரங்கள், தென்னரைக் கோளத்தில் அவுஸ்திரேலியாவின் புவியியல் நிலையை எடுத்துக் காட்டுகின்றன. 1908 இல் ஆறு மாநிலங்களைக் குறிக்கும் ஆறு முனை நட்சத்திரம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக ஏழு முனை நட்சத்திரம் உள்ளடக்கப்பட்டது. ஏழாவது முனை இரண்டு எல்லைப் பிராந்திகளையும் குறிக்கும்.

அவுஸ்திரேலியாவின் ஒவ்வொரு மாநிலமும் எல்லைப் பிராந்தியமும் தமக்கேயுரிய கொடிகளையும் கொண்டுள்ளன.

## பொதுநலவாய மரபுரிமைச் சின்னம் (Commonwealth Coat of Arms)



அவுஸ்திரேலிய பொதுநலவாய அரசின் அதிகாரத்தையும், தன்மையையும் அடையாளப்படுத்தும் பொதுநலவாய மரபுரிமைச் சின்னம், 1912 இல் ஐந்தாவது ஜோர்ஜ் மன்னரால் வழங்கப்பட்டது. அவுஸ்திரேலியா ஆறு மாநிலங்களைக் கொண்ட சமஷ்டி என்பதைக் காட்டும் வகையில் அவற்றின் சின்னங்களைக் கொண்ட கேடயம் அதில் உண்டு. தங்க வொட்ல் (அவுஸ்திரேலியாவின் மலர்ச் சின்னம்), கங்காரு, எமுயு பறவை என்பவற்றையும் அதில் காணலாம்.

## தேசிய நிறங்கள்

1984 ஏப்ரலில் இருந்து அவுஸ்திரேலியாவின் தேசிய நிறங்களாக பச்சையும் தங்க நிறமும் இருந்துவருகின்றன.

## மலர்ச் சின்னம்

1988ம் ஆண்டில் இருந்து *'ஆகெசியா பிக்நாந்தா' (Acacia pycnantha)* எனும் பெயரைக் கொண்ட தங்க வொட்ல், அவுஸ்திரேலியாவின் மலர்ச் சின்னமாக இருந்து வருகிறது.

## தேசிய மாணிக்கக் கல்

அவுஸ்திரேலியாவின் தேசிய மாணிக்கமாக 1993இல் ஓபல் (Opal) பிரகடனப்படுத்தப்பட்டது.

## விலங்குச் சின்னம்

அவுஸ்திரேலியாவின் தேசிய விலங்குச் சின்னமாக கங்காரூவை அநேகா் கருதுகின்றனா். எனினும் அவ்வாறு என்றுமே உத்தியோகபூா்வமாக பிரகடனப்படுத்தப்படவில்லை.

## தேசிய தினம்

முதலாவது ஆளுநா் ஆா்தா் பிலிப் 1788 இல் சிட்னி சிறுகுடாவில் வந்திறங்கிய நிகழ்வை நினைவூட்டும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 ஆம் திகதி அவுஸ்திரேலிய தினமாகக் கொண்டாடப்படுகிறது.

## தேசிய கீதம்

அட்வான்ஸ் அவுஸ்திரேலியா ஃபெயாா் (Advance Australia Fair) எனும் கீதத்தை 1878 இல் பீடா் டொட்ஸ் மெக்கோா்மிக் என்பவா் இயற்றினாா். 1970 களில் அது தேசிய இசையாகி பின்னா் 1984 ஏப்ரலில் தேசிய கீதமாக அங்கீகாரம் பெற்றது.

தேசிய கீதத்தின் வாசகங்கள் வருமாறு:

*Australians all let us rejoice,*
*For we are young and free;*
*We've golden soil and wealth for toil;*
*Our home is girt by sea;*
*Our land abounds in nature's gifts*
*Of beauty rich and rare;*
*In history's page, let every stage*
*Advance Australia Fair.*
*In joyful strains then let us sing,*
*Advance Australia Fair.*

*Beneath our radiant Southern Cross*
*We'll toil with hearts and hands;*
*To make this Commonwealth of ours*
*Renowned of all the lands;*
*For those who've come across the seas*
*We've boundless plains to share;*
*With courage let us all combine*
*To Advance Australia Fair.*
*In joyful strains then let us sing,*
*Advance Australia Fair.*

## அவுஸ்திரேலிய விருதுகளும் கௌரவங்களும்

தேசத்துக்கும் மனித சமுதாயத்துக்கும் ஆற்றப்படும் சேவைகளை அங்கீகரிக்கும் வகையிலமைந்த 'அவுஸ்திரேலிய ஆா்டா்' (Order of Australia), 'அவுஸ்திரேலிய வீரச் சின்னம்' (Australian Bravery Decorations) மற்றும் 'தேசிய விருது' (National Medal) போன்றன 1975 இல் உருவாக்கப்பட்டதில் இருந்து அவுஸ்திரேலியாவின் தனித்துவமான கௌரவிப்பு முறையும் ஆரம்பமாகியது.

அவுஸ்திரேலியாவின் கௌவிரக்கும் முறை அரசியல் செயல்வாக்கோ வேறு தலையீடுகலோ அற்றது. இந்த கௌரவத்தைப் பெற எந்த அவுஸ்திரேலியக் குடிமகனையும் சமூகத்திலுள்ள எவரும் சிபாா்சு செய்யலாம். சுதந்திரமான ஒரு குழு தெரிவுகளைச் செய்யும்.

இத்தகைய கௌரவங்கள் மூலம், முன்னுதாரணங்கள் அடையாளப்படுத்தப்பட்டு, தேசிய அபிலாசைகளும், இலட்சியங்களும் தரங்களும் தூண்டப்பட்டு வலியுறுத்தப்படுகின்றன. மாற்றம் ஏற்படுத்துகின்ற அல்லது தனது முழு முயற்சியின் மூலமும் சாதனை புரிகின்ற அல்லது ஏனையவருக்குப் பணிபுரிகின்றவா்களை இனம் கண்டு, கொண்டாடி அவா்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அவுஸ்திரேலியா இந்த கௌரவங்களை வழங்குகிறது.

### இணையத் தகவல்

- அவுஸ்திரேலிய விருதுகள் மற்றும் சின்னங்கள் www.itsanhonour.gov.au
- பிரதம மந்திரியின் இலாகா மற்றும் மந்திரி சபை www.dpmc.gov.au


DARWIN
NORTHERN TERRITORY
QUEENSLAND
WESTERN AUSTRALIA
SOUTH AUSTRALIA
BRISBANE
NEW SOUTH WALES
PERTH
SYDNEY
ADELAIDE
CANBERRA
ACT
VICTORIA
MELBOURNE
TASMANIA
HOBART

# தேசமும் மக்களும்

அவுஸ்திரேலியா ஒன்றுக்கொன்று முரண்பட்ட அம்சங்கள் பலவற்றைக் கொண்ட தனித்துவமான ஒரு நாடு.

உள்ளக பிரதேசங்கள் (outback) என அழைக்கப்படும் நகரத்தில் இருந்து தூரத்தில் அமைந்துள்ள கிராமியப் பகுதிகள், அவுஸ்திரேலிய வரலாற்றிலும் பழங்கதைகளிலும் முக்கிய இடம்பெறுகின்றன.

எனினும் அவுஸ்திரேலியாவின் 21 மில்லியன் சனத்தொகையில் 75 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் நகரங்களிலும் குறிப்பாகத் தலைநகரங்களிலும், பசுமையான கிழக்குக் கரையோரத்தை அண்டிய சமவெளியிலும், தென்கிழக்குக் கரையோரத்திலும் வாழ்கின்றனர்.

அவுஸ்திரேலியா ஒரு ‘இளம்’ நாடு எனக் கருகப்பட்டாலும் கூட, உலகின் ஏனைய பல நாடுகள் போல அதன் சராசரி வாழும் வயதெல்லை அதிகரித்துக்கொண்டு செல்வதனால், வயதானோரின் சனத்தொகையும் அதிகறித்துச் செல்கிறது. 65 வயதுக்கு மேற்பட்டோரின் சனத்தொகை 2005 இல் இருந்த 13.1 விழுக்காடில் இருந்து 2050 ஆகும் போது 25.7 விழுக்காடு ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அவுஸ்திரேலியாவின் மாநில மற்றும் எல்லைப் பிராந்திய சனத்தொகைப் பரம்பல்

| பிராந்தியம்/மாநிலம் | சனத்தொகை (மில்லியன்) | தலைநகரம் | தலைநகர சனத்தொகை (மில்லியன்) |
|---|---|---|---|
| நியூ சவ்த் வேல்ஸ் | 6.55 | சிட்னி | 4.12 |
| விக்டோரியா | 4.93 | மெல்பன் | 3.59 |
| குயீன்லாந்து | 3.90 | பிரிஸ்பன் | 1.76 |
| மேற்கு அவுஸ்திரேலியா | 1.96 | பேர்த் | 1.45 |
| தெற்கு அவுஸ்திரேலியா | 1.51 | அடெலைய்ட் | 1.11 |
| தஸ்மேனியா | 0.48 | ஹோபார்ட் | 0.20 |
| அவுஸ்திரேலிய தலைநகர எல்லைப் பிராந்தியம் | 0.32 | கன்பெரா | 0.32 |
| வட எல்லைப் பிரந்தியம் | 0.19 | டார்வின் | 0.11 |

(மூலம்: அவுஸ்திரேலிய புள்ளிவிபரங்கள் பணிமனை)

## தட்பவெப்ப நிலை

அவுஸ்திரேலியா உலகின் அதிவரண்ட நாடுகளில் ஒன்றாகும். அதன் அனேக உள்ளகப் பகுதிகள் தட்டையான, தரிசான, சன அடர்த்தி குறைந்த பகுதிகளாகும்.

எனினும், வட அவுஸ்திரேலியாவின் பெரும் பகுதி அயனமண்டல காலநிலையைக் கொண்டது. குயீன்ஸ்லாந்தின் சில பகுதிகள், மேற்கு அவுஸ்திரேலியாவின் வட பகுதி, வடக்குப் பிராந்தியம் என்பன ஜனவரி முதல் மார்ச் வரையிலான மாரிகாலத்தில் பருவ மழையை ஒத்த மழை வீழ்ச்சியைப் பெறுகின்றன.





அவுஸ்திரேலியா ஒரு புறத்தில் உறை பனியையும் மறுபுறத்தில் அனல் தகிக்கும் வெயிலையும் என பல்வேறு தட்பவெப்ப நிலைகளையும் அனுபவிக்கும் அளவுக்கு விசாலமான நாடாகும்.

தஸ்மேனியாவின் பகுதிகளும், அவுஸ்திரேலிய பெருநிலப் பரப்பின் தென்கிழக்கு மேட்டு நிலங்களை அண்டிய அல்பைன் பகுதிகளும் அதிகம் குளிரான பிரதேசங்களாகும். அவ்வாறே கண்டத்தின் மத்திய மேற்குப் பகுதியில் அதிகூடிய வெப்பப் பகுதிகள் உள்ளன.

அவுஸ்திரேலியாவின் பருவங்கள் வட அரை கோளத்தில் இருப்பதற்கு முற்றிலும் முரணானதாகும். கோடை காலம் டிசம்பர் முதல் பெப்ரவரி வரையும், இலையுதிர் காலம் மார்ச் முதல் மே வரையும், குளிர்காலம் ஜுன் முதல் ஆகஸ்ட் வரையும், வசந்த காலம் செப்டம்பர் முதல் நவம்பர் வரையிலும் காணப்படும்.

அதி குளிர்ந்த சராசரி வெப்ப நிலை ஜுலையில் வரும். தெற்கு அவுஸ்திரேலியாவின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர சராசரி வெப்ப நிலை 10 மற்றும் 20 பாகை செல்லியஸ் (50 மற்றும் 68 பாகை F) ஆகவும், வட அயன மண்டலத்தில் அதிகூடியது 20 ஆகவும் அதி குறைந்தது 30 பாகை செல்லியஸாகவும் (70 மற்றும் 80 பாகை F) காணப்படும். கரையோரப் பிரதேசங்களில் உறை பனி பெய்யும் அளவுக்கு வெப்பநிலை குறைவது அரிதாகும். ஆனால், உள்ளகப் பகுதிகள் பலவற்றில் குளிர்காலத்தில் நள்ளிரவுகளில் சிறிதளவு உறை பனி பெய்வதுண்டு. அல்பைன் மலைப் பகுதிகளில் வெப்பநிலை சாதாரணமாக 0 பாகை செல்சியஸை விடக் (32F) குறைந்த அளவில் காணப்படும். வருடத்தின் பல மாதங்களுக்கு 1500 மீட்டருக்கு மேற்பட்ட உயரமுடைய மலைப் பகுதிகளில் பனிப்படலம் உறைந்து காட்சியளிக்கும்.

தெற்கு அவுஸ்திரேலிய வெப்பம் கூடிய மாதங்கள் ஜனவரியும் பெப்ரவரியுமாகும். எனினும் வடக்கு அயன மண்டலத்தில் நவம்பரும் டிசம்பரும் அதிகம் சூடான காலமாகும். சராசரி பகல்நேர வெப்பநிலை பெரும்பாலான உள்ளக பகுதிகளில் 30 பாகை செல்சியஸிற்கு மேலாகும் (80 அல்லது 90 பாகை F) ஆகும். இது மேற்கு அவுஸ்திரேலியாவின் பகுதிகளில் 40 பாகை செல்சியஸ் (104 F) வரை அதிகரித்துச் செல்லும். தெற்குக் கரையோரங்களிலும் மேட்டு நிலப் பகுதிகளிலும் தஸ்மேனியாவிலும் அவை குளிராகவே (20s C/70s அல்லது 80s F) காணப்படும்.

### இணையத்தில் தகவல் பெற

- வானிலைப் பணிமனை www.bom.gov.au

## சுற்றுச் சூழல்

அவுஸ்திரேலியாவானது ஒன்றுக்கொன்று வேறுபட்ட நிலவமைப்புகளையும் அசாதாரணமான தாவர, உயிரின வகைகளையும் கொண்டது. இந்தக் சூழலையும் அதன் தனித்துவமான, வளமிக்க உயிரியல் வேறுபாடுகளையும் பேணிப் பாதுகாக்க நாம் பற்றுறுதி கொண்டுள்ளோம்.

அவுஸ்திரேலியக் கண்ட நிலப்பரப்பில் சுமார் 10 விழுக்காடு (சுமார் 77 மில்லியன் ஹெக்டயார்) பாதுகாக்கப்பட்ட பிரதேசமாகும். வடகுயீன்ஸ்லாந்து கரையோரத்தை அண்டிய கிரேட் பெரியர் கடற்பாறைப் பூங்காப் பகுதி அடங்க சுமார் 65 மில்லியன் ஹெக்டயார் கடல் பகுதியும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் பதினேழு பகுதிகள் உலக பாரம்பரியங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. கிரேட் பெரியர் கடற்பாறை, தஸ்மேனிய காடுகள், குயீன்ஸ்லாந்தின் மேற்குக் காடுகள், கக்காடு தேசிய வனம், வட எல்லைப் பிராந்திய உலுரு காட்டா ஜூட்டா தேசிய வனம், அவுஸ்திரேலிய மத்தியில் கிழக்காக அமைந்துள்ள மழைக்காடுகள் மற்றும் லோர்ட் ஹோவே தீவுக் கூட்டம் என்பன அவற்றில் சில.

### இணையத்தில் தகவல் பெற

- சூழல் மற்றும் நீர் வளங்கள் இலாகா www.environment.gov.au

# ஆரம்ப அவுஸ்திரேலியர்கள்

அவுஸ்திரேலியாவில் ஆரம்பத்தில் வாழ்ந்து வந்த பூர்வீகக் குடிகள் அபோரிஜினிகள் எனப்படும் பழங்குடிகளும் டொரஸ் நீரிணைத் தீவக மக்களுமாவர். இவர்கள் சுமார் 40000 வருடங்களுக்கு மேலாக அதாவது சுமார் 60000 வருடங்களுக்கு முன்னர் இருந்தே இங்கு வாழ்ந்து வந்துள்ளனர்.

முதலாவது ஐரோப்பிய குடியேறிகள் 1788 இல் குடியேறிய போது அவுஸ்திரேலியக் கண்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் ஏறத்தாழ 750000 பூர்வீக மக்கள் பரந்து வாழ்ந்ததாகக் கணிக்கப்படுகிறது.

பூர்வீக சுதேச அவுஸ்திரேலியர்கள் தமக்கேயுரிய தனித்துவமான ஆன்மீக நம்பிக்கைகளையும், பூமி மீதான பக்தியும், வளமானதும் வித்தியாசமானதுமான கலாசாரமும், உலகின் மிகப்பழைமை வாய்ந்தவற்றில் ஒன்றெனக் கருதப்படும் தொடர்ந்தும் உயிர்வாழும் கலைப் பாரம்பரியத்தையும் கொண்டவர்களாவர்.

அவர்கள் வாழ்ந்த இடத்தைப் பொறுத்து அவர்களது வாழ்க்கை முறை, கலாசார மரபுகள் மற்றும் மொழிகள் வேறுபட்டுக் காணப்பட்டன. ஐரோப்பியர்களது குடியேற்றம் தொடங்கிய காலத்தில் வாழ்ந்த சுதேச அவுஸ்திரேலியர்கள் மத்தியில் சுமார் 700 மொழிகளும், மொழிவழக்குகளும் புழக்கத்தில் இருந்தன.

கடற்பிரயாணிகளுடனும், வர்த்தகர்களுடனும் ஓரளவுக்குத் தொடர்பு வைத்திருந்த போதிலும் பூர்வீக அவுஸ்திரேலியர்கள், ஐரேப்பியரின் வருகை வரை பெரும்பாலும் புறத்தொடர்புகள் அற்ற நிலையிலேயே வாழ்ந்து வந்தனர்.

ஐரோப்பியர்களுக்கும், சுதேச பூர்வீகக் குடிகளுக்கும் இடையிலான ஆரம்பத் தொடர்புகளின் போது அவர்களது பாரம்பரிய வாழ்க்கை முறைகளும் பழக்கவழக்கங்களும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின. 19 ஆம் மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் சுதேச மக்களின் சனத்தொகை பாரிய அளவில் வீழ்ச்சி கண்டது.

1960கள் வரை பூர்வீக அவுஸ்திரேலிய கலாசாரத்துக்கும் வரலாற்றிற்கும் அவ்வாறே அவர்களுக்குரிய குடியுரிமையுடனான உரிமைகள், கடமைகள் என்பவற்றிற்கும் எந்த அங்கீகாரமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக, பெடரல் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை அனைத்து பூர்வீகக் குடிகளுக்கும் 1965 வரை வழங்கப்படவில்லை.

எனினும் 1967 இல் நடந்த மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் போது, சுதேச அவுஸ்திரேலியருக்காக சட்டம் வகுக்கின்ற அதிகாரத்தை அவுஸ்திரேலிய அரசாங்கத்துக்கு வழங்குவதற்கும் மற்றும் தேசிய குடிசனக் கணக்கெடுப்பில் அவர்களையும் சேர்த்துக் கொள்ளும் பிரேரணைக்கும் ஆதரவாக 90 சதவீதத்துக்கும் மேலான அவுஸ்திரேலியர்கள் வாக்களித்தனர். பூர்வீக மற்றும் ஏனைய அவுஸ்திரேலியர்களின் பகீரதப் பிரயத்தனங்களின் விளைவாகவே இந்த வாக்கெடுப்பில் அமோக வெற்றி கிடைக்கப் பெற்றது. சுதேச அவுஸ்திரேலியர்களின் வாழ்க்கை நிலைகளை மேம்படுத்துவதற்காக அவுஸ்திரேலிய அரசாங்கம் நேரடியாக செயற்படுவதைக் காண்பதற்கு அவுஸ்திரேலிய மக்கள் கொண்ட ஆர்வத்துக்குக் கிடைத்த பலமான ஆணையாகவே இது நாடெங்கும் நோக்கப்பட்டது.

இன்று அவுஸ்திரேலியாவின் பூர்வீக சுதேச மக்களின் சனத்தொகை சுமார் 483000 அல்லது மொத்த சனத்தொகையில் 2.3 விழுக்காடு ஆகும். அவுஸ்திரேலியாவின் தேசிய அடையாளத்தில் பூர்வீகக் குடிகளின் கலாசார அம்சங்கள் இன்றியமையாத இடத்தை வகிக்கின்றன. கலை, செய்தி ஊடகங்கள், உயர்கல்வி, விளையாட்டு மற்றும் வியாபாரம் முதலிய பல்வேறுபட்ட துறைகளில் பூர்விகக் குடியினரும், டொரஸ் தீவக மக்களும் கணிசமான பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

சில பகுதிகளில் இன்னும் காணப்படுகின்ற உயர்வுதாழ்வு பாரபட்சங்களை முறியடிப்பதற்கு சுதேச மக்களுக்கு உதவும் வகையிலான திட்டங்களையும், கொள்கைகளையும் அவுஸ்திரேலிய அரசாங்கம் மேற்பார்வை செய்து வருகின்றது. சுகாதாரம், கல்வி, வீட்டு வசதி, தொழில் வாய்ப்புக்கள் போன்றவற்றில் அவர்களது அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டதாக இத்திட்டங்கள் உள்ளன.

பூர்வீக மக்கள் தாம் பாரம்பரியமாகத் தொடர்புபட்டுள்ள நிலங்களைப் பெறுவதை அல்லது தமது பொருளாதார, கலாசார, சமூக அபிவிருத்திக்கு துணைபுரியக் கூடிய விதத்திலான நிலங்களையும் சொந்தமாகப் பெறுவதை உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் பற்றுறுதி கொண்டுள்ளது. அவுஸ்திரேலியாவின் 16 விழுக்காடு நிலப்பரப்பை பூர்வீகக் குடிகள் தமது சொந்தத்தில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். அவற்றில் அனேகமானவை மிகத் தூரப்பிரதேசங்களாகும்.







### இணையத்தில் தகவல் பெற

- குடும்பங்கள், சமூக சேவைகள் மற்றும் பூர்வீகக் குடிகள் விவகாரத் திணைக்களம் www.facsia.gov.au
- அவுஸ்திரேலியப் பழங்குடிகள் மற்றும் டொரஸ் நீரிணைத் தீவக மக்கள் ஆய்வு நிலையம் www.aiatsis.gov.au

## ஆரம்ப ஐரோப்பியர்கள்

ஹாலந்து, போர்த்துக்கேய, ஸ்பானிய கடற்பிரயாணிகள் கண்டறியப் படாத தென்னகத்தின் *(Terra Australis Incognita)* வெவ்வேறு கரையோரப் பகுதிகளைக் கண்ணுற்றதாக 1600களில் இருந்தே கூறிவந்தனர்.

ஜேம்ஸ் குக் எனும் ஆங்கிலேயர் 1770இல் தனது என்டேவர் எனும் பெயர் கொண்ட கப்பலில் அவுஸ்திரேலியக் கிழக்குக் கரையில் பயணித்து அப்பிரதேசத்தை பிரித்தானியாவின் முடிக்குரிய பூமியாகக் கோரினார். இந்தப் புதிய குடியேற்றத்தை தமது தண்டணைக் கைதிகளை அனுப்புவதற்குப் பொருத்தமான தொலைதூரக் காவல் அரணாக உபயோதிப்பதற்கு பிரித்தானியா பின்னர் தீர்மானித்தது.

சிட்னி துறைமுகத்துக்கு 1788 ஜனவரி 26ம் திகதி வந்தடைந்த 11 கப்பல் தொகுதியுடன் ஐரோப்பியர்களது குடியேற்றம் ஆரம்பித்தது. முடிக்குரிய கடற்படையில் கப்டனாக இருந்த ஆர்தர் பிலிப் தலைமையில் வந்த முதற் கப்பல் தொகுதியில் குற்றவாளிகள் உட்பட சுமார் 1500 பேர் இப்புதிய குடியேற்றத்திற்குக் கொண்டு வரப்பட்டனர்.

'நிவ் சவுத் வேல்ஸ் கொலனி' என அப்போது அழைக்கப்பட்ட அவுஸ்திரேலியப் பெருநிலத்திற்கு முதலாவது ஆளுநரானார் பிலிப்.

அத்தியாவசியப் பொருட்களது பற்றாக்குறையால் குடியேற்றத்தின் ஆரம்ப ஆண்டுகள் பட்டினிக்கும் பஞ்சத்துக்கும் எதிரான போராட்டமாகவே கழிந்தன. இறுதியில் பொருட்களை ஏற்றிக் கொண்டு கப்பல்கள் வந்தடைந்ததும் நிலைமைகள் சீரடைந்தன. 1792 இல் கப்டன் பிலிப் அங்கிருந்து திரும்பிச் செல்லும் போது முதற் குடியேறிகள் வசித்த கூடாரங்கள் ஆரம்பகாலக் கட்டுமாணங்களாகப் பரிணாமம் அடைந்து சிட்னி நகரது முதல் வடிவம் உருப்பெற்றிருந்தது.

சில வருடங்களுக்குள்ளாகவே, சிட்னி துறைமுகமானது, தூர இடங்களான ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்தும் கப்பல்கள் வந்து செல்கின்ற சுறுசுறுப்பான துறைமுகமாக மாறியது. குடியேற்றங்கள் உட்பகுதிக்கும் பரமெட்டா வரை விசாலித்ததால் 1800 ஆகும் போது சனத்தொகை 5000 ஆக உயர்ந்தது.

1810 முதல் 1821 வரை லாக்லன் மெக்காரி (Lachlan Macquarie) என்பவர் ஆளுநராக வந்தார். அவுஸ்திரேலிய ஆரம்பகால வரலாற்றில் அவர் முக்கியமான தலைவர்களில் ஒருவராவார். குற்றவாளிகளின் தண்டணைக் கூடம் என்ற நிலையில் இருந்து குற்றவாளிகளின் உழைப்பை ஆதரவாய்க் கொண்ட சுதந்திர வர்த்தக முயற்சிகள் கொண்ட குடியேற்றமாக அது மாறியது.

1820ம் ஆண்டு ஆகும்போது 30000 குற்றவாளிகளும் சுயவிருப்பில் குடியேறுவோர் 4500 பேரும் இக்காலனியில் வந்து குடியேறினர். சுதந்திரமாகக் குடியேறியோர் பண்ணைகளையும் வியாபார முயற்சிகளையும் தொடங்கினர். காலனி வளர்ச்சி பெற்றது. குற்றவாளிகளின் ஆரம்ப நாட்கள் மிகவும் கடினமாக இருந்த போதிலும் வியாபாரத்திலும், ஏனைய தொழில் துறைகளிலும் அவர்களில் பலருக்கு இருந்த திறமை மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றின் பிரதிபலனாக பல குற்றவாளிகள் கண்ணியமான அந்தஸ்துகளைப் பெறலாயினர். 1788இல் தொடங்கி இறுதியாக 1868ம் ஆண்டு குற்றவாளிகளை நாடுகடத்துதல் கைவிடப்பட்ட வரையான காலப்பகுதியில் ஆண்களும் பெண்களுமாக 160000 தண்டனைக் கைதிகள் இங்கு கொண்டுவரப்பட்டனர்.

குடியேற்றத்தின் ஆரம்ப வருடங்களில் கண்டத்தின் உட்பகுதி பற்றியோ நீண்ட விசாலமான கரையோரம் பற்றியோ யாருக்கும் அதிகம் தெரிந்திருக்கவில்லை. பயிர்ச் செய்கைக்கும், ஆடுகளை மேய்க்கவும், நல்ல குடிநீரைப் பெறவும், மற்ற குடியேறிகளை அமர்த்தவும் புதிய நிலப்பரப்புகளைக் கண்டுகொள்ள வேண்டிய அழுத்தம் ஏற்பட்டது.

இதனால், பலரும் ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டு வடக்குப் பக்கமாகவும் தெற்குப் பக்கமாகவும் கரையோரமாக கரடுமுரடான பகுதிகளைத் தாண்டிப் பயணித்தனர். மேற்குத் திசையில் காணப்பட்ட 'பாரிய பிரிகோடு' (the Great Dividing Range) என அழைக்கப்பட்ட மலைத் தொடரை ஊடறுத்துப் பயணிக்க இன்னும் சிலர் முயற்சி செய்தனர். அதனையடுத்து மற்றும் சிலர் அவுஸ்திரேலியாவின் பரீட்சயமற்ற வறண்ட நுல்லபோர் (Nullarbor) பீடபூமி மற்றும் மத்திய, வடமேற்கு அவுஸ்திரேலியா போன்ற உட்பிரதேசங்களை நோக்கிப் பயணித்தனர். பலர் இப்பிரயாணங்களின் போது மாண்டு போயினர்.

தொடர்ந்து வந்த மூன்று தசாப்தங்களில் மேற்படி உள்ளக ஆய்வுகளில் ஈடுபட்டோரது அடிச் சுவடுகளைப் பின்பற்றி குடியேறிகள் நாட்டின் உட்புறமாக நகர்ந்து இக்கண்டத்தின் மனித வாழ்வுக்கு உகந்த அநேக பகுதிகளில் பரந்து குடியேறினர். வென் டய்மனின் பூமி (தஸ்மேனியா) 1825 இல் தனியான காலனியாக மாறியது. குயீன்ஸ்லாந்து, விக்டோரியா, தென் அவுஸ்திரேலியா மற்றும் மேற்கு அவுஸ்திரேலியா என இன்று அறியப்படும் இடங்களில் புதிய குடியிருப்புகள் உருவாகின.

கம்பளிக் கைத்தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சியும் 1851 இல் நிவ் சவுத் வேல்சிலும் விக்டோரியாவிலும் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டமையும் சுய விருப்பில் அவுஸ்திரேலியாவிற்குக் குடியேற வருவோரின் தொகையைப் பாரிய அளவில் பெருக்கிவிட்டது.

1851 இல் 430000 ஆக இருந்த அவுஸ்திரேலியாவின் மொத்த சனத்தொகை 1871 ஆகும் போது 1.7 மில்லியன் ஆக மும்மடங்காகியது. இவர்களில் அதிகமானோர் பிரித்தானியர், ஆனாலும் அமெரிக்கக் கண்ட நாடுகள், பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, போலந்து மற்றும் ஹங்கேரி போன்ற நாடுகளைச் சேர்ந்தோடும் அவர்களுள் அடங்கினர். தங்கம் தேடி ஏறத்தாழ 40000 சீனர் இங்கு வந்து குடியேறினர். பிரித்தானியருக்குப் பிறகு ஒரே தடவையில் பெருந்தொகையினர் வந்தது இதுவேயாகும்.

## ஒரு தேசத்தின் உதயம்

நிவ் சவுத் வேல்ஸ் குடியேற்றம் ஆரம்பத்தில் ஏறத்தாழ கண்டத்தின் கிழக்குப் பிரதேசம் முழுவதையும் ஆக்கிரமித்திருந்தது. படிப்படியாக, வேறு குடியேற்றங்களும், மூலக் குடியேற்றத்தில் இருந்து வேறுபட்டு தனித்தனி குடியேற்றங்களாக உருவெடுக்கலாயின.

1852ம் ஆண்டில் புதிய குடியேற்றங்களுக்கு சுயாதிக்க அதிகாரம் வழங்கப்பட்டது. எனினும் ஒவ்வொரு குடியேற்றமும் தனக்கேயுரிய பாதுகாப்பு, தபால், வர்த்தகம் மற்றும் போக்குவரத்து போன்ற பல துறைகளில் தனித்தனியான முறைகளைக் கொண்டிருந்ததால், இக் குடியேற்றங்களுக்கிடையில் பரந்த அளவிலான ஒத்துழைப்பு பற்றிய தேவையை மக்கள் அதிகமாக உணரத் தலைப்பட்டனர். இதே வேளை, தேசிய உணர்வும் மேலோங்கி வரலாயிற்று.

19ம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் குடியியல் கௌரவமும் பொருளாதாரச் செழிப்பும் தாராளமாகக் காணப்படலாயிற்று. தேசத்தின் முதலாவது இரயில் சேவை மெல்பர்னில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. அவ்வாறே மின்சார தந்தித்தொடர்பு சேவையும் துவங்கியது. சிட்னியிலும் மெல்பர்னிலும் சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. கண்கவர் அழகிய கட்டடங்களும் நிர்மாணிக்கப்பட்டன.

அவுஸ்திரேலியா ஒரு சுதந்திர தேசமாகப் பரிணாமம் பெறுவதில் மேலும் இரண்டு நிகழ்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. 1870 இல், முதலாவது கப்பற் தொகுதி கரையிறங்கியதில் இருந்து 80 ஆண்டுகளில், கடைசி பிரித்தானிய துருப்புக்கள் அவுஸ்திரேலியாவில் இருந்து வெளியேறின. அதே வேளை சுயெஸ் கால்வாய் திறந்துவைக்கப்பட்டமை ஐரோப்பாவில் இருந்து பயணிப்பதில் இருந்து நீண்ட தூர நெருக்கடியை நிவர்த்தி செய்ததால் அவுஸ்திரேலியா நோக்கி புதிதாக குடிவரவுகள் படையெடுக்கலாயின. 1880இல் அவுஸ்திரேலிய சனத்தொகை இரண்டு மில்லியனாக அதிகரித்தது.

மேலோங்கி வந்த தேசத்தின் பொருளாதாரச் செழிப்பு 1890 இல் ஏற்பட்ட வரட்சி மற்றும் முடக்கல் காரணமாக வலுவிழந்தது. நிவ் சவ்த் வேல்ஸ் சட்ட சபையின் சபாநாயகர் எட்மன்ட் பார்டன் மற்றும் சிலரைப் பொறுத்த வரையில், இந்த பொருளாதார நெடுக்கடியானது, வர்த்தகம், கொள்கை வகுத்தல் மற்றும் பாதுகாப்பு முதலிய இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு நாடு தழுவிய தீர்வுகளை வழங்குவதற்கு வசதியான தேசிய அரசாங்கம் ஒன்று பற்றிய சிந்தனை மீதான உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்தியது.

சமஷ்டி முறை ஆட்சிக்கு ஆதரவாக அவுஸ்திரேலிய மக்கள் 1898, 1900 ஆண்டுகளில் வாக்களித்தனர். அதன் பிரகாரம் அவுஸ்திரேலியப் பொதுநலவாய அரசு 1901 ஜனவரி முதலாம் திகதி உருவாக்கப்பட்டது. ஆறு மாநிலங்களும் சமஷ்டி முறையில் ஒரே யாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. சமஷ்டி முறை கொண்டுவரப்பட்ட போது பூர்வீகக் குடிகள் அல்லாத சனத்தொகை 3.8 மில்லியன் ஆக இருந்தது.

நிவ் சவ்த் வேல்ஸில் சமஷ்டி இயக்கத்தை வழிநடாத்திய எட்மன்ட் பார்டன் அவுஸ்திரேலியாவின் முதலாவது பிரதம மந்திரியானார். தேசத்தின் முதலாவது பாராளுமன்றம் 1901 மே 9ம் திகதி மெல்பர்ன் கண்காட்சிக் கூடத்தில் திறந்துவைக்கப்பட்டது.





அவுஸ்திரேலியா சௌஜன்யமும், ஐக்கியமும், அபேதவாதமும் கொண்டதாக அமைய வேண்டும் என புதிய தேசத்தின் ஸ்தாபகர்கள் விரும்பினர். மனித உரிமைகள், ஜனநாயக வழிமுறைகளைப் பேணுதல் மற்றும் இரகசிய வாக்கின் மதிப்பு போன்றவை பற்றிய முற்போக்கான சிந்தனைகளை அவர்கள் கொண்டிருந்தனர்.

பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையையும் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகும் உரிமையையும் முதன் முதலில் வழங்கிய நாடுகளில் அவுஸ்திரேலியாவும் ஒன்றாகும். இவ்வுரிமைகள் 1895 இல் தெற்கு அவுஸ்திரேலியாவில் பெண்களுக்கு வழங்கப் பட்டன. 1902 ஆம் ஆண்டில், வாக்களிக்கும் உரிமையையும் பொதுநாலவாய பாராளுமன்றத்தில் அமரும் உரிமையையும் சகல அவுஸ்திரேலியப் பெண்களும் பெற்றனர்.

சமஷ்டி முறையானது நம்பிக்கை நிறைந்த ஒரு காலப் பகுதியை உருவாக்கித் தந்தது. 1901 முதல் முதலாவது உலகயுத்தம் நடைபெற்ற 1914 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் அவுஸ்திரேலியாவின் பொருளாதாரத்தை, குறிப்பாக அதன் விவசாய மற்றும் உற்பத்தித் திறன்களை அபிவிருத்தி செய்வதில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது.

யாஸ் - கன்பெரா பிராந்தியம் 1908இல் தேசிய தலைநகரம் அமைப்பதற்கான இடமாகத் தெரிவு செய்யப்பட்டது. புதிய தலைநகருக்கான இடம் அங்கீகரிக்கப்பட்டதும் நகரத்தை வடிவமைப்பதற்கான உலகளாவிய போட்டி ஒன்று 1911 இல் நடத்தப்பட்டது. போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்ட 137 மாதிரிகளில் இருந்து சிகாகோ கட்டடக் கலைஞர் வோல்டர் பர்லி கிரிபின் சமர்ப்பித்த வடிமைப்பு தெரிவு செய்யப்பட்டது. கன்பெரா 1913 மார்ச் 12ம் நாள் முறையாக பெயரிடப்பட்டது.

பாராளுமன்றம் தற்காலிகமாக இயங்குவதற்கான கட்டிடம் ஒன்று 1923 ஆகஸ்ட் 23 இல், நிரந்தர பாராளுமன்றத்துக்கென கிரிப்பின் முன்மொழிந்த இடத்துக்கு அண்மையில் உருவாகியது. கன்பெரா நகரில் முதலாவது பாராளுமன்ற அமர்வும் கட்டடத் திறப்பு விழாவும் 1927 மே 9 இல் இடம்பெற்றது.

## யுத்தத்தின் தாக்கம்

அவுஸ்திரேலியா தனியான ஒரு தேசமாக சுதந்திரம் பெற்றிருந்த போதிலும் பிரித்தானியாவுடனான குடும்ப உறவுகளும் பிணைப்பும் தொடர்ந்தும் நிலைத்திருந்தன. ஜேர்மனி 1914 இல் பெல்ஜியத்தை ஆக்கிரமித்ததையடுத்து பிரித்தானியா ஜேர்மனிக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்தபோது அவுஸ்திரேலியா பிரித்தானியாவுக்கு ஆதரவு வழங்குவதில் ஒன்றுபட்டது.

முதலாம் உலக யுத்தம் அவுஸ்திரேலியாவின் மீது கடுமையான தாக்கத்தினை ஏற்படுத்தியது. 1914இல் அவுஸ்திரேலியாவின் முழு சனத்தொகை ஏறத்தாழ 4.5 மில்லியன் ஆக இருந்தது. இதில் ஆண்களின் எண்ணிக்கை அனேகமாக மூன்று மில்லியன்தான் என்றாலும் யுத்தத்தில் இணைந்து கொள்ள 417000 அவுஸ்திரேலிய ஆண்கள் விருப்பத்தோடு முன்வந்தனர். சுமார் 330000 பேருக்கும் அதிகமான தொகையினர் போரில் கலந்துகொண்டனர். 1918 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்தபோது சுமார் 60000 பேர் கொல்லப்பட்டும் 152000 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்தும் இருந்தனர்.

துணிவு, திடஉறுதி, பரஸ்பரம் துணை நிற்றல் போன்ற விழுமியங்களை போதிக்கும் அவுஸ்திரேலியாவின் பிரபல்யமான அன்ஸக் பெறுமானம் இந்த அனுபவத்தில் இருந்து தான் தோன்றியது.

அன்ஸக்ஸ் எனப்படும் அவுஸ்திரேலிய நியுசிலாந்து இராணுவமும் கூட்டுப்படைகளும் 1915 இல் துருக்கியின் கலிபொலியில் நிகழ்த்திய வீரமிக்க ஆனால் தோல்வியில் முடிந்த போராட்டத்தின் வீர நினைவுகளை ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் 25ம் திகதியன்று அவுஸ்திரேலியா நினைவு கூர்கிறது.

கொன்ஸ்தாந்தினோபிளைத் தாக்கி Dardanelles ஐ ஊடறுப்பதனூடாகத் துருக்கியைத் தோற்கடிக்கும் நோக்கில் அன்ஸக் வீரர்கள், (பிரிட்டிஷ், பிரான்ஸ், இந்திய துருப்புகளுடன் இணைந்து) கலிபொலியில் தரையிறங்கினர். எனினும் கரடுமுரடான செங்குத்தும் பாறைப் பள்ளத்தாக்குகளைக் கொண்ட புவியமைப்பும் துருக்கியரின் பலமான எதிர்ப்பும் போர்வீரர்களின் முன்னேற்றத்தை தடைசெய்தன. அன்ஸக் வீரர்கள் 1915 டிசம்பர் 20ம் திகதி அங்கிருந்து பின்வாங்கினர். எட்டு மாதம் நீடித்த இப்போரில் ஏறத்தாழ 8700 அவுஸ்திரேலியர்கள் நேரடி யுத்தத்தில் அல்லது காயப்பட்டும் நோய்வாய்ப்பட்டும் மரணித்தனர்.

தற்போது, அன்ஸக் தினம் அன்ஸக் போர்வீரர்களை மட்டுமன்றி அது முதல் யுத்தங்களில் போரிட்ட எல்லா அவுஸ்திரேலிய போர்வீரர்களையும் நினைவு கூர்கின்றது.

இரண்டு உலக யுத்தங்களுக்கும் இடைப்பட்ட காலம் (1919 – 1939) சமுக, பொருளாதார ஸ்திரமின்மை காணப்பட்ட காலமாகும். குறிப்பாக பாரிய பொருளாதார மந்த நிலை ஏற்பட்டிருந்த இக்காலப் பகுதியில் அவுஸ்திரேலியாவின் பல நிதி நிறுவனங்கள் தோல்வியடைந்தன.

(அவுஸ்திரேலியாவின் பிரதான ஏற்றுமதிகளான) கம்பளி மற்றும் கோதுமையின் விலை வீழ்ச்சி, ஆங்கிலேய மூலதனம் வாபஸ் பெறப்பட்டமை மற்றும் ஏனைய ஏற்றுமதிகளின் விலை வீழ்ச்சி போன்றன கடுமையான நிதி நெருக்கடியை உருவாக்கியது. வேலையற்றோர் தொகை கணிசமாக அதிகரித்தது. 1933இல் தொழிலாளர் படையில் மூன்றில் ஒரு பங்கு வேலையற்றிருந்தனர். தேசிய வருமானம் பெரு வீழ்ச்சியைக் கண்டது.

'யுத்தங்களை ஒழிப்பதற்கான யுத்தம்' ஓய்ந்து 20 வருடங்கள் மட்டுமே கழிந்த நிலையில், நாடு பொருளாதார மந்த நிலையிலிருந்து சுதாகரித்துக் கொண்டு எழுந்து நிற்கின்ற போது, 1939 இல் உலகம் மீண்டும் ஒரு யுத்தத்தில் இறங்கியது. 1939இல் ஜேர்மனி போலந்தின் மீது படையெடுத்ததையடுத்து பிரித்தானியா ஜேர்மனிக்கெதிராக போர் தொடுத்தது. அவுஸ்திரேலியாவும் யுத்தத்தில் கலந்துகொள்வதாக அதன் பிரதம மந்திரி ரொபர்ட் மென்ஸீஸ் அறிவித்தார்.

நேச நாட்டுப் படைகள் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பசுபிக்கிலும் வெற்றிபெறுவதில் அவுஸ்திரேலியப் படைகள் இரண்டாம் உலகப் போரில் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு பங்களிப்பை வழங்கின. எனினும் போரின் பாதிப்பு பலமாகவே இருந்தது. சுமார் 40000 அவுஸ்திரேலியர்கள் கொல்லப்பட்டதோடு இன்னும் பலர் காயமடைந்தனர்.

யுத்தத்தில் போரிட்டு உயிர் பிழைத்தோர் அவுஸ்திரேலியாவின் ஆற்றல்கள் பற்றிய கம்பீரத்துடன் மீண்டு வந்தனர். சிங்கப்பூரின் வீழ்ச்சி, வட அவுஸ்திரேலியாவில் புரூம், டார்வின் மற்றும் டவுன்ஸ்வில் மீதான ஜப்பானிய குண்டு வீச்சு, சிட்னி துறைமுகம் மீதான நீர்மூழ்கித் தாக்குதல், பப்புவா நிவ் கினியாவில் அன்றைய கொகோடா பாதையில் ஜப்பானிய படையெடுப்புக்கு எதிரான போர் போன்ற நிகழ்ச்சிகள் யுத்தத்தை அவுஸ்திரேலியாவின் தலைவாசலுக்கே கொண்டு வந்திருந்ததையும் நாடு உணர்ந்தது.

கலிபொலியைப் போன்றே கொகோடாவும் யுத்தத்தில் அவுஸ்திரேலியர்களது துணிவையும் தியாகத்தையும் பிரதிபலிக்கும் இடமாகக் கருதப்படுகிறது. மோர்ஸ்பீ துறைமுகத்தைக் கைப்பற்றும் நோக்குடன் பபுவாவின் வடக்கில் தரையிறங்கிய ஜப்பான் ஆக்கிரமிப்புப் படையுடன் ஒவ்வாத சூழ்நிலைகளையும் மீறி நான்கு மாதங்களாகப் பொருதிப் போராடியதில் அவுஸ்திரேலியப் போர் வீரர்கள் 625 பேர் கொல்லப்பட்டதோடு மேலும் 1055 பேர் காயப்பட்டனர்.

### இணையத் தகவல்

- அவுஸ்திரேலிய யுத்த நினைவகம் (Australian War Memorial) www.awm.gov.au

## செழிப்பும் மாற்றமும்

யுத்தத்தைத் தொடர்ந்த காலப்பகுதியில் அகதிகளும் குடியேறிகளும் ஆயிரமாயிரமாக அவுஸ்திரேலியாவில் வந்து குடியேறினர். அவுஸ்திரேலியாவின் உற்பத்தித் துறையில் தொழிலாளர் பற்றாக்குறை நிலவிய காலம் அது.

1950 களில் முழுமையான தொழில்வாய்ப்புடன் பொருளாதாரம் பலமான வளர்ச்சியடைந்தது. பொதுவாகவே அவுஸ்திரேலியர்கள் மத்தியில் செல்வச் செழிப்பு காணப்பட்டது. 1947இல் வெறும் 40 சத வீதத்தில் இருந்த சொந்த வீடு வைத்திருந்தோரின் தொகை 1960 களில் 70 சத வீதமாக உயர்ந்தது.

1945 இல் ஏறத்தாழ 7.4 மில்லியனாக இருந்த சனத்தொகை 1960இல் 10.4 மில்லியனாக அதிகரித்தது. பிரித்தானியர் அல்லாத குடிவருவோர் பெருந்தொகையில் வரத் தொடங்கியதும் சனத்தொகையின் உள்ளடக்கத்தில் பாரிய மாற்றங்கள் நிகழத் தொடங்கின.

1970களாகும் போது, அவுஸ்திரேலியாவின் பிரதான வர்த்தகப் பங்காளி என்ற நிலையில் இருந்து பிரித்தானியா விடுபட்டு அவ்விடத்தை ஜப்பான் பிடித்ததனால், வர்த்தக உறவுகளும் மாற்றம் கண்டன.








ஏனைய துறைகளும் அபிவிருத்தி கண்டன. அரசாங்கத்தின் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் கிரமமாக வியாபித்ததோடு 1956 இல் தொலைக்காட்சிச் சேவையும் அறிமுகமாகியது. அதே ஆண்டில் அவுஸ்திரேலியாவில் முதன்முதலாக மிகப் பெரிய சர்வதேச நிகழ்ச்சியொன்றாக ஒலிம்பிக் போட்டிகளை மெல்பர்ன் நடாத்தியது.

இரண்டாவது உலக யுத்தத்தைத் தொடர்ந்து லிபரல் மற்றும் கிராமியக் கட்சியினரின் (தற்போது தேசியக் கட்சி) கூட்டரசாங்கம் மொத்தம் 40 ஆண்டுகள் அவுஸ்திரேலியாவில் அரசோச்சியது. அவுஸ்திரேலிய தொழிற் கட்சி மொத்தமாக 20 வருடங்கள் ஆட்சி நடாத்தி யுள்ளது.

சமூக, பொருளாதார அபிவிருத்தி தொடர்ந்தும் இடம் பெற்ற வண்ணம் உள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங்களில் பரவலான பொருளாதார சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அண்மைக் காலங்களில் சிறப்பான செயற்பாடு கொண்ட உலகின் வளர்ந்த நாடுகளில் ஒன்றாக அவுஸ்திரேலியா திகழ்கிறது. பொருளாதார வளர்ச்சியும், புதிய தொழில்வாய்ப்புகளும், உற்பத்தித் திறனும் அவுஸ்திரேலியர்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை உறுதிப்படுத்துகின்றன.

### இணையத்தில் தகவல்

- அவுஸ்திரேலிய தேசிய நூலகம் www.nla.gov.au
- அவுஸ்திரேலிய அரச கலாசார மற்றும் பொழுதுபோக்கு நுழைவாயில் www.cultureandrecreation.gov.au

## அவுஸ்திரேலியாவைத் தாயமாகக் கொண்டோர்

அவுஸ்திரேலியாவினது தேசக் கட்டுமானத்தில் குடிவரவென்பது முக்கிய அம்சமாகும். குடியேறிகள் 1788இல் இருந்து அவுஸ்திரேலியாவை வந்தடைய ஆரம்பித்தனர்.

19ம் நூற்றாண்டின் மத்தியப் பகுதியில், தங்க அலைக் கால கட்டத்தில் வருடாந்தம் சராசரி 50000 பேர் வரையிலான குடிவரவு காணப்பட்டது. அவுஸ்திரேலியாவிலும் ஏனைய இடங்களிலும் அவ்விடங்களின் பொருளாதார சமூக நிலவரங்ளைப் பிரதிபலிக்கும் வண்ணம் அவுஸ்திரேலியாவினது குடிவரவு அதனைத் தொடர்ந்த காலங்களிலும் இடைவிடாது நிகழ்ந்தது.

ஆரம்ப காலக் குடியேறிகளில் அதிகமானோர் பிரித்தானியாவையும் அயர்லாந்தையும் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்களது ஆங்கிலேய கெல்திய மரபுகள் புதிய தேசத்தை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமைந்தன.

இரண்டாம் உலக யுத்த முடிவில் மில்லியன் கணக்கான மக்கள் தம் சொந்த இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து காணப்பட்டனர். அச்சமயத்தில், அவுஸ்திரேலியாவில் அதிகளவு தொழிலாளர் பற்றாக்குறை நிலவியது. அத்துடன் நாட்டின் எதிர்காலத்திற்குக் குறிப்பிடத்தக்க சனத்தொகைப் பெருக்கம் அவசரத் தேவை என்ற நம்பிக்கையும் அவுஸ்திரேலியாவில் வலுப்பெற ஆரம்பித்திருந்தது.

இவை போன்ற பல காரணங்களைப் பின்னணியாகக் கொண்டு 1945ம் ஆண்டு பெடரல் குடிவரவு திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு பெயர் மாற்றங்களுடன் இந்தத் திணைக்களம் இன்று வரையும் செயற்பட்டு வருகிறது.

1947 ஆகும்போது பாரிய எண்ணிக்கையில் குடிவரவு இடம்பெறலாயிற்று. அரசாங்க உதவியுடன் பயணித்து வந்த அநேகரும் இதில் அடங்குவர். இவ்வாறு குடிவந்தோரில் அதிகமானோர் ஐரோப்பியர் ஆவர். ஏனெனில் ‘வெள்ளை அவுஸ்திரேலிய’ க் கொள்கை வேறு நாடுகளைச் சேர்ந்தோரின் குடிவரவைக் கட்டுப்படுத்தியது. இந்நிலை பெடரேசன் ஆரம்பமாகிய 1901 முதல் 1970 களின் ஆரம்ப காலம் வரை நீடித்தது.

1945 இல் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு வந்து சேர்ந்த 6.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள், குடும்பப் பொறுப்புகள், வறுமை, யுத்தத்திலிருந்து அல்லது அடக்குமுறையிலிருந்து தப்பித்துக் கொள்ளல் போன்ற காரணிகளால் தூண்டப்பட்டே குடிபெயர்ந்து வந்திருந்தனர். தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் புதியதொரு வாழ்வை உறுதிப்படுவதற்காக அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி கடின உழைப்பை மேற்கொள்ள அவர்கள் திடவுறுதி பூண்டிருந்தனர்.

உதாரணமாக, 30 நாடுகளைச் சேர்ந்த 100000 குடிறேிகள் அவுஸ்திரேலியாவின் தெற்கு மலைப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட மிகப் பெரிய நீர் மின் உற்பத்தித் திட்டமான ஸ்னோவி மவ்ன்டன்ஸ் (Snowy Mountains Scheme) திட்டத்தில் பணியாற்றினர். இந்தத் திட்டம் முடிவடைய 1949 முதல் 1974 வரையில் 25 வருட காலம் எடுத்தது.

ஐரோப்பியர் அல்லாதோரின் குடிவரவைத் தடுக்கின்ற கட்டுப்பாட்டு நடைமுறைகள் 1970 களின் நடுப்பகுதியாகும் போது வெற்றிகரமாக நீக்கப்பட்டதன் பிறகு அவுஸ்திரேலியக் குடிவரவுக் கொள்கை பாகுபாடற்றதாக மாறியது. விசா பெறுவதற்கான தகுதியை நிர்ணயிப்பதில் ஒரு தனிமனிதனின் இனம், பால், சாதி அல்லது மதத்திற்கு எப்பங்கும் இல்லை.

### இணையத் தகவல்

- குடிவரவு மற்றும் குடியுரிமைத் துறை www.immi.gov.au

## ஜனநாயகமும் அரசாங்கமும்

நாட்டின் குடிமக்கள் பங்கெடுத்து தம் கருத்தை வெளியிடவல்ல பாராளுமன்ற அரசாங்க முறையிலமைந்த பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை அவுஸ்திரேலியா கொண்டுள்ளது.

இது மத சிகிப்புத் தன்மையையும் கூட்டுச் சேரும் உரிமையையும் ஊக்கப்படுத்தும் ஜனநாயகப் பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட முறையாகும். அவுஸ்திரேலிய தேசிய அரசாங்கத்தின் இதயமாகக் கருதப்படும் அமைப்பு நிறுவனங்களும் நடைமுறைகளும் பிரித்தானிய மற்றும் வடஅமெரிக்கப் பாரம்பரியங்களை ஒத்த பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டதாகும்.

## அவுஸ்திரேலிய அரசியல் சாசனம்

1901 ஜனவரி முதலாம் திகதியன்று அவுஸ்திரேலிய அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்ததையடுத்து பொதுநலவாய அவுஸ்திரேலியா (Commonwealth of Australia) ஒரு பெடரல் அரசாக உருவெடுத்தது. அவுஸ்திரேலிய தேசீய அரசிற்கான அடிப்படையாக இவ்வரசியல் சாசனம் அமைகிறது.

அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டுவர முடியும், ஆனால் அது அரசியல் யாப்பின் சரத்துகளுக்கு அமைய நடாத்தப்படும் தேசியக் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பின் அடிப்படையில் பெறப்படும் ஆதரவை அடிப்படையாகக் கொண்டதாகவே அமையும். எவ்வித திருத்தங்களும் இரண்டு வித பெரும்பான்மைகளால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் - தேசிய அளவிலான வாக்காளர்களது பெரும்பான்மையும், பெரும்பான்மையான மாநிலங்களில் (ஆறில் குறைந்தது நான்கின்) பெரும்பான்மையான வாக்காளர்களது ஆதரவும் இதற்குத் தேவைப்படும்.

## அவுஸ்திரேலிய சமஷ்டி

அரசியல் யாப்பானது ஆறு மாநில அரசாங்கங்களையும், ஒரு பொதுநலவாய (அல்லது தேசிய) அரசாங்கத்தையும் உள்ளடக்கிய சமஷ்டி முறை அரசாங்கத்தை உருவாக்குகிறது. இதற்கும் மேலாக மாநிலங்களைப் போலவே செயற்படும் சுயாதிக்கம் கொண்ட எல்லைப் பிராந்தியங்களும் பொதுநலவாயப் பாராளுமன்றத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளன. (பூங்காக்கள், உள்ளூர்ப் பாதைகள், கழிவகற்றல் போன்ற) உள்ளூர் விவகாரங்களைக் கவனிப்பதற்காக உள்ளூராட்சி மன்றங்களை மாநில, எல்லைப் பிராந்திய அரசாங்கங்கள் உருவாக்கியுள்ளன.

பொதுநலவாயப் பாராளுமன்றத்தினால் சட்டங்கள் இயற்றப்படுவதற்கான விடயதானங்களை அவுஸ்திரேலிய யாப்பு பட்டியலிடுகிறது. இவற்றில், வெளிநாட்டு விவகாரம், சர்வதேச மற்றும் மாநிலங்களுக்கிடையிலான வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் குடிவரவு என்பனவும் உள்ளடங்கும். சில விதிவிலக்குகளுக்கு உட்பட்டு, மாநிலங்களும், எல்லைப் பிராந்தியங்களும் தமக்குப் பொருத்தமான எந்த விடயம் தொடர்பாகவும் சட்டங்களை இயற்றலாம். ஆனால் பொதுநலவாய சட்டங்களுடன் முரண்படக்கூடிய சட்டங்களை மாநிலங்களும், எல்லைப் பிராந்தியங்களும் இயற்ற முடியாது. கல்வி, பாதைகள், பொலீஸ், தீயணைப்பு மற்றும் பொதுப் போக்குவரத்து போன்றன மாநில மற்றும் எல்லைப் பிராந்திய சட்டங்களுக்கு உட்பட்ட விடயங்களுக்கு உதாரணங்களாகும்.







அரசாங்கம், பொதுநலவாய மற்றும் மாநில மட்டங்களில் மூன்று கிளைகளைக் கொண்டுள்ளன. அவை சட்டவாக்கம் (பாரளுமன்றம்), நிறைவேற்று அரசாங்கம் மற்றும் நீதித்துறை ஆகியனவாகும்.

அவுஸ்திரேலியப் பாராளுமன்றமானது பிரிட்டிஷ் பாரளுமன்றம் கூடும் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையின் பெயரைக் கொண்ட வெஸ்ட்மின்ஸ்டர் பாரம்பரியங்களைக் கடைப்பிடிக்கிறது. இந்தப் பாராளுமன்ற அரசாங்க முறை பல நூற்றாண்டு காலமாக வளர்ச்சி கண்டு வந்துள்ளது. நாட்டின் தலைவர் அரசாங்கத்தின் தலைவரல்லாதிருத்தலும், பாராளுமன்றத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்திற்கு நேரடியாகப் பதில் சொல்ல வேண்டிய நிறைவேற்று அரசாங்கத்தினைக் கொண்டிருத்தலும் அதன் முக்கிய சிறப்பம்சங்களாகும். நீதித்துறையும் 'சட்டத்தின் மேலான்மையும்' பாராளுமன்றத்தில் இருந்து விடுபட்டு சுயாதீனமாக இயங்குகின்றன.

அவுஸ்திரேலியப் பாராளுமன்றங்களின் அதிகாரம் மாநில மற்றும் பொதுநலவாய அரசியல் யாப்பு மூலம் மட்டுப்படுத்தப்படுகின்றது என்ற வகையில் அவை வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரியில் இருந்து வேறுபடுகின்றன.

## அவுஸ்திரேலிய அரசாங்கம்

தேசிய மட்டத்திலான சட்டங்களை இயற்றும் பொதுநலவாயப் பாராளுமன்றம் பிரதிநிதிகள் சபை (House of Representatives) மற்றும் செனட் சபை (Senate) ஆகிய இரண்டு அவைகளைக் கொண்டது. பெடரல் தேர்தல்களின் போது இவ்விரு அவைகளுக்குமான பிரதிநிதிகளை மக்கள் நேரடியாகத் தெரிவு செய்கின்றனர். பிரதிநிதிகள் சபையின் அதிகூடிய பிரதிநிதித்துவக் காலம் மூன்று வருடங்களும் செனட் சபையில் அது ஆறு வருடங்களுமாகும். (பிரதிநிதிகள் சபைக்கான பெடரல் தேர்தல்கள் பொதுவாக 'அரைவாசி செனட்டிற்கான' (half-senate) தேர்தல்கள் இடம்பெறும் அதேவேளையில் நடைபெறுவதுண்டு).

செனட் சபை 76 அங்கத்தினர்களைக் கொண்டது. ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் தலா 12 பேரும், வடக்கு மற்றும் அவுஸ்திரேலியத் தலைநகர எல்லைப் பிராந்தியங்கள் ஆகிய இரண்டிலிருந்தும் தலா இருவரும் தெரிவாவர். பிரதிநிதிகள் சபையில் ஒவ்வொரு மாநிலத்தினதும் சனத்தொகைக்கேற்ப பிரதிநிதிகள் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். பிரதிநிதிகள் சபை உறுப்பினர் எண்ணிக்கை செனட் உறுப்பினர் தொகையை விட இரட்டிப்பாக அல்லது அதற்குக் கிட்டிய சாத்தியமான எண்ணிக்கையில் இருத்தல் வேண்டும். தற்போது இச்சபையில் 150 பிரதிநிதிகள் உள்ளனர். ஒவ்வொருவரும் தேர்தல் தொகுதி (electorate) எனப்படும் தத்தமது பிரதேசங்களில் உள்ள சுமார் 80000 வாக்காளர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறும் கட்சி அல்லது கூட்டணி, (அவுஸ்திரேலிய அரசாங்கம்' என குறிப்பிடப்படும்) அரசாங்கத்தை அமைக்கும். அக்கட்சியின் அல்லது கூட்டணியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் பிரதம மந்திரி (Prime Minister) ஆவார். இவர் மக்களால் அப்பதவிக்கு நேரடியாகத் தெரிவு செய்யப்படுபவரல்ல. பிரதிநிதிகள் சபையில் பலத்தினைப் பெறும் கட்சியே அவரைத் தெரிவு செய்யும். செனட்டில் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்குக் கிடையாது.

எந்த மசோதாவும் சட்டமாகுவதெனில், இரண்டு அவைகளினதும் அங்கீகாரம் தேவை. சட்டவாக்கத்தை இரண்டு அவைகளும் மேற்கொள்ளலாம் எனினும் சில நிதித்துறை பற்றிய சட்டங்கள் பிரதிநிதிகள் சபையிலேயே இயற்றப்பட வேண்டும்.

## தேர்தல்கள்

பொதுவாகவே புதிய அரசாங்கங்கள் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து அமைக்கப்படுகின்றன.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அதி கூடிய செயற்பாட்டுக் காலம் புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் இருந்து மூன்று வருடங்களாகும். எனினும் மூன்றாண்டு காலம் முடிவடையும் முன்னர் பொதுத் தேர்தலுக்கு அழைக்குமாறு தேசாதிபதியை பிரதம மந்திரி கோரலாம்.

முதலாவது பாராளுமன்றம் 1901 மே 9ம் திகதியன்று திறந்துவைக்கப்பட்டதில் இருந்து இது வரை 40க்கும் மேற்பட்ட தேர்தல்கள் பிரதிநிதிகள் சபைக்காக நடைபெற்றுள்ளன.

## வாக்கு இடாப்பில் பதிதலும் வாக்களித்தலும்

அவுஸ்திரேலியாவின் மத்திய, மாநில மற்றும் பெரும்பாலான உள்ளூராட்சி தேர்தல்களில் ஒருவர் வாக்களிப்பதற்கு முன்பாக அவர் வாக்காளர் இடாப்பில் இடம் பெற்றிருக்க வேண்டும். அவுஸ்திரேலியப் பிரசையாகவுள்ளவர் 17 வயதை அடைந்தவராக அல்லது அதற்கு மேற்பட்டவராயின் தன்னை வாக்காளராகப் பதிவு செய்துகொள்ளலாம் மற்றும் அவர் 18 வயதை அடைந்ததிலிருந்து வாக்களிக்கும் தகுதியைப் பெறுவார். இதற்கான விண்ணப்பங்களை அவுஸ்திரேலிய தேர்தல் ஆணையகக் (Australian Electoral Commission (AEC) காரியாலயங்களிலும், தபால் நிலையங்களிலும், AEC யின் இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

வெளிநாட்டில் வதிவிடத்தைப் பெறும் ஓர் அவுஸ்திரேலியர், பெடரல் தேர்தர்களில் வாக்களிப்பதற்குத் தகுதிபெற, தாம் நாட்டைவிட்டு வெளியேறிய மூன்று வருடங்களுக்குள் கடல்கடந்த வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள வேண்டும். இவ்வாறு பதிவு செயவதன் மூலம் ஆறு வருடங்களுக்கு வாக்காளர் பட்டியலில் அவர் இடம் பெறுவார். மேலதிகமாக நீடிக்க விரும்புவோர் வருடா வருடம் ஆணையகத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வதும், வாக்களிப்பதும் அவுஸ்திரேலியப் பிரசைகளுக்குக் கட்டாயமாகும். வாக்களிக்காமைக்கு வழங்கப்படும் தண்டனை மிகச் சிறியதாக இருப்பினும் உலகின் அதிக வாக்களிப்பு வீதத்தைக் கொண்ட நாடுகளில் அவுஸ்திரேலியாவும் ஒன்றாகும். இங்கு மொத்தம் 90 சதவீதமான வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்கின்றனர். அவுஸ்திரேலிய வாக்காளர்கள் பொதுநலவாய, மாநில அல்லது எல்லைப் பிராந்திய மற்றும் உள்ளூராட்சி ஆகிய மூவித தேர்தல்களில் வாக்களித்து பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்றனர்.

பெடரல் தேர்தல்கள் நடைபெறுகின்றபோது வெளிநாட்டுக்குச் செல்கின்ற பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் வாக்களித்துவிட்டுச் செல்லலாம் அல்லது ஆரம்ப வாக்களிக்கும் காலம் ஆரம்பமாகியிருப்பின் போவதற்கு முன்பே வாக்களிக்கலாம்.

பெடரல் தேர்தல் நோக்கங்களுக்காக நாடு பல தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பிரதிநிதிகள் சபைத் தேர்தலில் அவுஸ்திரேலிய வாக்காளர்கள் தமது தொகுதியில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு வாக்களிப்பர். எந்த வேட்பாளரும் முதலாவது விருப்பு வாக்கில் 50 விழுக்காட்டிற்கு மேலதிகமான வாக்குகளைப் பெறாதவிடத்து, ஆகக் குறைந்த வாக்குகளைப் பெற்றோர் நீக்கப்பட்டு பின்னர், வாக்காளர்களின் இரண்டாவது விருப்பத் தெரிவு வாக்கு உரிய அபேட்சகர்களுக்கு பகிரப்படும்.

ஒரு வேட்பாளருக்கு 50 விழுக்காடிற்கு மேல் வாக்குகள் சேரும் வரையில் இந்நடைமுறை தொடரும்.

செனட் சபைக்கான தேர்தலிலும் விருப்பு வாக்குகள் பிரயோகிக்கப்படுகின்றன. அதில் தாம் பிரதிநிதித்துவம் கோருகின்ற மாநிலத்திற்கு அல்லது எல்லைப் பிராந்தியத்திற்குரிய குறிப்பிட்ட ‘பங்கு வீத’ வாக்குகளை வேட்பாளர் பெற வேண்டும்.

அவுஸ்திரேலியாவில் பாராளுமன்ற அங்கத்துவர்களில் அனேகர் அரசியல் கட்சிகளைச் சார்ந்தோராவர். அடிப்படையில் கட்சிகள் என்பன, நாட்டின் விவகாரங்கள் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்பது பற்றி பொதுவான சிந்தனைகளையும், தத்துவங்களையும் கொண்டுள்ள மக்களின் அமைப்புகளாகும்.

அரசியல் கட்சியில் இணைவது, அதன் இலக்குகளையும் கட்சிக் கொள்கைகளையும் நிர்ணயிப்பது மற்றும் தேர்தல் பிரசாரக் களத்தில் தமது கட்சியின் வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்குவது என்பன பற்றிய சுதந்திரம் அவுஸ்திரேலியாவில் அனைவருக்கும் உண்டு.

அவுஸ்திரேலியப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுபவர், அவுஸ்திரேலிய பிரசையாக இருப்பதுடன் வேறு பிரசாவுரிமைகளில் இருந்து தம்மை விலக்கிக் கொள்வதற்கான சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

## மாநில மற்றும் எல்லைப் பிராந்திய அரசாங்கம்

ஒவ்வொரு மாநிலமும் அம்மாநிலத்தின் அரசாங்கம் சம்பந்தப்பட்ட முடிவுகளை எடுக்கும் அமைப்பான அதற்கேயுரிய பாராளுமன்றத்தைக் கொண்டது. குயீன்ஸ்லாந்து பாராளுமன்றத்தைத் தவிர, சகல மாநில பாராளுமன்றங்களும் இரண்டு அவைகளைக் கொண்டுள்ளன.

மாநில பாராளுமன்றங்களுக்குத் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் உறுப்பினர்கள் என அழைக்கப்படுவர் - சட்ட சபை உறுப்பினர்கள் (Legislative Assembly) (MLA) அல்லது அரசுப் பேரவை உறுப்பினர்கள் (House of Assembly) (MHA)





அல்லது சட்ட மன்ற உறுப்பினர்கள் (Legislative Council) (MLC). மாநில அரசின் தலைவர் முதல்வர் (Premier) என அழைக்கப்படுவார்.

வடக்குப் எல்லைப் பிராந்தியமும், அவுஸ்திரேலிய தலைநகர எல்லைப் பிராந்தியமும் வேறுவிதமான ஓர் ஏற்பாட்டைக் கொன்டுள்ளன. ஒவ்வொரு எல்லைப் பிராந்தியப் பாராளுமன்றமும் சட்ட மன்றம் (Legislative Assembly) என அழைக்கப்படும் ஒரு அவையைக் கொண்டுள்ளது. எல்லைப் பிராந்திய அரசின் தலைவர் முதலமைச்சர் (Chief Minister) என அழைக்கப்படுவார்.

மாநில மற்றும் எல்லைப் பிராந்திய அரசாங்கப் பெறுப்புகளில் சட்டம் ஒழுங்கைப் பேணல், நுகர்வோர் விவகாரங்கள், சுகாதாரம், கல்வி, வன பராமரிப்பு, பொதுப் போக்குவரத்து மற்றும் பிரதான சாலைகள் என்பனவும் அடங்கும்.

## உள்ளூராட்சி

உள்ளூராட்சி நிர்வாகத்தில் தீர்மானம் மேற்கொள்ளும் நிறுவனங்கள் பொதுவாக நகர அல்லது பிரதேச சபை (city or shire council) என அழைக்கப்படும். நகரத்தின் அல்லது உள்ளூர் மக்களின் குறிப்பிட்ட தேவைகளைப் பற்றிக் கவனிப்பதற்காக மாநில அரசாங்கங்கள் இத்தகைய சபைகளை உருவாக்கியுள்ளன. இச்சபைகளுக்குத் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் நகராட்சி மன்ற உறுப்பினர்கள் அல்லது கவுன்சிலர்கள் என அழைக்கப்படுவர். இத்தகைய சபைகளின் தலைவர்கள் மேயர் அல்லது நகராட்சி மன்றத் தலைவர் (mayor or shire president) என அழைக்கப்படுவர்.

உள்ளூர் பாதை பராமரிப்பு, கழிவுப்பொருட்களை அகற்றல், கட்டட நிர்மாண விதிமுறைகள் மற்றும் காணிப் பங்கீடு, பொதுச்சுகாதாரம் உட்பட நீச்சல் தடாகங்கள் போன்ற பொழுது போக்கு அம்மசங்கள் ஆகிய பொறுப்புகளை அவை கொண்டுள்ளன.

## யாப்பு ரீதியான முடியரசு

அவுஸ்திரேலியா ஒரு சுயாதீன தேசம், எனினும் ஐக்கிய இராச்சியத்தின் 2 ஆம் எலிசபெத் மகாரணியாருடன் யாப்பு ரீதியான தொடர்புகளைப் பேணி வருகிறது. அவரே அவுஸ்திரேலியாவின் மகாராணியாவார்.

மகாராணியார், தனது பிரதிநிதியாக பிரதம மந்திரியின் சிபார்சின் படி தேசாதிபதியை (Governor-General) நியமிப்பார். தேசாதிபதி பிரதம மந்திரியின் ஆலோசனையின் பிரகாரம் அமைச்சர்களை நியமிப்பார். மரபுப்படி, பொதுவாக சகல விவகாரங்களிலும் அமைச்சர்களின் ஆலோசனைகளின்படியே அவர் செயற்படுவார்.

## பெடரல் சட்ட அமைப்பு

அவுஸ்திரேலிய சட்டத் துறையானது, நடைமுறை நீதி மற்றும் சட்டத்தின் முன் சகலரும் சமம் ஆகியன பற்றிய அடிப்படைக் கோட்பாடுகளைப் பிரதிபலிக்கிறது.

சட்டங்களை எடுத்துரைக்கும் மற்றும் நடைமுறைப் படுத்தும் பொறுப்பு அவுஸ்திரேலியாவில் நீதித்துறையையே சாரும். இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதில் நீதிபதிகள் அரசாங்க செல்வாக்கில் இருந்து விடுபட்டு சுயேச்சையாக இயங்குவர்.

எல்லாவித சட்ட ரீதியான முரண்பாடுகளின் போதும் இறுதியான மேன்முறையீட்டு நீதிமன்றமாக அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றம் (High Court of Australia) விளங்குகிறது. உயர் நீதிமன்றத்தின் பிரதான செயற்பாடுகளில் ஒன்று அவுஸ்திரேலிய அரசியல் யாப்பை வியாக்கியானம் செய்வதாகும். பாராளுமன்றம் இயற்றும் ஒரு சட்டத்தை அது யாப்புக்கு முரணானது என - அதாவது பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டதெனத் - தீர்ப்பளித்தால் அச்சட்டம் செயலிழந்து விடும்.

### இணையத்தில் தகவல்

- அவுஸ்திரேலியப் பாராளுமன்றம் www.aph.gov.au
- அவுஸ்திரேலியத் தேர்தல் ஆணையம் www.aec.gov.au
- அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றம் www.hcourt.gov.au

# இன்றைய அவுஸ்திரேலிய சமுதாயம்

இன்றைய அவுஸ்திரேலிய சமுதாயத்தின் முக்கியமான சிறப்பம்சங்களில் ஒன்று, அதன் மக்களது கலாச்சாரப் பல்லினத்தன்மையும், அவுஸ்திரேலியா மீதான அனைத்தையும் மிகைத்த தமது பற்றுறுதியில் அவர்கள் ஒன்றுபட்டிருக்கும் தன்மையும் ஆகும்.

அவுஸ்திரேலிய சமுதாயத்தின் மற்றுமொரு சிறப்பம்சம் அதன் பேதம் பேணாத, அனைத்தோரும் சமமென்ற தன்மையாகும். ஒவ்வொருவரும் ஒரே மாதிரியானவர்கள் என்பதோ அல்லது எல்லோரும் சமமான அளவுள்ள செல்வத்தையோ, சொத்துகளையோ வைத்திருப்பர் என்பதோ இதன் அர்த்தமல்ல. மக்கள் தமது கடின உழைப்பாலும், பற்றுறுதியாலும், உயர்மட்டத் தொடர்புகள் அல்லது செல்வாக்கு மிக்கோரின் சிபார்சுகள் எதுவும் இன்றி எதனையும் சாதிக்கலாம் என்பதையும் இது குறிக்கும்.

அவுஸ்திரேலியாவின் சட்டவரம்புக்குக் கட்டுப்பட்டுத் தமது கலாசாரத்தையும், நம்பிக்கைகளையும் வெளிப்படுத்தவும், அவுஸ்திரேலியாவின் தேசிய வாழ்வில் சுதந்திரமாகப் பங்கு கொள்ளவும் அவுஸ்திரேலியர்களால் இயலுமாகிறது. எவரும் அவரது பிறந்த நாடு, கலாசாரப் பாரம்பரியம், மொழி, பாலினம் மற்றும் மத நம்பிக்கைகள் போன்றவை காரணமாக பாரபட்சம் காட்டப்படக்கூடாது என அவுஸ்திரேலியா உறுதியாக நம்புகிறது.

ஸ்திரமான, அமைதியான மற்றும் செழிப்பான சமுதாயமொன்றைப் பேணுவதற்காக அவுஸ்திரேலிய சமுதாயத்தின் அடிநாதமாக விளங்கும் பகிர்ந்து கொள்ளப்படும் கொள்கைகளையும் விழுமியங்களையும் கட்டிக்காக்க வேண்டும் என சகல பின்னணிகளையும் கொண்ட ஒவ்வொரு அவுஸ்திரேலியனிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகிறது.

*அவுஸ்திரேலிய விழுமியங்கள் மற்றும் கொள்கைகளை* பக்கம் 4 இல் பார்க்கவும்.

## சட்டங்களும், சமூகப் பழக்கவழக்கங்களும்

அவுஸ்திரேலியாவின் சமூக நன்னடத்தையை முறையான சட்டங்களும் மற்றும் முறைசாரா சமூகப் பழக்க வழக்கங்களும் நிர்வகிக்கின்றன.

அவுஸ்திரேலியாவில் மக்கள் அனைவரும் தேசத்தின் சட்டத்திற்குக் கட்டுப்படல் வேண்டும் அன்றேல் குற்றவியல் மற்றும் சிவில் வழக்குத் தொடுக்கப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படும் சாத்தியம் உண்டு. அவுஸ்திரேலியாவின் சமூக மரபுகள், பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகளை, அவை முறையான சட்ட கடப்பாடு அற்றவையானினும், மக்கள் மதித்து நடக்க வேண்டுமென எதிப்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவின் சட்டங்களை அவுஸ்திரேலியப் பொதுநலவாய, மாநில மற்றும் எல்லைப் பிராந்தியப் பாராளுமன்றங்கள் இயற்றுகின்றன. சமுதாயத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் பொறுப்பைக் காவல் துறையினர் சுமந்து சட்டத்தை மீறியவர் என அவர்கள் நம்புவோரை நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதைத் தமது கடமையாய்க் கொண்டுள்ளனர். பிரச்சினைகள் ஏற்படும் போது உள்ளூர் மக்கள் மற்றும் அயலவர்கள் பரஸ்பரம் உதவிக்கொள்வதோடு ஏதாயினும் சந்தேகமான அல்லது அசாதாரண நிலைமைகளை உள்ளூர் பொலீஸுக்கு அறியப்படுத்துவர்.

அவுஸ்திரேலியாவுக்கென பெடரல் பொலீஸ் (Australian Federal Police) என அழைக்கப்படும் தேசிய அளவிலான பொலீஸ் படை உண்டு. பெடரல் சட்டங்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் பற்றி அது விசாரணை செய்யும். போதைப்பொருள் கடத்தல், சட்ட விரோதக் குடிவரவு, தேசியப் பாதுகாப்புக்கு எதிரான குற்றங்கள், சுற்றுச்சூழலுக்கு எதிரான குற்றங்கள் போன்றன அவற்றுள் அடங்கும். அவுஸ்திரேலியாவின் எல்லா மாநிலங்களும், வடக்கு எல்லைப் பிராந்தியமும் மாநில அல்லது எல்லைப் பிராந்திய சட்டங்களுக்குக் கீழ்வரும் குற்றங்கள் பற்றி நடவடிக்கை எடுக்கும் தமக்கேயுரிய பொலீஸ் படைகளைக் கொண்டுள்ளன. அவுஸ்திரேலியத் தலைநகரப் பிராந்தியத்தில் காவல் நடவடிக்கைகளை அவுஸ்திரேலிய பெடரல் பொலீஸ் மேற்கொள்கிறது.

பொலீஸ் அதிகாரிகள் கைது செய்தல் மற்றும் நீதிமன்றத்தில் சாட்சி சொல்தல் போன்ற விடயங்களை மேற்கொள்வரெனினும் மக்கள் குற்றம் செய்தார்களா இல்லையா என்பது பற்றித் தீர்ப்பு வழங்க மாட்டார்கள். இதை நீதிமன்றம் தீர்மானிக்கும்.

அவுஸ்திரேலியாவில் பொலீஸுக்கும் சமூகத்துக்கும் இடையில் சுமுகமான தொடர்பு காணப்படுகிறது. குற்றங்களை பொலீஸுக்கு அறிவித்து அவர்களின் உதவியைப் பெற உங்களால் முடியும். பொலீஸ் விசாரித்தால் அமைதியாகவும், பண்புடனும் ஒத்துழைக்கவும்.

### நீதி மன்றங்களும் சட்டமும்

நீதியை நிர்வகிக்கும் பொறுப்பு நீதிமன்றங்களைச் சாரும். சட்டம் மீறப் பட்டுள்ளதா என்பதையும் குற்றம் புரிந்ததாக நிரூபிக்கப்படுவோர் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றியும் நீதிமன்றங்களே தீர்மானிக்கும்.





சில வழக்குகளில் குற்றவியல் நடுவா் வழக்கை விசாரித்து தீா்ப்பு வழங்குவாா். வேறு சில வழக்குகளில் குடிமக்களைக் கொண்ட நடுவா் குழுவொன்று (jury), நீதிபதியின் வழிகாட்டலில் தீா்ப்பளிக்கும். நியாயப்படுத்தக்கூடிய சந்தேகத்திற்கு இடம் இல்லாத முறையில் பிரதிவாதி குற்றவாளி என நீரூபிக்கப்படும் வரையில் நிரபராதியாகவே கருதப்படுவாா். பிரதிவாதிகளுக்கு தமது சாா்பாக வக்கீல்களை அமா்த்திக் கொள்ளும் உரிமையும் உண்டு.

சில வழக்குகளில், வக்கீல்களை அமா்த்திக் கொள்ள வசதியில்லாதோருக்கு இலவச சட்ட உதவி வழங்கப்படும்.

சில தற்காலிக விசாக்களில் தங்கியிருப்பவா்கள், தாம் அக்கால எல்லையைத் தாண்டி அவுஸ்திரேலியாவில் தங்கியிருந்தால் குற்றவியல் தீா்ப்புக்கு உட்பட்டு அதன் விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரலாம் என்பதைத் தெரிந்துவைத்துள்ளாா்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

## கிரிமினல் குற்றச் செயல்கள்

கொலை. காயப்படுத்தல், பாலியல் வன்முறை, சிறாா் துஷ்பிரயோகம், பொதுமக்களுக்கு அல்லது சொத்துக்கு எதிரான வன்முறை, ஆயுதமுனையில் கொள்ளை அல்லது களவு, ஆபத்தேற்படுத்தும் விதத்தில் மோட்டாா் வண்டி ஓட்டுதல், சட்டவிரோத போதைப் பொருட்களை வைத்திருத்தல் மற்றும் உபயோகித்தல், மோசடி அல்லது சட்டபூா்வ இணக்கத்திற்கான வயதிலும் (இது அவுஸ்திரேலியாவில் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும்) குறைந்த இளம்பிராயத்தினருடன் பாலியல் உறவு வைத்துக்கொள்ளல் போன்றன பாரதூரமான கிரிமினல் குற்றங்களாகும்.

அவுஸ்திரேலியா கலாசார பல்லினத்தன்மையை மதித்துப் பேணுகிறது. எனினும் அனைத்து சமய கலாசார செயற்பாடுகளும் அவுஸ்திரேலியாவின் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு இணக்கப்பாடானதாக அமைதல் வேண்டும். உதாரணமாக பிறப்பு உறுப்புக்களை உருக்குலைத்தல் மற்றும் வீட்டு வன்முறை போன்ற செயற்பாடுகளை மாநில மற்றும் எல்லைப் பிராந்தியச் சட்டங்கள் தடை செய்கின்றன.

## குடும்ப வன்முறை

ஏனைய நாடுகளிலுள்ளது போன்றே அவுஸ்திரேலியாவிலும் இன்னொருவா் மீதான வன்முறை சட்ட விரோதமானதுடன் அது மிகப் பாரதூரமானதாகவும் கருதப்படுகிறது. வீட்டிற்குள் மற்றும் திருமண பந்தத்திற்குள் நடக்கின்ற உள் வீட்டு அல்லது குடும்ப வன்முறை இதில் அடங்கும். ஒருவரது செயல் காரணமாக இன்னொருவா் உடல், பாலியல் அல்லது உளவியல் ரீதியான பாதிப்பிற்கும், துஷ்பிரயோகத்திற்கும் உள்ளாதல் அல்லது அவ்வாறு ஏற்படுமென அஞ்சுதல், பலவந்தமான பாலியல் வல்லுறவுகள். பலவந்தமாய்த் தனிமைப்படுத்தல் அல்லது பொருளாதார ரீதியாக முடக்குதல் போன்றன வீட்டு வன்முறையாகக் கருதப்படும்.

## போதைவஸ்து, புகைத்தல் மற்றும் மதுபானம் அருந்துதல்

சட்டவிரோத, கள்ளத்தனமான, தடைசெய்யப்பட்ட, போதை வஸ்துக்களை வைத்திருத்தல் அல்லது விநியோகித்தல் போன்ற குற்றங்களுக்கான தண்டனை மிகக் கடுமையானதாக இருக்கும். அவற்றை உற்பத்தி செய்தல், வழங்குதல் அல்லது விற்பனை செய்வதில் ஈடுபட்டுக் குற்றவாளிகளாகக் காணப்படுவோருக்கான தண்டனை இதை விடக் கடுமையானதாயிருக்கும். புகை பிடித்தலும், மதுபானம் அருந்துவதும் சட்டவிரோதமானவையல்லாத போதிலும் பொது இடங்களில் அவற்றை உபயோகிப்பது சம்பந்தமான பல கட்டுப்பாடுகள் உள்ளன.

பெரும்பாலான அரசாங்க காரியாலயங்கள், சுகாதார நிலையங்கள், தொழிலகங்கள் உட்பட நாளாந்தம் அதிகரித்து வரும் பல இடங்களில் புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. மூடிய பொது இடங்களாகிய உணவு விடுதிகள், களியாட்ட விடுதிகள், இரவு விடுதிகள், பாடசாலைகள் மற்றும் விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் புகைபிடிப்பதை, பெரும்பாலான மாநிலங்களும் எல்லைப் பிராந்தியங்களும் தடைசெய்துள்ளன. சில மாநிலங்களிலும் எல்லைப் பிராந்தியங்களிலும் வெளியரங்க பொது இடங்கள் பலவற்றிலும் புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. சில்லறை வியாபாரிகள், புகையிலை உற்பத்திகளை 18 வயதுக்குக் குறைவான எவருக்கும் விற்பனை செய்வது குற்றமாகும்.

மது அருந்துவது அவுஸ்திரேலியாவில் சட்டபூா்வமாயினும் அது குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. 18 வயதுக்குக் குறைந்த ஒருவருக்கு மதுபானத்தை விற்பது அல்லது வழங்குவது சட்ட விரோதமாகும். 18 வயதுக்குக் குறைந்த எவரும் தமது வீடு போன்ற தனிப்பட்ட இடங்களில் அன்றி வேறெங்கும் மதுபானம் அருந்துவது

சட்டத்துக்கு முரணானதாகும். மதுபானப் பாவனையின் உடல்நல தீமைகள் பற்றி மேலதிக் தகவல்களைப் பெற அவுஸ்திரேலிய மதுபான வழிகாட்டலை (Australian Alcohol Guidelines) வாசிக்கவும்.

## இணையத் தகவல்

- www.alcohol.gov.au

## போக்குவரத்து சட்டங்கள்

மோட்டார் வாகனம் ஒன்றைச் செலுத்துதல் என்பது மாநில மற்றும் எல்லைப் பிராந்திய அரசாங்கங்களால் நெறிப்படுத்தப்படுகின்றது. அவுஸ்திரேலியாவில் வாகனம் ஓட்டுவதாயின், குடியிருப்பாளர்கள் உள்நாட்டு ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பதோடு, வாகனம் அவசியம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். போக்குவரத்து விதிமுறைகளை மீறுவதும், பின்பற்றாதிருப்பதும் பெரும் அபராதத்திற்கும், ஓட்டுநர் அனுமதிப் பத்திர இழப்பிற்கும் அல்லது சிறைத்தண்டனைக்கும் இட்டுச்செல்லக்கூடும். மோட்டார் வண்டியில் பிரயாணம் செய்யும் அனைவரும் இருக்கைப் பட்டிகளை அணிதல் கட்டாயமாகும் (அல்லது சிறுவர்கள், குழந்தைகள் விடயத்தில் அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் பேணப்படல் வேண்டும்).

சாரதி (ஓட்டுநர்) அனுமதிப்பத்திரங்களை பக்கம் 42 இல் பார்க்கவும்.

வேகக் கட்டுப்பாடு மற்றும் மதுபோதையில் வாகனம் ஓட்டுதல் ஆகிய விடயங்களில் போக்குவரத்து விதிமுறைகள் மிகக் கடுமையானவை. வாகனத்தை ஓட்டிச் செல்கையில் கையடக்க செல்லிடத் தொலைபேசியில் கதைப்பதும் சட்டவிரோதமாகும்.

## மிருகங்கள் மீது காருண்யம்

மிருகங்களை வதைப்பதோ, அலட்சியப்படுத்துவதோ சட்ட விரோதமானதாகும். வீட்டு விலங்காயினும், வன விலங்காயினும் எல்லா மிருகங்கள் மீதும் கருணை காட்ட வேண்டுமென மக்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது. சுதேச அவுஸ்திரேலிய மிருகங்கள் பல பாதுகாக்கப்படுவதோடு வேட்டையாடுவது சம்பந்தமாகக் கடுமையான சட்டங்களும் உள்ளன. தமது மற்றும் பிறரது இருப்பிடங்களில் மிருகங்களைக் கொல்வது தடைசெய்யப்பட்டுள்ளது அத்துடன் எத்தகைய மிருகங்களை வீடுகளில் வைத்திருக்கலாம் என்பது பற்றிய உள்நாட்டு சட்டவிதிகளும் உள்ளன. பெரும்பாலான அவுஸ்திரேலியர்கள் நாய், பூனை அல்லது பறவைகளைத் தமது வீட்டின் பின்புறத்தில் (கொல்லைப்புறத்தில்) வளர்க்கின்றனர்.

## துப்பாக்கிகளும் ஏனைய ஆயுதங்களும்

கத்தி, துப்பாக்கி போன்ற ஆயதங்களைக் கொண்டு திரிவது அவுஸ்திரேலியாவில் சட்டத்துக்கு முரணாகும். வேட்டையாடல், குறிபார்த்து சுடும் விளையாட்டு மற்றும் பண்ணைகளின் தேவைகளுக்கென துப்பாக்கி வைத்திருக்க விரும்புபவர் அதற்குரிய அனுமதிப் பத்திரத்தைப் பெற வேண்டும். அனுமதிப் பத்திரம் பெறாமையும் அனுமதிப் பத்திரமற்ற துப்பாக்கியை வைத்திருத்தலும் சட்டத்துக்கு முரணானவையாகும்.

## ஏனைய சட்டங்கள்

அசுத்தப்படுத்தல், மாசடையச் செய்தல் அல்லது முன் அனுமதியின்றி குப்பைகளை அகற்றல் மற்றும் அதிக சப்தம் ஏற்படுத்தல் போன்றவற்றுக்கு எதிராகவும் சட்டங்கள் உள்ளன.

அவுஸ்திரேலியாவில் மரண தண்டனை கிடையாது.

## சமூகப் பழக்கவழக்கங்கள்

அவுஸ்திரேலியாவில் மட்டுமே பின்பற்றப்படும் சமூக பழக்கவழக்கங்கள் மிகச்சிலவேயாகும். எனினும் சில விடயங்களைப் பொறுத்தமட்டில் அவுஸ்திரேலியாவில் ஏனைய நாடுகளை விட அணுகுமுறை மற்றும் நடைமுறை ஆகியவற்றில் வேறுபாடுகள் காணப்படலாம். ஆகையால் அது பற்றி சந்தேகம் ஏற்படுமிடத்து நண்பர், அயலவர் அல்லது சக ஊழியரிடம் விசாரித்துத் தெரிந்து கொள்வது நல்லது.

உதாரணமாக, பெரும்பாலான அவுஸ்திரேலியர்கள் தம்மோடு பரிச்சயமுள்ளோருடனும், சக உத்தியோகத்தர்களுடனும் சம்பிரதாயமற்ற சாதாரண நட்பை வைத்திருப்பது பொதுவாகும். வேலையிடங்களிலும், நண்பர்கள் மத்தியிலும் அவுஸ்திரேலியர்கள் ஒருவரையொருவர் தமது முதற்பெயரைக் கொண்டே அழைப்பர்.





எனினும் இச் சம்பிரதாயமற்ற பழக்கம் உடற் தொடுகை வரை செல்லாது. முதன் முதல் சந்திக்கும் இருவர் தத்தமது வலக்கரங்களைக் கொடுத்து கைலாகு செய்துகொள்வர். பரிச்சயமில்லாதவர்கள் கட்டியணைத்தல், முத்தமிடல் எனும் அளவுக்குச் செல்ல மாட்டார்கள்.

## பணிவான நடத்தை

அடுத்தோருடன் தொடர்புகொள்வதிலும், பொருட்கள் அல்லது சேவைகளப் பெறுதல் என்பவற்றிலும் 'பிளீஸ்' (Please) மற்றும் 'தேங்க் யூ' (thank you) போன்ற பதங்களைப் பயன்படுத்துவது பெரிதும் துணையாயிருக்கும். உங்களிடம் தேநீர் போன்ற 'ஏதாவது விரும்புகிறீர்களா?' எனக் கேட்கப்பட்டால், நீங்கள் விரும்புவதாயின் 'யெஸ், பிளீஸ்' அல்லது 'பிளீஸ்' என்றும் நீங்கள் அதனை விரும்பாதவிடத்து 'நோ, தேங்க் யூ' (இல்லை நன்றி) எனவும் கூறுவது பணிவடக்கமாகும். நீங்கள் ஏதாவது ஒன்றை எவரிடமிருந்தாவது பெறுகின்ற பொழுது, அதனைக் கொடுப்பவருக்கு 'உங்களுக்கு நன்றி' (thank you) எனக் கூறி நன்றி சொல்வது மரியாதையாகும்.

ஒருவரது கவனத்தை ஈர்ப்பதற்கு 'எக்ஸ்கியூஸ் மி' (excuse me) என்றும் இடைஞ்சலாக நடக்கவோ அல்லது மோதவோ நேர்ந்தால் 'ஸாரி' (sorry) என்றும் அவுஸ்திரேலியர் கூறுவர். அவ்வாறே பொது இடங்களில் அல்லது வேறொருவரது வீட்டில் ஏப்பமிட நேர்ந்தால் 'எக்ஸ்கியூஸ் மீ' அல்லது 'பார்டன் மீ' (pardon me) எனக் கூறுவர்.

வியாபார நிலையம், வங்கி, அரச திணைக்களம், சினிமா அல்லது பலரும் ஒரே நேரத்தில் சேவையைப் பெறக் காத்திருக்கும் அனைத்து இடங்களிலும் வரிசையில் நிற்பது அவுஸ்திரேலியரின் வழமை. தமது நேரம் வரும் வரை காத்திருப்பது பொதுவாக அவர்களது வழக்கம். அடுத்தவர்களுக்கு அவர்கள் காட்டும் மரியாதையை இது சுட்டிக்காட்டுவதோடு, ஒவ்வொருவரும் தமது தேவையைப் பெற்றுக் கொள்வதற்கான நியாயமான வழியும் இதுவாகும்.

கூட்டங்கள் அல்லது ஏனைய சந்திப்புகளுக்கு உரிய நேரத்தில் சமூகமளிப்பது மிக முக்கியமாகும். நீங்கள் தாமதமாகப் போவதாக உணர்ந்தால் உரியவரைத் தொடர்பு கொண்டு அறிவிக்க முயற்சிக்கவும். வைத்தியர் போன்ற உத்தியோகபூர்வ சந்திப்புகளின் போது இது மிக முக்கியமாகும். ஏனெனில் உங்கள் தாமதத்திற்காகவும் அல்லது முன் அறிவித்தல் இன்றி சந்திப்பைத் தவறவிட்டமைக்காகவும் நீங்கள் கட்டணம் செலுத்த நேரிடும்.

பெரும்பாலான அவுஸ்திரேலியர் தமது மூக்கை சிந்துவதற்கு கைக்குட்டை அல்லது திசுவைப் பயன்படுத்துவாரேயன்றி நடைபாதையை அசுத்தப்படுத்தமாட்டார்கள். மேலும் பொது இடங்களில் துப்ப மாட்டார்கள். நீங்கள் தும்முவதைக் கண்டால் பெரும்பாலானோர் 'ப்ளெஸ் யூ' (bless you) என்பர். இவ்வார்த்தைக்கு எவ்வித மத ரீதியான நோக்கமும் கிடையாது.

## தனிப்பட்ட சுகாதாரம் (Personal hygiene)

உங்களையும், உங்களது குடும்பம் மற்றும் ஏனையோரையும் நோய்களில் இருந்து பாதுகாப்பதற்கு சிறந்த வழி உங்களது தனிப்பட்ட சுகாரத்தைப் பேணுவதாகும். அவுஸ்திரேலியர்கள் உணவு தயாரிக்கும் முன்னும், சாப்பிடுமுன்னும், தும்மல் அல்லது இருமலுக்குப் பின்னும், கழிவறைகளை உபயோகித்த பின்னும், மிருகங்களைக் கையாண்ட பின்பும், அல்லது தமக்கோ பிறருக்கோ சுகாதார ஆபத்தேற்படுத்தும் விதத்தில் கிருமிகைளப் பரப்பக் கூடிய செயற்பாடுகளில் ஈடுபட்டதன் பின்பும் கைகளைக் கழுவிக் கொள்வதன் மூலம் தம்மையும் பிறரையும் பாதுகாத்துக் கொள்வர்.

உணவு பரிமாறப்படும் போது கிருமிகள் தொற்றுவதைத் தவிர்ப்பதற்காக அதற்குரிய உபகரணங்களை உபயோகித்துப் பரிமாறுவது வழமையாகும். அது கெளுக்கி, கரண்டி, முட்கரண்டி, மரக்குச்சுகள் (chopsticks) அல்லது சலெத் சர்வர் (salad server), போன்ற எதுவாகவும் இருக்கலாம்.

## உடை

மக்கள் அணிகின்ற உடை வகைகள் காலநிலைகளைப் பிரதிபலிப்பது போன்றே அவுஸ்திரேலிய சமுதாயத்தின் பல்லினத்தன்மையையும் பிரதிபலிக்கின்றன. உடை விடயத்தில் எவ்வித சட்டமோ விதிமுறையோ கிடையாது. எனினும் வேலை நிலைமைகளுக்கு உரிய உடைகளை அணிதல் அவசியமாகும் - அனேக வேலைத்தலங்கள் உடை சம்பந்தமான நடைமுறைகளைக் கொண்டுள்ளன.

தொழில் புரியும் இடத்துக்கு வெளியே உடை அணிவது தனிநபரின் தெரிவுக்கு உட்பட்டதாகும் - அனேகமானோர் காலநிலை, சமூக சூழ்நிலை அல்லது சௌகரியம் என்பவற்றிற்கு ஏற்ப உடையணிவர். களியாட்ட விடுதிகள், சினிமாக்கள் போன்ற இடங்களுக்கு சுத்தமான உடையணிந்து பொறுத்தமான பாதணியுடன் செல்ல வேண்டும்.

பல அவுஸ்திரேலியர்கள் கடற்கரைக்கும், கடலுக்கும் அருகாமையில் வாழ்கின்றனர். வெப்பம் அதிகமான நாட்களில் கடற்கரையிலும் அண்டிய பகுதிகளிலும் அவர்கள் நீச்சலுடையை அல்லது குறைந்த ஆடைகளை அணிவர். கடற்கரைக்கோ நீச்சலுக்கோ செல்வதற்கான உடையணிவோர் ஒழுக்க நெறியில் குறைந்தோர் என்பது இதன் பொருளாகாது. கடற்கரையிலும் அண்டிய இடங்களிலும் அவுஸ்திரேலியர் இதனையே அங்கீகரிக்கின்றனர் என்பதே இதன் பொருளாகும். சில அவுஸ்திரேலிய மாநிலங்களில் எண்ணிக்கையில் குறைந்த, ஒதுக்கப்பட்ட ஆடைக்களைப்புக் கடற்கரைப் பகுதிகள் உள்ளன. அவற்றில் எத்தகைய உடையுமின்றி மக்கள் நீச்சலில் ஈடுபடலாம்.

ஏனைய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அவரவர் கலாசாரத்திற்குப் பொருத்தமான ஆடைகளை அணியலாம்.

### அழைப்புகள்

பகலுணவு, இரவுணவு, பார்பகியூ, உபசாரம், திருமண வைபவம், பிறந்த நாள் விருந்து அல்லது இது போன்ற ஒரு நிகழ்ச்சிக்கு நீங்கள் அழைக்கப்பட்டால், அவ்விடத்திலேயோ, கடிதம் மூலமாகவோ, தொலைபேசியிலோ, மின்னஞ்சலிலோ அதற்குரிய பதிலை நீங்கள் சொல்வது வழமையாகும். நாளின் நடுப்பகுதியிலான உணவு பகலுணவு (lunch) எனவும் நாளின் மாலைப் பொழுதின் உணவு இரவுணவு (dinner) எனவும் அழைக்கப்படும். மாலையுணவை சில அவுஸ்திரேலியர் 'தேநீர்' (tea) எனவும் 'கப்பா' (cuppa) எனவும் அழைப்பதுண்டு. இப்பிரயோகம் இரவுணவையோ அல்லது மொழி ரீதியாக தேநீரையோ (cuppa) குறிக்கலாம். ஆதலால் நீங்கள் தேநீருக்கு அழைக்கப்படும் நேரத்திலிருந்து அது தேநீர் விருந்தா அல்லது இரவு உணவா என்பதைத் தீர்மானிக்கலாம். பிற்பகல் 6 மணிக்குப் (1800 மணி) பிறகுள்ள அழைப்பாயின் பெரும்பாலும் அது இரவு உணவையே குறிக்கும்.

நீங்கள் விருந்துக்கான அழைப்பை ஏற்பதாயின் நீங்கள் உட்கொள்ள விரும்பாத உணவைப் பற்றியும் அழைப்பவரிடம் சொல்வது வழக்கமாகும். நீர் ஏதும் விசேட உணவு வேண்டுதல்கள் அல்லது உணவுக்கட்டுப்பாடுகளை உடையவரா என வினவப்படக் கூடும். நீர் மாமிசம் அருந்தாத வெஜிடேரியன் என்றோ அல்லது பன்றி இறைச்சி சாப்பிடாத முஸ்லிம் அல்லது யூதர் என்றோ அவர்களிடம் சொல்லுவது முற்றிலும் அங்கீகரிக்கப்பட்ட விடயமாகும். விருந்து தருபவர் அருந்தினாலும் கூட நீங்கள் விரும்பாவிட்டால் நீங்கள் மதுபானம் அருந்த வேண்டியதில்லை.

## குடும்பங்களது மாறிவரும் பங்கு

பாரம்பரிய அவுஸ்திரேலியக் குடும்பம் தந்தை, தாய் மற்றும் பிள்ளைகளைக் கொண்டதாகும். ஏனைய குடும்பங்கள் வெவ்வேறு அமைப்புகளையும் அளவையும் கொண்டிருக்கும். பெற்றோரில் ஒருவரை மட்டும் கொண்ட குடும்பங்கள், இரண்டாம் தார மற்றும் கலப்புக் குடும்பங்கள், ஒரினச் சோடிகள், முறையான திருமணமின்றி ஒன்றாக வாழும் சோடிகள் (டி பெக்டோ உறவு - de-facto relationships) என பலவகைக் குடும்பங்கள் இங்கு உள்ளன. முறையான திருமணமின்றி தம்பதியர் இணைந்து வாழும் டி பெக்டோ உறவுமுறைகள் அவுஸ்திரேலிய சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

அவுஸ்திரேலிய குடும்பங்களுக்குள் பங்களிப்புகளும் வேறுபடலாம். சில குடும்பங்களில் பிரதான உழைப்பாளி தாயாக இருக்க தந்தை வீட்டில் இருந்து பிள்ளைகளைப் பராமரிப்பவராயிருப்பார்.

அவுஸ்திரேலியாவில் திருமணம் என்பது இருதரப்பினரும் திருமணம் முடிக்க விரும்பினாலேயே நடைபெறும். திருமணத்துக்குரிய ஆகக் குறைந்த வயதெல்லை 18 ஆகும். எனினும் அதை விடக் குறைந்த 16 அல்லது 17 வயதுடைய ஒருவரின் திருமணத்தை அசாதாரண நிலையில் நீதிமன்றம் அங்கீகரிக்கலாம். ஒரே சமயத்தில் ஒன்றிற்கும் மேற்பட்ட கணவர்களையோ, மனைவியரையோ வைத்திருப்பது சட்டவிரோதமானது.

### முன்மாதிரி அவுஸ்திரேலியன் யார்?

அவுஸ்திரேலியருக்கே உரித்தான அடையாளம் பற்றியும், உரிய பண்புகளைக் கொண்ட 'முன்மாதிரியான' அவுஸ்திரேலியர் உண்டா என்பது பற்றியும் அண்மைக் காலமாக நிறையவே பேசப்பட்டு வருகின்றது.

பிரபலமான மாதிரிகளுக்குக் (stereotypes) குறைவில்லை. ஆனால் சிலபோது அவை ஒன்றோடொன்று முரண்படும் போது குழப்பமடையச் செய்கிறது.





உதாரணமாக:

- அவுஸ்திரேலியர் மேலாதிக்கம் பற்றி ஆழ்ந்த ஐயம் கொண்ட தலைவணங்கா அபேத வாதிகள் - எனினும் பொதுவாக சட்டத்தை மதித்து அனுசரித்து நடப்பார்கள்.
- நாட்டுப் புறங்களிலும், கிராமப் பகுதிகளிலும் வாழ்கின்ற குறைவாகப் பேசும் தன்மையுடையவர்கள் அவுஸ்திரேலியர் - அதே வேளை அவர்களில் அநேகர் நகரங்களின் நகர வாழ்க்கை நடத்துபவர்.
- அவுஸ்திரேலியர்கள் நகரவாசிகளாயினும் நாட்டுவாசிகளாயினும் அவர்கள் திறந்த மனப்பான்மையுள்ளவர்கள் - தாம் சொல்ல விரும்புவதை நேரடியாகச் சொல்பவர்கள்.
- மக்களுக்கு உரிய நியாயமான வாய்ப்பை வழங்குதல் (fair go) எனும் கொள்கை மீது அவுஸ்திரேலியர் நம்பிக்கை கொண்டுள்ளனர். (அவுஸ்திரேலிய ஆங்கிலம் (Australian English) எனும் தலைப்பின் கீழ் ‘ஃபெயர் கோ’ பற்றிய வரைவிலக்கணத்தை வாசிக்கலாம்) பார்க்க பக்கம் 32.
- அவுஸ்திரேலியர் தமது சகபாடி (நண்பர்) களுக்காகவும், வாய்ப்பற்ற மற்றும் தோல்வியுறும் நிலையிலுள்ளோருக்காகவும் (underdog) ஆதரவளிப்பர். (ஒருவருக்கு எதிராகப் போட்டியிட்டு வெற்றி பெறும் சந்தர்ப்பமற்றவர் என நம்பப்படும் போட்டியாளரையே ‘underdog’ என்ற இப்பதம் குறிக்கும்.
- அவுஸ்திரேலியர்கள் பங்கேற்பவர்களாகவும், பார்வையாளர்களாகவும் இருந்து தமது விளையாட்டுகளில் ஆர்வம் செலுத்துகின்றனர்.

தமது பிரித்தானியப் பாரம்பரியம் அல்லது அண்மைக் காலமாக அமெரிக்காவுடனான பலமான உறவுகள் அல்லது யுத்தத்துக்குப் பிந்திய யுகத்தில் அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்த மில்லியன் கணக்கான புதிய குடியேறிகளால் அவுஸ்திரேலியர் எந்த அளவுக்கு செல்வாக்குக்கு உட்பட்டுள்ளனர் என்பது பற்றியும் கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன.

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் அமைந்துள்ள தமது புவியியல் நிலையுடன் ஒத்துப்போக முயற்சிக்கும் ஐரோப்பியர்களாக அவுஸ்திரேலியர்கள் சில வேளைகளில் நோக்கப்படுகின்றனர். ஆனால், அதேவேளை புவியியல் நிலையின் காரணமாக ஆசிய மொழிகளைப் பேசும் பெருந்தொகையினரான அவுஸ்திரேலியர்களைக் கொண்ட அவுஸ்திரேலியா ஆசியக் கண்டத்தின் நுழைவாயிலாகவும் நோக்கப்படுகிறது.

வாஸ்தவம் என்னவெனில் ஏனைய இடங்களிலுள்ள மக்களைப் போன்றே அவுஸ்திரேலியர்களை ஒரு மாதிரிக்குள் கொண்டுவர முடியாது. பிரபல்யமான சில தோற்றப்பாடுகளை அவர்கள் கொண்டிருப்பது உண்மையே. அத்தகைய சில தோற்றப்பாடுகளுடனாவது பெரும்பான்மை அவுஸ்திரேலியர்கள் ஒத்துப்போகின்றனர். எனினும் எவற்றை எந்த அளவுக்குப் பிரதிபலிக்கின்றனர் என்பது தனிநபரைப் பொறுத்த விடயமாகும்.

அவுஸ்திரேலியரோடு மிக நெருக்கமாக உள்ள சில பண்புகளாகக் கருகப்படுகின்ற தோழமை (நட்பு [mateship]), நியாயம் பேணல் (fair go) போன்றன உலகின் பல பாகங்களிலும் உள்ள மக்களால் பகிர்ந்து கொள்ளப்படும் பண்புகளாகும். மிகையான கருணையையும், நியாய உணர்வும், நண்பர்களுக்கான விசுவாசமும் அவுஸ்திரேலியர்களுக்கே உரித்தானது என்று சொல்வதற்கில்லை.

இவ்விடயங்களைப் பற்றிய அவுஸ்திரேலிய சிறப்பம்சம் என்னவெனில் இவை அவுஸ்திரேலிய வரலாற்றிலும் அவுஸ்திரேலிய மனப்பாங்கிலும் ஆழப் பதிந்துள்ளன என்பதேயாகும்.

அவுஸ்திரேலியாவுக்கு வந்த ஆரம்பக் குடியேறிகள் எதிர்கொண்ட பரிச்சயமற்ற, கடுமையான, பெரும்பாலும் விரோதமான சூழ்நிலையை எதிர்கொள்வதற்கான போராட்டத்தின் ஊடாக தோழமை மற்றும் நியாயம் பேணல் போன்ற கோட்பாடுகள் வளர்ச்சியடைந்தன. அவை அவுஸ்திரேலியாவின் உட்புறங்களில் வாழ்ந்த பின்வந்த பரம்பரைகளின் ஆண் பெண் இரு பாலராலும் வெள்ளம், தீ, வரட்சி போன்ற இடர்களின் போது ஒத்துழைப்பு மற்றும் ஆதரவு மூலம் மீளப் பலப்படுத்தப்பட்டன.

நியூ சவுத் வேல்சின் கிரென்ஃபெல் தங்கவயல்களில் 1867 இல் பிறந்த ஹென்றி லோவ்சன், அந்த யுகத்தின் வரலாற்றைத் தொகுத்த மிகப் பிரதானமானவர். அவுஸ்திரேலிய நாட்டுப்புற வாழ்க்கையில் தோழமை குறித்து எளிமை, இரக்கத் தன்மையுடன் அவர் எழுதினார். அவுஸ்திரேலிய நாட்டுப்புறப் பகுதிகளில் ஆண்கள், பெண்களின் வாழ்க்கை நிலை பற்றியும், மானிடரது கௌரவம் பற்றியும் அவர் எழுதினார்.

மாபெரும் போர் என சிலவேளைகளில் குறிப்பிடப்படுகின்ற முதலாம் உலக யுத்தம் மற்றும் கலிபோலியில் அன்ஸக் வீரர்களது போர் போன்றவற்றில் அவுஸ்திரேலியர்கள் பெற்ற அனுபவங்களால் தோழமைப் பண்பும், விசுவாசமும் அவர்களின் உள்ளங்களில் ஆழப்பதிந்து வளம் பெற்றன.

ஆரம்பகாலம் தொட்டு அவுஸ்திரேலியர்கள் பேணிக்காத்துவந்த இது போன்ற இன்னும் பல பண்புகள் பிற்காலங்களில் ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் மத்தியக் கிழக்கு நாடுகளில் இருந்து வந்து குடியேறிய மில்லியன் கணக்கானோரின் செல்வாக்கினால் புடமிடப்பட்டு, வளமூட்டப்பட்டு இன்றும் உயிர் வாழ்கின்றன.

அண்மைக்காலத்தில் வதிவிட அந்தஸ்து பெற்றவர்களும் அவுஸ்திரேலியாவின் பண்பாட்டுக்கும் கலாசாரத்துக்கும் வளமூட்டினர். புதிய பாரம்பரியங்களும் மனப்பாங்குகளும் உருவாக இவர்கள் துணை நின்றனர். வியாபாரம் முதல் கலை வரை, சமையல் முதல் விகடம் வரை என அவுஸ்திரேலிய வாழ்வின் அனைத்து அம்சங்களுக்கும் மெருகூட்டுவனவாக அவர்களது பங்களிப்பு காத்திரமானதாய் அமைந்தது.

## தொண்டர் சேவை – நடைமுறைத் தோழமை

எத்தகைய சம்பளமும் இன்றி, சமூகப் பணிகளில் சுய விருப்பத்துடன் தொண்டு புரிபவர்கள் என பெயர் பெற்றவர்கள் அவுஸ்திரேலியர்கள். 18 வயதுக்கு மேற்பட்ட ஆறு மில்லியனுக்கும் மேற்பட்ட அவுஸ்திரேலியர்கள் சுயவிருப்பத் தொண்டர்களாகச் செயற்படுகின்றனர். அவசரகால சேவைகள், சமூக நலன், சூழல் பாதுகாப்பு, நிதி சேகரிப்பு, முகாமைத்துவம், கற்பித்தல் மற்றும் நிர்வாகம் என பல்வேறு துறைகளில் அவர்கள் உதவி வருகின்றனர்.

அவுஸ்திரேலியாவின் காட்டுத் தீயணைப்பாளர்கள் மற்றும் அவசரகால உதவி வழங்கும் அதிகாரிகளில் அனேகமானோர் தொண்டர்களாவர்.

ஒரு கணிப்பீட்டின் படி தொண்டு செய்வோரில் 47 சதவீதமானோர் சமூகத்திற்குப் பணி புரிய வேண்டும் என்ற உணர்வுக்காகவும் 43 சதவீதமானோர் தனிப்பட்ட முறையில் அதில் பெறும் மனத்திருப்திக்காகவும் அத்தகைய பணிகளில் ஈடுபடுவதாகக் கூறியுள்ளனர்.

### இணையத் தகவல்

- அவுஸ்திரேலிய தொண்டர் பணி www.volunteeringaustralia.org

## அவுஸ்திரேலிய ஆங்கிலம்

ஆங்கிலம் அவுஸ்திரேலியாவின் தேசிய மொழியாக உள்ள அதேவேளை, பரவலான உபயோகம் காரணமாக சில சொற்களும், சொற்றொடர்களும் அவுஸ்திரேலியாவுக்கே உரிய தனித்துவமான பிரயோகங்களாகக் கருதப்படுகின்றன. அவற்றில் சில, புதிதாக வருபவருக்கு ஆச்சரியமானதாக அல்லது குழப்பமானதாகத் தோன்றலாம்.

இத்தகைய பேச்சுவழக்கிலுள்ள அல்லது கொச்சையான சொற்கள் பல்வேறு மூலங்களில் இருந்து உருவெடுத்தவை. அவற்றில் சில நீண்ட சொற்களின் சுருக்கங்களாகும். பெரும்பாலானவை, வடக்கு இங்கிலாந்தில் இருந்து வந்து குடியேறியவர்கள் ஏற்கனவே உபயோகித்த சொற்றொடர்கள். அவை பின்னர் அவுஸ்திரேலிய வழக்கில் இணைந்து கொண்டன. அவுஸ்திரேலியர்கள் சொற்களை சுருக்கிச் சொல்லும் பழக்கம் உடையவர்கள். உதாரணமாக கால்ப் பந்தாட்டத்தை '∴புட்டி' (footy) என்றும் டெலிவிஷனை 'டெல்லி' (telly) என்றும் பார்பெகியூ என்பதை 'பார்பி' (barbie) என்றும் கூறுவர்.

அவுஸ்திரேலியருக்கே உரித்தான தலைவணங்காமையும், துன்பியல் அனுபவங்களும் கலந்த நகைச்சுவையுடன் இத்தகைய சில வார்த்தைகள் உபயோகப்படுத்தப்படுகின்ற போது சிலவேளை குழப்பமூட்டக்கூடியதாகத் தோன்றலாம்.

சொல்லப்பட்ட வார்த்தை புரியவில்லையெனின், சொன்னவரிடமே அதனை விளக்கக் கோருவதில் தப்பில்லை.

நீங்கள் அடிக்கடி செவிமடுக்க நேரிடக் கூடிய சில பிரயோகங்களை இங்கு தருகிறோம்.

Arvo: இது afternoon என்ற சொல்லின் சுருக்கம் – drop by this arvo என்றால் பின்பகல் வந்து சந்தியுங்கள் என்று பொருள்.

Barbecue, BBQ, Barbie: பொதுவாக இறைச்சியை இரும்புத் தட்டத்தில் அல்லது உலோகத் தட்டில் வைத்து வாயு அல்லது கரி பாவித்து வீட்டுக்கு வெளியே சுட்டுச் சமைப்பதைக் குறிக்கும். இந்த இறைச்சி சலாது அல்லது பாணுடன் (ரொட்டியுடன்)







பரிமாறப்படும். பார்பெக்யூவுக்கு அழைக்கப்பட்டால் தானும் ஏதாவது கொண்டுவர வேண்டுமா என விசாரிப்பது விருந்தாளியின் வழமை. Snag என்பது பார்பக்கியூவில் சமைக்கப்படும் ஒரு வகை சொஸேஜ் (sausage) ஆகும். அது பன்றி, மாட்டு அல்லது கோழி இறைச்சியாலோ காய்கறிகளாலோ அல்லது தானியங்களாலோ செய்யப்பட்டிருக்கலாம்.

**Barrack for:** ஆதரவாளித்தல், உற்சாகமூட்டல் (குறிப்பாக ஒரு விளையாட்டுக் குழுவிற்கு)

**Bloke:** ஒரு மனிதனைக் குறிக்கும். சிலவேலை நீங்கள் ஒருவரிடம் உதவி கோரினால் அவர் 'அதோ அந்த மனிதரை (bloke) நாடவும்' என பதிலளிக்கக் கூடும்

**Bring a plate:** நீர் ஒரு விருந்துக்கு அல்லது சடங்கிற்கு அழைக்கப்பட்டு 'bring a plate' என்றும் கூறப்பட்டால், விருந்தளிப்பவருடனும், விருந்தினர்களுடனும் பகிர்ந்துகொள்வதற்காக ஏதாவது ஒரு தட்டு உணவை நீங்களும் கொண்டு வாருங்கள் என்பது அதன் பொருளாகும். பாடசாலை, வேலை இடங்கள், கழகங்கள், போன்ற சமூக ஒன்றுகூடல்களில் இவ்வழமை பொதுவாகும். எதைக் கொண்டு செல்வது என்பது பற்றிய தெளிவு இல்லாத போது அழைத்தவரிடமே கேட்டுப் புரிந்துகொள்ளலாம்.

**BYO:** உங்களுக்கு வந்த அழைப்பிதழில் 'BYO' எனக் குறிக்கப்பட்டிருந்தால் அதன் பொருள், உங்களுக்குரிய குடிபானங்களை நீங்கள் கொண்டு வரவேண்டும் என்பதாகும். நீங்கள் மதுபானம் அருள்துவதில்லையெனில், மென்பானம், சோடா, பழச்சாற்றை அல்லது தண்ணீரை நீங்கள் எடுத்துச் செல்லலாம். சில உணவு விடுதிகள் 'BYO' முறை கொண்டவை. உமக்குரிய மதுபானங்களை நீங்கள் அங்கு எடுத்துச் செல்லலாம். ஆயினும் புட்டிகளைத் திறத்தல், பரிமாறுதல், கிண்ணங்களை வழங்குதல், சுத்தம் செய்தல் போன்றவற்றிற்காக 'கார்க்கேஜ்' (corkage) எனப்படும் சேவைக்கட்டணம் அறவிடப்படும்.

**Cuppa:** இது தேநீர் அல்லது காப்பியைக் குறிக்கும். 'Drop by this arvo for a cuppa' என்றால் 'இன்று பிற்பகல் தேநீர் அல்லது காப்பி அருந்த வாருங்கள்.' என்பது பொருள்.

**Digger:** ஓர் அவுஸ்திரேலிய இராணுவ வீரன்.

**Go for your life:** ஆமாம், முன்னே செல்லுங்கள்.

**G'day:** ஹலோ, எப்படி சுகம்?

**Fair go:** சமமாக நடத்துதல். வாழ்க்கையில் ஒருவர் எதனையும் அடையப் பெறுவதாயின் அது அவரது திறமைகள், உழைப்பு, முயற்சி என்பனவற்றின் விளைவாக அன்றி பிறப்பாலோ அல்லது சிபார்சினாலோ பெற்றதாக இருத்தல் கூடாது என்பது இதன் பொருள்.

**Fortnight:** இப்பதமானது இரண்டு வார காலத்தைக் குறிக்கும்.

**No worries:** எந்தப் பிரச்சினையும் இல்லை. வேலை அல்லது வேண்டுகோள் எவ்வித இடைஞ்சலுமின்றி சுமுகமாக மேற்கொள்ளப்படும்.

**Ocker:** ஒரு முரட்டுத்தனமுள்ள, பண்பு நயமற்ற, தீவிர நாட்டுப் பற்று கொண்ட ஒரு அவுஸ்திரேலியன் / அல்லது அவுஸ்திரேலியனுக்கேயுரிய பண்புகளான விகடம், உதவி புரிதல், ஆக்கபூர்வத் தன்மை ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் ஒரு அவுஸ்திரேலியன்.

**Shout:** ஒருவருக்காக குடிபானம் வாங்குதல். மதுபானம் அருந்தும் விடுதிகளில் நண்பர்கள் சந்தித்துக் கொண்டால் ஒவ்வொருவரும் ஒரு முறை 'shout a round' செய்வது, அதாவது ஒரு சுற்று மதுபானம் வாங்கி ஒவ்வொருவருக்கும் கொடுப்பது வழமையாகும்.

**To be crook:** நோய்வாய்ப்பட்டு அல்லது சுகவீனமுற்றிருத்தல்.

அவுஸ்திரேலிய பேச்சு மொழி மற்றும் கொச்சையான பிரயோகங்கள் பற்றிய பல புத்தகங்கள் உள்ளன. *Macquarie Dictionary Book of Slang* அவற்றில் ஒன்றாகும்.

## கொண்டாட்டங்களும் விடுமுறைகளும்

தேசிய முக்கியத்துவம் அல்லது குறிப்பிடத்தக்க நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சில நாட்களை ஒவ்வொரு வருடமும் அவுஸ்திரேலியர்கள் நினைவு கூர்கின்றனர்.

அனேகமான அவுஸ்திரேலியத் தொழிலாளர்கள் அவர்களது வருடாந்த விடுமுறைகளுக்கு மேலதிகமாக 12 தேசிய மற்றும் மாநில/எல்லைப் பிராந்திய விடுமுறை தினங்களைப் பெறுகின்றனர்.

இவற்றில் சில தினங்கள் வழமையாக எல்லா மாநிலங்களிலும், எல்லைப் பிராந்தியங்களிலும் ஒரே நாளில் அனைவராலும் அனுஷ்டிக்கப்படுகின்ற விடுமுறை தினங்களாகும். இவற்றில் சில தேசிய மட்டத்தில் விசேட வைபவங்களுடன் கொண்டாடப்படும். சில உள்ளூர் விடுமுறை தினங்கள் குறிப்பிட்ட மாநிலங்களில் அல்லது எல்லைப் பிராந்தியங்களில் மாத்திரம் அனுஷ்டிக்கப்படும்.

**கிறிஸ்மஸ் மற்றும் ஈஸ்டர்:** கிறிஸ்தவ காலண்டரில் உள்ள மிக முக்கிய இரு தினங்கள் அவுஸ்திரேலியா முழுவதும் பொது விடுமுறையாக அனுஷ்டிக்கப்படுகின்றன. கிறிஸ்மஸ் ஒவ்வொரு டிசம்பர் 25 இலும் ஈஸ்டர் தினம் மார்ச் இறுதியில் அல்லது ஏப்ரல் ஆரம்பத்திலும் வரும்.

### பாக்சிங் தினம்

பாக்சிங் தினமாகிய டிசம்பர் 26 ஆம் திகதி பொது விடுமுறை தினமாகும். இந்த நாளில் பாக்சிங் - குத்துச் சண்டைப் போட்டிகள் நடந்திருக்கலாம் எனவும் அல்லது பெட்டிகளில் பரிசுப் பொருட்கள் கொடுக்கப்பட்டிருக்கலாம் எனவும் பலர் கருதுகின்றனர். கிறிஸ்மஸ் பண்டிகையினைச் சார்ந்ததாகவே பாக்சிங் தினமும் கருதப்படுகிறது.

**புது வருட தினமாகிய ஜனவரி மாதம்** 1 ஆம் திகதி பொது விடுமுறை தினமாகும். டிசம்பர் நடுப்பகுதியிலிருந்து ஜனவரி முடியும் வரையான காலப்பகுதியில் பெரும்பாலான அவுஸ்திரேலியர்கள் தமது வருடாந்தர விடுமுறைகளை எடுத்துக் கொள்கின்றனர்.

## இன்னும் சில முக்கிய தேசிய தினங்களாவன:

### அவுஸ்திரேலியா தினம்

அவுஸ்திரேலியாவில் 1788 இல் முதலாவது ஐரோப்பிய குடியேற்றம் நிகழ்ந்த நாளாகிய ஜனவரி 26 ஆம் திகதியை அவுஸ்திரேலிய தினம் என அவுஸ்திரேலியர்கள் அனுஷ்டிக்கின்றனர். இது தேசிய பொது விடுமுறை தினம். புதிதாய்க் குடியேறியோர்கள் அவுஸ்திரேலிய தின வைபவங்களில் கலந்துகொண்டு ஏனைய அவுஸ்திரேலியர்களைச் சந்திக்கலாம்.

### அன்ஸக் தினம்

முதலாம் உலக யுத்தத்தின் போது அவுஸ்திரேலிய நியூசிலாந்து இராணுவத் துருப்புக்கள் (அன்சக்ஸ்) துருக்கியின் கலிபொலி தீவில் 1915, ஏப்ரல் 25 ஆம் திகதி தரையிறங்கியதை அன்ஸக் தினம் குறிக்கிறது. அவுஸ்திரேலியாவுக்காக போர் புரிந்தவர்களையும், போரில் மடிந்தவர்களையும் நினைவு கூர்வதற்கென இந்நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தேசிய பொதுவிடுமுறை தினம். இராணுவ அணிவகுப்புகள், மலர்வளையம் வைத்தல் மற்றும் வேறு வைபவங்களுடன் இந்நாள் அனுஷ்டிக்கப்படும்.

### மகாராணியின் பிறந்த தினம்

மேற்கு அவுஸ்திரேலியா தவிர எல்லா மாநிலங்களிலும், எல்லைப் பிராந்தியங்களிலும் ஜுன் மாத இரண்டாம் திங்கட் கிழமை வருடாவருடம் மகாரணியாவின் பிறந்த தினம் கொண்டாடப்படும். இது பொதுவிடுமுறை தினமாகும். மேற்கு அவுஸ்திரேலியாவில் இது செப்டம்பர் அல்லது அக்டோபரில் கொண்டாடப்படும்.

### அவுஸ்திரேலிய குடியுரிமைத் தினம்

அவுஸ்திரேலிய குடியுரிமைத் தினம் 2001 செப்டம்பர் 17ம் திகதி உருவாக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டின் தேசியம் மற்றும் குடியுரிமைச் சட்டமானது 1973ம் ஆண்டில் அவுஸ்திரேலிய குடியுரிமைச் சட்டம் (Australian Citizenship Act) என பெயர் மாற்றம் செய்யப்பட்டதைக் குறிப்பதற்காக இது தோற்றுவிக்கப்பட்டது. இத்தினம், அவுஸ்திரேலிய குடியுரிமையின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவும், நம்மைப் பிணைத்திருக்கும் விழுமியங்களைக் கொண்டாடவும் அவுஸ்திரேலியர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குகிறது. எனினும், இது பொது விடுமுறை தினமன்று.

### மெல்பர்ன் கோப்பை தினம்

ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாத முதலாவது செவ்வாய்க் கிழமை மெல்பர்ன் கோப்பை தினமாகும். இது உலகப் பிரசித்தி பெற்ற குதிரைப் பந்தயக் கோப்பையாகும். பெரும்பாலான மக்கள், வேலைத் தளத்தில், பாடசாலையில் அல்லது வீட்டில் இருப்பினும் தொலைக்காட்சியில் இப்பந்தயத்தைக் காண்பர். மேல்பர்ன் மாநகரில் இது பொதுவிடுமுறை தினமாகும். வேறு







இடங்களில், குறிப்பாக தொழில் பார்க்கும் இடங்களில் பலர் ஒன்று கூடி பகலுணவு அருந்தி அல்லது விருந்துண்டு களித்து மெல்பர்ன் கோப்பையைக் கொண்டாடுவர்.

## விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் கலைகள்

பல அவுஸ்திரேலியர்கள் விளையாட்டை விரும்புகின்றனர் மற்றும் அநேகர் அத்துறையில் சிறந்த பல சாதனைகளையும் புரிந்துள்ளனர். 2004ம் ஆண்டு எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில், மொத்தப் பதக்கப் பட்டியலில் அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக நான்காவது இடத்தை அவுஸ்திரேலியா பெற்றது. கால்பந்தாட்ட உலகக் கோப்பைக்கான 2006 ஆம் ஆண்டு போட்டிகளில் இறுதி 16 நாடுகள் வரை அவுஸ்திரேலியா முன்னேறியது.

உயர் மட்ட அவுஸ்திரேலியர்கள் மட்டும் விளையாட்டுகளில் மகிழ்பவர்களல்லர். அண்மையில் நடத்தப்பட்ட தேசிய மட்டக் கணிப்பீடொன்றின் படி பதினைந்துக்கும் அதற்கு மேற்பட்ட வயதையும் கொண்ட 11 மில்லியன் அவுஸ்திரேலியர்கள் வாரத்திற்கு குறைந்தது ஒரு முறை உடற்பயிற்சியிலும், பொழுதுபோக்கிலும், விளையாட்டுகளிலும் ஈடுபடுவதாகத் தெரியவந்துள்ளது. ஈடுபாடு கொள்வோரின் சதவீதம் கிட்டத்தட்ட 70 விழுக்காடாகும்.

நடத்தல், திறந்தவெளி உடற்பயிற்சி/உடல்நலம், நீச்சல், சைக்கிளோட்டம், டெனிஸ், குழிப்பந்தாட்டம் (golf), ஓட்டம், காட்டில் நடத்தல், கால்பந்து, வலைப்பந்து என்பன மிகப் பிரபல்யமான 10 உடற்பயிற்சிகளாகும்.

கிரிக்கெட், ஹாக்கி, பனிச் சருக்கல் என்பனவும் ஏனைய பிரபல்யமான விளையாட்டுகளாகும்.

அவுஸ்திரேலியர்கள், ரக்பி லீக், ரக்பி யூனியன் மற்றும் அவுஸ்திரேலிய விதிகள் கால்பந்து (Australian Rules Football) போன்றவற்றில் ஈடுபடுவதிலும் – மற்றும் ரசிப்பதிலும் – ஆர்வம் காட்டுவர். அவுஸ்திரேலிய விதிகள் கால்பந்தானது ரக்பி மற்றும் கேலிக் காற்பந்து (Gaelic football) விளையாட்டுகளின் ஆரம்ப நிலைமைகளில் இருந்து உருப் பெற்ற, அவுஸ்திரேலியாவுக்கே தனித்துவமான ஒரு வகை விளையாட்டாகும்.

வெளியரங்க விளையாட்டுகளுக்கு அவுஸ்திரேலியா மிகப் பொருத்தமான இடம் எனினும் பின்வரும் சில பாதுகாப்பு விதிகளை நினைவில் வைத்திருப்பது நலம்.

- கடற்கரையோரங்களில், உயிர் காப்பாளர்கள் ரோந்தில் ஈடுபடும் இடங்களில் மாத்திரம் நீச்சலில் இறங்கவும். எப்போதும் கொடிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் நீந்தவும் மற்றும் எல்லாக் கரையோரங்களிலும் உயிர்க் காப்பாளர்கள் இல்லை என்பதை நினைவில் கொள்ளவும்.
- குறிப்பாக ஒதுக்குப் புறமான இடங்களில் தனியாக நீந்துவதையோ, மீன் பிடிப்பதையோ தவிர்க்கவும்.
- தொப்பி, குளிர்க் கண்ணாடி, (மேற்சட்டை போன்ற) பாதுகாப்பு ஆடை போன்றவற்றை அணியவும். நிழலான இடத்தை நாடவும். வெப்பம் அதிகமுள்ள நாட்களில் சூரிய எரிவு, தோல் புற்றுநோய் என்றவற்றிலிருந்து காத்துக் கொள்ள காப்பு மருந்துகளைத் தடவிக் கொள்ளவும்.
- சகல வித தீ மூட்டுதலும் தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படும் நாட்களில் திறந்த வெளிகளில் தீ மூட்டுவதோ, பார்பெக்யூ செய்வதோ அனுமதிக்கப் படுவதில்லை என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

## காத்திரமான கலைத் துறை

தேசத்தின் பூர்வீகக் குடிகளது கலாசாரப் பாரம்பரியங்களையும், குடியேறிகளது கலாசாரங்களது கலவையையும் பிரதிபலிக்கின்ற உற்சாகமான கலா நடவடிக்கைகள் அவுஸ்திரேலியாவில் தாராளமாக மேற்கொள்ளப்படுகின்றன.

சினிமா, அழகியல் கலை, நாடகம் மற்றும் சங்கீதம் உட்பட சகல காட்சி மற்றும் நாடக கலா வடிவங்கள் அனைத்தும் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெறுகின்றன. ஒரு கணிப்பீட்டின்படி 13 மில்லியன் வயது வந்த அவுஸ்திரேலியர்கள், அல்லது 88 சதவீதமானோர் வருடத்தில் குறைந்தது ஒருமுறையாவது கலாசார நிகழ்ச்சியொன்றினைக் கண்டு ரசிக்கின்றனர்.

அவுஸ்திரேலியாவின் இலக்கியப் பாரம்பரியமும் பலம் வாய்ந்தது. அவுஸ்திரேலிய பூர்வீகக் குடிகளின் கதைசொல்லும் வழக்கத்தில் ஆரம்பித்த இப் பாரம்பரியம் 18 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பாகத்தில் இங்கு வந்த தண்டனைக் கைதிகளின் வாய்வழிக் கதைகள் மூலம் தொடர்ந்தது.

இலக்கியத்துக்காக வழங்கப்படும் நோபல் பரிசை 1973ம் ஆண்டில் அவுஸ்திரேலியரான பட்ரிக் வைட் எனும் நாவலாசிரியர் வென்றார். பீடர் கெரீ, பிரைஸ் கொட்னீ, கொலீன் மக்லூ, மொரீஸ் வெஸ்ட் மற்றும் டிம் வின்டன் போன்றோர் 20 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரபல்யமான அவுஸ்திரேலிய நாவலாசிரியர்களாவர்.

### இணையத் தகவல்

- தொடர்பாடல், தகவல், தொழில் நுட்பம் மற்றும் கலைகள் திணைக்களம் www.dcita.gov.au
- அவுஸ்திரேலியா கவுன்சில் www.ozco.gov.au
- அவுஸ்திரேலிய விளையாட்டு ஆணையம் www.ausport.gov.au

## அறிவியல் சாதனையாளர்களும் கண்டுபிடிப்பாளர்களும்

அவுஸ்திரேலியர்கள், குறிப்பாக மருத்துவம், தொழில் நுட்பம், விவசாயம், சுரங்கத் தொழில் மற்றும் உற்பத்தித் துறை போன்றன உட்பட அறிவியல் விஞ்ஞானத் துறையிலும், புதிய கண்டுபிடிப்புகளிலும் பலமான பல சாதனைகளைப் புரிந்துள்ளர்.

அவுஸ்திரேலியாவின் முதலாவது புதின உருவாக்கிகள் பூர்வீகக் குடிகளாவர். உலகின் புராதன கல் கருவிகள், பூமராங்கு (boomerang), (முறைப்படி எறிந்தால் எறிந்தவர் கைக்கே மீளவும் வந்து சேரும் ஒரு வகை வளைதடி) மற்றும் வூமெரா (woomera) (ஈட்டி எறிவதற்குப் பயன்படும் பிடி) போன்றவற்றை அவர்கள் வடிவமைத்தனர்.

அண்மைக் காலக் கண்டுபிடிப்புகளில் ஒன்றாக பொலிமர் (polymer) வங்கிப் பத்திரங்களை (பண நோட்டுகள்) வடிவமைத்தமையைக் குறிப்பிடலாம். இவை உள்ளார்ந்த பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளதோடு ஏனைய வங்கிப் பத்திரங்களை விட நான்கு மடங்கு அதிக காலம் நீடிக்கவல்லது. உலகின் பயிர்களது உற்பத்தித் திறனை அதிகரிக்கும் தாவர மரபணுவைக் கண்டுபிடித்தமையும் முக்கியாமானது. மருத்துவத் துறை சார்ந்த சாதனைகளிலும், வெடிக்காத வெடிமருந்துகளையும் கண்ணி வெடிகளையும் கண்டறிவதற்கான ஒரு தொழில் நுட்பத்தை அபிவிருத்தி செய்ததிலும் அவுஸ்திரேலியர்கள் முன்னணி வகிக்கின்றனர்.

உலகின் முதலாவது இன்ஃபுலுவன்சா (influenza) காய்ச்சலுக்கு எதிர்ப்பு மருந்தான Relenza வை உற்பத்தி செய்தமையும், சூரிய ஒளியால் தோலில் ஏற்பட்ட புற்றுநோய் பகுதிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் சாதனமும், கர்ப்பப் பையின் கழுத்துப் பகுதியில் ஏற்படும் புற்றுநோய்க்கான தடுப்பு மருந்தும் குறிப்பிடத்தக்க சில அண்மைக்கால மருத்துவ சாதனைகளாகும்.

மருத்துவ அல்லது விஞ்ஞான ரீதியான சாதனைகளுக்காக ஒன்பது அவுஸ்திரேலியர்கள் நோபல் பரிசு பெற்றுள்ளனர். மிக அண்மையில் பேராசிரியர் பெரி மார்ஷல் மற்றும் டாக்டர் ராபின் வோரன் ஆகியோர் வயிற்று அழற்சியையும் குடல் அழற்சியையும் தோற்றுவிக்கும் பக்டீரியாவைக் கண்டுபிடித்தமைக்காக நோபல் பரிசை 2005 இல் பெற்றனர். நோய்க்காப்புத் துறையில் சாதனை நிகழ்த்தியமைக்காக பேராசிரியர் பீடர் டோஹெர்டி 2006 இல் நோபல் பரிசு பெற்றார்.

ஒவ்வொரு வருடமும் அவுஸ்திரேலிய தினத்தில் வருடத்தின் ‘சிறந்த அவஸ்திரேலியர்’ யார் என்பது அறிவிக்கப்படும். 2005, 2006 மற்றும் 2007ஆம் ஆண்டுகளில் வருடத்தின் சிறந்த அவுஸ்திரேலியராகத் தெரிவானோர் விஞ்ஞானிகள் ஆவர். தீக்காயம் ஏற்பட்டோரின் உடலில் பூசக் கூடிய ஒருவகை தெளி மருந்தை புரட்சிகரமாக உற்பத்தி செய்த டாக்டர் பியோனா வூட் 2005 இல் இவ்விருதைப் பெற்றார். கர்ப்பப் பை கழுத்துப்பகுதியில் உண்டாகும் புற்றுநோய்க்கான தடுப்பு மருந்தை கண்டுபிடித்தமைக்காக 2006 இல் பேராசிரியர் இயன் ஃபிரேஸருக்கு இவ்விருது வழங்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டில் முன்னணி சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு விஞ்ஞானியான டிம் பிளெனரி சிறந்த அவுஸ்திரேலியராகத் தெரிவு செய்யப்பட்டார்.

டாக்டர் வூட் மற்றும் பேராசியர் ஃபிரேசர் ஆகிய இருவரும் முன்னாள் பிரித்தானிய குடியேறிகளாவர். பேராசியர் ஃபிரேசருடன் கண்டுபிடிப்பில் கலந்து கொண்ட இணை விஞ்ஞானி சீனாவில் இருந்து வந்து அவுஸ்திரேலியாவில் குடியேறிய காலஞ்சென்ற டாக்டர் ஜியான் சியூ ஆவார். இவர் இறப்பதற்கு முன்னர் அவுஸ்திரேலியப் பிரசையாகி இருந்தார்.

### இணையத் தகவல்

- கல்வி, விஞ்ஞான மற்றும் பயிற்றுவித்தல் இலாகா www.dest.gov.au
- அவுஸ்திரேலிய ஆற்றலுக்கு ஆதரவு www.innovation.gov.au
- பொதுநலவாய விஞ்ஞானம் மற்றும் தொழில்துறை ஆய்வு நிறுவனம் www.csiro.au

# அவுஸ்திரேலியாவில் வசித்தல்

## தொழில்வாய்ப்பும் வேலைச் சூழ்நிலைகளும்

அவுஸ்திரேலியாவின் தொழிலாளர் சந்தை போட்டி நிறைந்தது. புதிதாக வருபவர்கள் எவ்வளவு விரைவில் அவுஸ்திரேலியாவில் ஒரு தொழிலைத் தேடிக் கொள்ள இயலும் என்பது பொருளாதாரக் காரணிகள், ஒருவரது தகுதிகள், திறமைகள், தேடும் தொழில் வகை, நாட்டின் பல பாகங்களிலும் குறிப்பிட்ட தொழில்வாய்ப்பில் தாக்கம் விளைவிக்கும் குறிப்பிட்ட சில சூழ்நிலைகள் போன்றவற்றை பொறுத்தே அமையும்.

அவுஸ்திரேலியாவுக்கு வருவதற்கு முன்னரே, குடியேறிகள் தமக்குரிய தொழில்வாய்ப்புகள் பற்றியும் தாம் செய்ய விரும்பும் தொழில் சம்பந்தமான விசேட நிபந்தனைகளை பற்றியும் தேடி அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அவுஸ்திரேலியாவில் பல தொழில்களைப் பொறுத்தளவில் விண்ணப்பதாரிகள் அவுஸ்திரேலியாவின் மாநில அல்லது எல்லைப் பிராந்திய தொழில்சார் இசைவு மையத்தில் பதிவு செய்யப்பட்டவராக அல்லது அதனிடமிருந்து அனுமதி பெற்றவராக இருத்தல் அல்லது உயர் தொழில் அல்லது கைத்தொழில் சம்பந்தப்பட்ட நிருவனங்களில் அங்கத்துவம் பெறும் தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அவுஸ்திரேலியாவில் வேலை செய்வோருக்கான சம்பளம் மற்றும் சூழ்நிலைகள், பின்வரும் விடயங்களால் தீர்மானிக்கப்படலாம்.

- குறிப்பிட்ட தொழிலிற்குரிய நிர்ணயிக்கப்பட்ட சம்பளம்
- ஒரு சட்ட ரீதியான உடன்படிக்கை (அவுஸ்திரேலியப் பணியிட உடன்படிக்கை அல்லது கூட்டு உடன்படிக்கை) அல்லது
- ஒரு பொதுவான சட்ட உடன்பாடு.

அவுஸ்திரேலியாவில் சகலவித தொழில்களும் உத்தியோகங்களும் ஆண், பெண் இருபாலாருக்கும் கிட்டவல்லன. ஒருவரது பாலினம், இனம், அங்கக் குறைவு, மதம், பாலியல் பாங்கு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதை அல்லது அநீதியாக நடாத்தப்படுவதைத் தடுக்கும் சட்டங்கள் உள்ளன. வேலைத்தளங்களில் வாய்ப்புகள், தரமுயர்த்தல்கள், பயிற்சி என்பன தொழிலாளரது திறமை, ஆற்றல் மற்றும் அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் அன்றி பாரபட்சமாகவோ வேறு முன்னுரிமை அடிப்படைகளிலோ இடம் பெறாமையை சமத்துவமான தொழில்வாய்ப்புச் சட்டங்கள் உறுதிப்படுத்துகின்றன.

அவுஸ்திரேலிய சட்டத்தின்படி தொழிற் சங்கங்களில் இணைவதற்கு (அல்லது இணையாமலிருப்பதற்கு) தொழிலாளர்களுக்கு உரிமையுண்டு.

நீங்கள் அவுஸ்திரேலியாவுக்கு வெளியே பயிற்றுவிக்கப்பட்ட நிரந்தர வதிவிட அந்தஸ்து உடையவராயின் கடல்கடந்த திறமைகளை அங்கீகரிக்கும் தேசிய அலுவலகம் (National Office of Overseas Skills Recognition - NOOSR) உங்களுக்கு உதவலாம்.

குறிப்பிட்ட தொழில்கள் தொடர்பான மற்றும் திறமைகள் அங்கீகாரம் பற்றிய தகவல்களை பின்வரும் இணைய தளங்களில் பெறலாம்.

- அவுஸ்திரேலியாவில் தொழில் வாய்ப்புகள், திறமைகள் பற்றாக்குறை மற்றும் உத்தியோகங்கள்: www.jobsearch.gov.au
- அவுஸ்திரேலிய வேலையிடம் www.workplace.gov.au
- திறமைசாலிகள் குடிவரவு www.skilledmigrant.gov.au
- தொழில்சார் தகைமைகளை அங்கீகரித்தல் www.workplace.gov.au/tra
- AEI–NOOSR www.aei.dest.gov.au.

## வரி விதிப்பு

சகல அவுஸ்திரேலியர்களும் அவர்களது வருமானம் குறிப்பிட்ட தொகையை விட அதிகமாகக் காணப்படின் வருடாந்தம் உரிய வரிகளைச் செலுத்துமாறு கோரப்படுவர். தொழில் மூலம் கிடைக்கும் சம்பளம், வியாபாரம் மூலம் சம்பாதித்தவை, வங்கியில்

வைப்புச் செய்துள்ள பணத்துக்குக் கிடைக்கும் வட்டி அல்லது வேறு முதலீடுகளால் கிடைக்கும் வருமானம் முதலியன வரி அறவிடப்படக் கூடிய வருமானங்களாகும்.

பெரும்பாலான பொருட்களும் சேவைகளும் அவற்றின் விலையிலேயே ஒரு சிறு வரியை உள்ளடக்கியுள்ளன. இது பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி (Goods and Services Tax - GST ) என அழைக்கப்படுகிறது.

சேமநல சேவைகள், சுகாதார சேவைகள், பாதுகாப்பு மற்றும் நெடுஞ்சாலைகள் போன்ற கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை வழங்குவதற்காக, அவுஸ்திரேலிய அரசாங்கம் அறவிடும் வரிகள் பயன்படுத்தப்படுகின்றன.

மாநிலங்களும் எல்லைப் பிராந்தியங்களும் சில கொடுக்கல்வாங்கல்கள் மீதும் சேவைகள் மீதும் முத்திரை வரி (stamp duties) எனப்படும் வரியை அறவிடுகின்றன. பொலீஸ் படை, ஆஸ்பத்திரிகள் மற்றும் மாநில உள்ளூர்ப் பாதைகள் முதலிய மாநில மற்றும் எல்லைப் பிராந்திய சேவைகள் மற்றும் கட்டமைப்புகளுக்காக இவ்வரிகளால் பெறப்படும் பணம் செலவிடப்படும்.

அவுஸ்திரேலியாவின் வரி மதிப்பீட்டு வருடம் ஜுலை முதலாம் திகதி முதல் ஜுன் 30ம் திகதி வரையாகும். அவுஸ்திரேலிய சட்டத்தின் படி பெரும்பாலானோர், தாம் சகல வழிகளிலும் சம்பாதித்த வருமானம் மற்றும் செலுத்திய வரிகள் ஆகியன அடங்கிய வரி மீளப்பெறலை (tax return) வருடாந்தம் சமர்ப்பிக்க வேண்டும். பெரும்பாலும், தொழிலுக்கு அமர்த்தியிருப்பவர் ஒவ்வொரு தொழிலாளரது சம்பளத்தில் இருந்தும் வரியைக் கழித்து, பின்னர் அதனை அவுஸ்திரேலிய வரிவிதிப்பு அலுவலகத்துக்கு (Australian Taxation Office - ATO ) செலுத்துவார்.

### ஓய்வுகால ஊதியம்

ஓய்வூதிய நிதியம் என்பது தொழிலாளர் ஓய்வு பெறுகின்ற போது தாம் வாழ்வதற்கு உதவும் பணத்தை வைத்திருப்பதற்காக சேமிக்கும் திட்டமாகும். அவுஸ்திரேலியாவில் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொருவரும் இந்த நிதியத்தில் கட்டாயம் சேர வேண்டும். தமது தொழிலாளியின் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்யுமாறு தொழில் தருநரை சட்டம் பணிக்கிறது. தொழில் தருநர் ஓய்வூதிய காப்பு (Employer Superannuation Guarantee) என இது அழைக்கப்படுகிறது.

வரிமதிப்பு மற்று ஓய்வூதிய நிதியம் பற்றிய மேலதிகத் தகவல்களை அவுஸ்திரேலிய வரிமதிப்பீட்டு அலுவலகத்தில் பெறலாம்.

தொலைபேசி: 132 861

இணையம்: www.ato.gov.au

## வீட்டு வசதி

தங்குமிடத்தை இடம் விட்டு இடம் மாற்றுவது எப்போதுமே பெரும் செலவைக் கொண்டது. அவுஸ்திரேலியாவுக்கு பிரயாணம் செய்தல், வீட்டுச் சாமான்களைக் கொண்டு வருதல் மற்றும் புதிய வீடொன்றில் குடியமர்தல் என்பன கணிசமான செலவினங்களைக் கொண்டது.

வீடுகளும், தொடர்மாடி வீடுகளும் (இவை அவுஸ்திரேலியாவில் யூனிட்ஸ் அல்லது குடியிருப்பு மாடி என அழைக்கப்படுகிறது) ஒப்பீட்டளவில் அவுஸ்திரேலியாவில் குறிப்பாக சிட்னி, பெர்த், மெல்பர்ன் மற்றும் கன்பெராவில் விலை கூடியவையாகும்.

அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலச் சொத்து விற்பனையாளர் மூலமாக வீடு அல்லது தொடர்மாடிப் பிரிவொன்றினை வாங்குதல் அல்லது வாடகைக்குப் பெறல் போன்றன இடம் பெறுகின்றன. சொத்துகளை தனிப்பட்ட முறையில் வாங்கவோ, விற்கவோ, குத்தகைக்கு வழங்கவோ முடியுமாயினும் அதற்கு முன்பாக சட்டவல்லுநர் ஒருவரின் ஆலோசனையைப் பெறுவது புத்திசாலித்தனமாகும்.

விற்பனைக்கு அல்லது வாடகைக்கு விடப்படுகின்ற சொத்து விபரங்கள் நாளாந்த பத்திரிகைகளிலும், பொதுவாக சனிக் கிழமைகளில், அல்லது இணையத் தளங்களிலும் அல்லது சொத்து முகவர்கள் மூலமாகவும் விளம்பரப்படுத்தப்படும்.

வாடகைக்கு வீட்டைப் பெறுகின்ற போது பிணைப்பணமாக ஒரு மாத வாடகைக்குச் சமமான தொகையையும், ஒரு மாத வாடகையை முற்பணமாகவும் வழங்குவது வழமையாகும். வாடகைக் குடியிருப்பாளர் இடத்தைவிட்டுச் செல்லும் போது பிணைப் பணம் மீள வழங்கப்படும். திருத்தங்கள் அல்லது சுத்தம் செய்தல் போன்றன செய்ய அவசியப்படின் அப்பணத்தில் இருந்து அவற்றிற்கான செலவுகள் கழித்துக் கொள்ளப்படும்.







## சமூகப் பாதுகாப்பு

செண்டர்லிங்க் (Centrelink) அவுஸ்திரேலிய சமுதாயத்தினருக்கு பல்வேறு சேவைகளையும், கொடுப்பனவுகளையும் வழங்கும் அவுஸ்திரேலியாவின் அரசாங்க நிறுவனமாகும். குறைந்த வருமானம் உடையவர்கள், ஓய்வு பெற்றோர், அங்கயீனர்கள், தொழில் தேடுவோர், தனியான பெற்றோர், ஏனையோர் பராமரிப்பில் ஈடுபட்டுள்ளோர் உட்பட இன்னும் பலருக்கும் இதன் மூலம் உதவி வழங்கப்படுகிறது. இந்தச் சேவைகளையும், கொடுப்பனவுகளையும் பெறுவதற்குரிய ஒருவரது தகுதி அவரது தனிப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்ததாகும்.

மிகச் சிறந்த வாழ்வாதாரமானது ஒருவர் ஊதியம் பெறும் தொழிலின்மூலம் கிடைக்கப் பெறுவதாகும் என அவுஸ்திரேலிய அரசாங்கம் நம்புகிறது. தமது குறிப்பிட்ட சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக வேலை செய்ய முடியாத நிலையிலுள்ள மக்களுக்குப் பொருளாதார உதவிகளை வழங்கி அவர்கள் வேலையொன்றைப் பெற்றுக் கொள்ள உதவும் வகையில் Centrelink அத்தகைய மக்களை உதவிச் சேவைகளுடன் தொடர்புபடுத்தி விடுகிறது. தமக்குத் தகைமை இருக்குமாயின் தொழிலொன்றைத் தேடிக்கொள்ளுமாறும் அல்லது எதிர்காலத்தில் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ள ஏதுவாக தமது திறமைகளை வளர்த்துக் கொள்ளுமாறும் செண்டர்லிங்க் தம்மிடம் கொடுப்பனவு பெறும் மக்களைக் கோரக் கூடும்.

அவுஸ்திரேலியாவுக்கு அகதிகள் அல்லது மனிதாபிமான விசா மூலமாக வருகை தருவோர் பொதுவாக செண்டர்லிங்க் சேவைகளையும், உதவித் திட்டங்களையும் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியும். பொதுவாக, புதிதாக வருகை தந்த ஏனையோர், பெரும்பாலான செண்டர்லிங்க் உதவிகளைப் பெற நிரந்தர வதிவிட விசாவில் இரண்டு வருடங்கள் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்திருத்தல் வேண்டும். இக்காலப் பிரிவில் தமதும், தமது ஆதரவில் தங்கியிருப்போரதும் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதிய பணத்தை அவர்கள் கையிருப்பில் வைத்திருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். தேவைப்படும் உதவி மற்றும் ஒருவரது தனிப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து உதவிக்காகக் காத்திருக்கும் காலப்பகுதி வேறுபடலாம்.

தொழில் தேடுவதற்கான உதவி, பிள்ளை வளர்ப்புச் செலவுகளுக்கான கொடுப்பனவு உள்ளிட்ட குடும்ப உதவி போன்ற மட்டுப்படுத்தப்பட்ட உதவிகள் சில புதிய குடியேறிகளுக்குக் கிடைக்கும். குடும்பங்களுக்கான உதவிகள் பற்றிய மேலதிகத் தகவல்களை அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் குடும்ப உதவி அலுவலகத்தில் (Family Assistance Office) பெறலாம்.

புதிய குடியேறிகள், இங்கு வந்ததும் கூடிய விரைவில், செண்டர்லிங்க் மற்றும்/அல்லது குடும்ப உதவி அலுவலகம் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டு தமக்கு கிடைக்கக் கூடுமான உரிமைகள் மற்றும் உதவிகள், உதாரணமாக வேலை தேடுதல் என்பன பற்றித் தெரிந்துகொள்ளல் வேண்டும்.

**தொடர்புக்குரிய விபரங்கள்:**

| | |
|---|---|
| செண்டர்லிங்க் | 13 2850 |
| இணையம்: | www.centrelink.gov.au |
| குடும்ப உதவி அலுகலகம்: | 13 6150 |
| இணையம்: | www.familyassist.gov.au |
| ஆங்கிலம் தவிர்ந்த மொழிகளுக்கு: | 13 1202 |

## ஆஸ்பத்திரி மற்றும் மருத்துவ செலவுகள்

மெடிகெயர் அவுஸ்திரேலியா (Medicare Australia) எனப்படும் திட்டத்தின் ஊடாக அடிப்படை ஆஸ்பத்திரி மற்றும் மருத்துவ செலவுகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்குகிறது. மெடிகெயர் வசதி பெறுவோருக்கு மருந்தாக்க பலன் திட்டத்தின் (Pharmaceutical Benefits Scheme - PBS) கீழ் பெரும்பாலான மருந்துவகைகளை அரசாங்கம் மானிய விலையில் வழங்குகிறது. புதிதாக வருகை தரும் குடியேறிகள், தமது பாஸ்போர்ட், விசா ஆகியவையுடன் மெடிகெயர் அலுவலகத்துக்குச் சென்று மெடிகெயர் திட்டத்தில் இணைந்து கொள்ள தமக்குள்ள தகுதி பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். மெடிகெயர் இணையத் தளத்தில் (கீழே பார்க்க) பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள தகவல் கையேடு ஒன்று உண்டு.

பெரும்பாலான தற்காலிக விசா பெற்றுள்ளோர் மெடிகெயர் திட்டத்தில் இணையும் தகுதியைப் பெறமாட்டார்கள். ஆயினும் சில விதிவிலக்குகள் உண்டு. உதாரணமாக நிரந்தர வதிவிட விசாவுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்து, அதற்காக விண்ணப்பித்திருக்கும் தற்காலிக விசா பெற்றுள்ளோரைக் குறிப்பிடலாம்.

**தொடர்புக்குரிய விபரங்கள்:**

| | |
|---|---|
| தொலைபேசி | 13 2011 |
| இணையம்: | www.medicareaustralia.gov.au |

மெடிகெயரில் உள்ளடக்கப்படாத, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறல், பல் மற்றும் கண் வைத்தியம், அம்புலன்ஸில் கொண்டு செல்லல் போன்ற சேவைகளுக்கான செலவுகளைப் பெற்றுக் கொள்வதற்கென சில தனியார் சுகாதார காப்புறுதித் திட்டங்களும் உள்ளன.

**தனியார் சுகாதார தகவல்கள்**

| | |
|---|---|
| மின்னஞ்சல்: | privatehealth@health.gov.au |
| இணையம்: | www.health.gov.au/internet/wcms/publishing.nsf/Content/private-1 |

## ஆங்கில மொழி வகுப்புகள்

புதிய குடியேறி ஒருவர் தமது புதிய சமுதாயத்தில் வெற்றிகரமாகக் குடியமருவதற்கும், தமது தனிப்பட்ட, சமூக மற்றும் பொருளாதார இலக்குகளை அடையவும் மேற்கொள்கின்ற முதலாவது அதிமுக்கிய முயற்சியாக ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்வதை அவுஸ்திரேலிய அரசாங்கம் கருதுகிறது. உங்களது ஆங்கில மொழிப் புலமை ‘நடைமுறை’ அளவிலும் குறைவாயின், குடியேறிய வயதுவந்தோர் ஆங்கில மொழித் திட்டத்தின் (Adult Migrant English Programme – AMEP ) கீழ் இலவச ஆங்கில மொழிப் பாடநெறியைக் கற்றுக்கொள்ள தகுதிபெறுகிறீர்கள்.

உங்களது தகுதியைப் பற்றியும், உள்ளூர் AMEP சேவையைப் பற்றியும் மேலதிகத் தகவல் பெற, நீங்கள் வந்திறங்கியதும் குடிவரவு மற்றும் குடியுரிமை இலாகாவை தொடர்பு கொள்ளவும் அல்லது உள்ளூர் AMEP சேவை வழங்குநரை தரிசிக்கவும். நீங்கள் உள்நாட்டில் இருப்பின் நிரந்தர வதிவிட அந்தஸ்து கிடைத்து மூன்று மாதத்திற்குள் அல்லது நீங்கள் வெளிநாட்டில் இருப்பின் இங்கு வந்ததிலிருந்து மூன்று மாதத்திற்குள் ஆங்கில மொழி வகுப்புக்காக நீங்கள் உங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

**தொடர்புக்குரிய விபரங்கள்:**

| | |
|---|---|
| தொலைபேசி: | 131 881 |
| இணையம்: | www.immi.gov.au/amep |





## அவுஸ்திரேலிய அரசின் ஏனைய ஆங்கில மொழிக் கற்பித்தற் திட்டங்கள்

அவுஸ்திரேலியாவின் கல்வி, விஞ்ஞான, பயிற்றுவித்தல் திணைக்களம் (Department of Education, Science and Training) நிர்வகிக்கும் வேறு மூன்று ஆங்கில மொழிப் பயிற்சித் திட்டங்களும் உள்ளன. பணியிட ஆங்கில மொழி மற்றும் எழுத வாசித்தல் திட்டம் (Workplace English Language and Literacy programme - WELL), தொழில் தேடுவோருக்கான மொழி, எழுத வாசித்தல் மற்றும் எண்ணியல் நிகழ்ச்சித் திட்டம் (Language, Literacy and Numeracy Programme - LLNP), பாடசாலை செல்லும் வயதுடைய பிள்ளைகளுக்கென புதிய குடியேறிகளுக்கான ஆங்கிலம் இரண்டாம் மொழித் திட்டம் (English as a second language – New Arrivals - ESL – NA) என்பனவே அவை. மேலதிகத் தகவல் பெற பார்க்கவும்: www.dest.gov.au

## உரைபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்புகள் உதவி

உரைபெயர்ப்பு உதவி பெற உரைபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு சேவையை (Translating and Interpreting Service National - TIS National) 131 450 இலக்கத்தில் (அவுஸ்திரேலியாவில் எங்கிருந்து அழைத்தாலும் உள்ளூர்க் கட்டணம் அறவிடப்படும்) அழைக்கலாம். TIS National வாரத்தில் ஏழு நாட்களும் நாளாந்தம் 24 மணித்தியாலமும் உரைபெயர்ப்பு சேவையைப் வழங்குகிறது.

அவுஸ்திரேலியாவின் பிரசையாக அல்லது வதிவிடக்காரராகத் தகுதி பெற்றோருக்கு, குடியேற்றம் தொடர்பான தனிப்பட்ட தஸ்தாவேஜுகளை சுருக்கமாக ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்கான இலவச வசதியும் உண்டு.

### இணையத்தள விபரம்:

- www.immi.gov.au/living-in-australia/help-with-english/learn-english/client/translation_help.htm

## கல்வி

அவுஸ்திரேலிய சட்டத்தின் பிரகாரம், பிள்ளைகள் பொதுவாக ஐந்து முதல் 15 வயது வரை பாடசாலைக்குச் செல்ல வேண்டும். இந்த வயதெல்லை சில மாநிலங்களிலும், எல்லைப் பிராந்தியங்களிலும் சிறிதளவு வேறுபடலாம். அரச பள்ளிகளில் அரசாங்கம் இலவச கல்வியை வழங்குகிறது (தற்காலிக விசா பெற்றுள்ள மாணவர்கள் முழுமையான பாடசாலைக் கட்டணத்தைச் செலுத்துமாறு கேட்கப்படக் கூடும்). தேவாலயங்கள் மற்றும் வேறு குழுக்களால் நடாத்தப்படும் தனியார் பாடசாலைகளுக்கும் மாணவர் செல்வர். அங்கு அவர்கள் கட்டணம் செலுத்த வேண்டும்.

அவுஸ்திரேலிய கல்வித் திட்டம் அனைவருக்கும் பொதுவானது. சகல வயதினருக்கும் எத்தகைய திறமைப் படித்தரங்களைக் கொண்டோருக்கும் அது சந்தர்ப்பத்தை வழங்குகிறது.

அரச பாடசாலைகளை மாநில/எல்லைப் பிராந்திய அரசாங்கங்கள் நிர்வகிக்கின்றன. பாடசாலை அனுமதி குறித்த தகவல்களை மாநில/எல்லைப் பிராந்திய கல்வித் திணைக்களத்திலோ, அருகாமையில் உள்ள பள்ளியிலோ பெற்றுக் கொள்ளலாம்.

இரண்டு வகையான மூன்றாம் நிலைக் (tertiary) கல்வித் திட்டங்கள் காணப்படுகின்றன. அவை, தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறையிலுள்ள நிறுவனங்களாலும் தொழிற்சாலைகளாலும் வழங்கப்படுபவை (VET) மற்றும் பல்கலைக்கழகங்களாலும் மற்றுமுள்ள உயர் கல்வி நிறுவனங்களாலும் வழங்கப்படுபவையாகும். மூன்றாம் நிலைக் கல்விக்கான அனுமதி விண்ணப்பதாரியின் விசாவிலுள்ள நிபந்தனைகளைப் பொறுத்தே அமையலாம்.

சில சந்தர்ப்பங்களில், மூன்றாம் நிலைக் கல்வி இடங்களுக்கான (பொதுநலவாய உதவி பெறும் இடங்கள்) பெரும்பகுதிச் செலவுகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் வழங்குகிறது. எஞ்சிய தொகையை மாணவர்கள் செலுத்துவர். உயர்கல்வி உதவித் திட்டம் (Higher Education Contributory Scheme -HECS), அல்லது உயர் கல்விக் கடன் திட்டம் (Higher Education Loan Programme - HELP) போன்றவற்றிற்கு மூன்றாம் நிலை மாணவர் விண்ணப்பிக்கலாம். இவை பொதுநலவாய உதவி பெறும் இடங்களில் அனுமதி பெற்றுள்ள தகுதியான மாணவர்களுக்குரியதாகும். மேற்படி HECS – HELP மூலம் கிடைக்கும் உதவித் தொகையால், மாணவர் செலுத்தும் தொகையை முழுமையாகவோ, பகுதியாகவோ பூர்த்தி செய்ய முடியும்.

### இணையத்தில் மேலதிகத் தகவல்:

- கல்வி, விஞ்ஞான, பயிற்றுவித்தல் இலாகா www.dest.gov.au
- பல்கலைக்கழகம் செல்லல் www.goingtouni.gov.au

## வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம்

ஓட்டுநர் அனுமதிப் பத்திரங்கள் மாநில மற்றும் எல்லைப் பிராந்திய அரசாங்கங்களால் வழங்கப்படுகின்றன. பொதுவாக விண்ணப்பதாரிகள் பொது அறிவுப் பரீட்சை, செயன்முறைப் பரீட்சை மற்றும் கண்பார்வைச் சோதனை என்பவற்றில் சித்தி பெற வேண்டும். செல்லுபடியாகும் ஓட்டுநர் அனுமதிப் பத்திரமின்றி எவரும் வாகனம் செலுத்த முடியாது.

நிரந்தர வதிவிட விசா வைத்திருப்போர், அவுஸ்திரேலியா வந்த முதல் மூன்று மாதங்களிலும், வேறு ஒரு நாட்டின், ஆங்கில மொழியிலான அல்லது மொழிபெயர்ப்புடன் கூடிய, செல்லுபடியாகும் ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தை வைத்திருப்பாராயின் வாகனம் செலுத்த அனுமதிக்கப்படுவார்கள். இந்தக் காலகட்டத்தின் பின்னர், பொருத்தமான ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தை அவர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## முக்கியமான தொடர்பு விபரங்கள்

- உயிர் ஆபத்தான அவசர நிலை (தீ, பொலீஸ், அம்புலன்ஸ்) – தொலைபேசி: 000
- உரைபெயர்ப்பு, மொழிபெயர்ப்புச் சேவை (TIS National) – தொலைபேசி: 131 450
- குடிவரவு, குடியுரிமை இலாகா (DIAC) – தொலைபேசி: 131 881
- அவுஸ்திரேலிய அரசாங்க இணைய நுழைவாயில்: www.australia.gov.au
- 'அவுஸ்திரேலியாவில் வசித்தல்' (லிவிங் இன் அவுஸ்திரேலியா) இணையப் பக்கங்கள்: – www.immi.gov.au/living-in-australia/index.htm
- *'அவுஸ்திரேலியாவில் வாழ்வைத் துவங்குதல்'* கையேடுகள் – www.immi.gov.au/living-in-australia/settle-in-australia/beginning-life/index.htm

# ஓர் அவுஸ்திரேலியப் பிரசையாதல்



தகுதி பெற்ற நிரந்தர வதிவாளர்கள் அவுஸ்திரேலிய குடியுரிமையைப் பெற்றுக் கொள்ளுமாறு அவுஸ்திரேலிய அரசாங்கம் வலுவாய் ஊக்குவிக்கிறது.

அவுஸ்திரேலிய பிரசையாகுவதற்கு நீங்கள் தீர்மானிப்பதன் மூலம், அவுஸ்திரேலியாவுக்கும் அதன் மக்களுக்குமான உங்களது தனிப்பட்ட விசுவாசத்தையும், பற்றுறுதியையும் பிரகடனப்படுத்துகிறீர்கள். ஒரு வகையில், இது குடிவரவுப் பயணத்தினதும், அவுஸ்திரேலியாவைத் தனது இல்லமாகக் கொள்வதினதும் இறுதிக் கட்டமாகும்.

அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாக வாழ்வதன் மூலம் அனைத்து மக்களும் சமமான சந்தர்ப்பங்களைப் பகிர்ந்து கொள்கின்ற போதிலும், பிரசையாவதன் மூலம் அவுஸ்திரேலிய சமுதாயத்தில் பூரண அங்கத்துவத்தை முறையாகப் பெறும் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. வாக்களிப்பது, பாராளுமன்றத்துக்காகப் போட்டியிடுவது மற்றும் அரசாங்க பதவிகளை வகிப்பது போன்ற தேசத்தின் ஜனநாயக நடைமுறைகளில் முழுமையாகக் கலந்து கொள்வதன் மூலம் அவுஸ்திரேலியாவிற்கு பலனுள்ள பங்களிப்பை வழங்குவதற்கான வாய்ப்பை இது மக்களுக்கு வழங்குகிறது.

நமது தேசத்தின் இதயமாகத் திகழுகின்ற அவுஸ்திரேலியக் குடியுரிமையானது நம் அனைவரையும் ஒன்றிணைக்கும் சக்தியாகும்.

அவுஸ்திரேலியக் குடியுரிமையானது அதற்கே உரித்தான கடமைகளையும் உரிமைகளையும் கொண்டுள்ளது.

## குடியுரிமையினால் கிடைக்கும் சிறப்புரிமைகள்

எல்லா அவுஸ்திரேலிய பிரசைகளும் பின்வரும் உரிமைகளைப் பெறுவர்.

- அவுஸ்திரேலிய அரசாங்கங்களைத் தெரிவு செய்ய உதவும் தேர்தலில் வாக்களித்தல்
- பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடல்
- அவுஸ்திரேலியக் கடவுச் சீட்டைப் பெற விண்ணப்பித்தலும் தங்குதடையின்றி அவுஸ்திரேலியாவுக்குள் வருதலும்
- வெளிநாடுகளில் இருக்கும் போது அவுஸ்திரேலிய தூதுவராலயங்களின் கன்சியூலர் சேவைகளை முழுமையாகப் பெறுதல்
- வெளிநாடுகளில் பிறக்கும் தமது பிள்ளைகளை மரபுவழியில் அவுஸ்திரேலியப் பிரசையாகப் பதிவு செய்தல்
- அவுஸ்திரேலிய பாதுகாப்புப் படையிலும் அவுஸ்திரேலிய அரச சேவையிலும் அனைத்து வித தொழில்வாய்ப்புகளையும் பெறும் சந்தர்ப்பம்

## கடமைகள்

அவுஸ்திரேலிய குடியுரிமையின் மூலம் பின்வரும் பொறுப்புகளும் வந்து சேருகின்றன:

- பொதுநலவாய, மாநில மற்றும் எல்லைப் பிராந்தியத் தேர்தல்களிலும் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்களிலும் வாக்களித்தல்*
- அழைக்கப்படுமிடத்து ஜூரியாகச் (jury) செயல்படுதல்
- தேவையேற்படும் போது அவுஸ்திரேலியாவைப் பாதுகாத்தல் (அவுஸ்திரேலியாவில் பிறந்த பிரசைகளுக்கான அதே கடமைகள் மற்றும் விதிவிலக்குகள் பொருந்தும்).

**அபிப்பிராய வாக்கெடுப்புகள் என்பது சட்ட யாப்பில் மாற்றம் செய்வதற்கான சட்ட முன்மொழிவு பற்றிய வாக்காளர்களின் அபிப்பிராயத்தைக் குறிக்கும்.*

அனேகமான நிரந்தர வதிவாளர்கள் அவுஸ்திரேலிய பிரசையாகுவதன் முதற்படி, குடியுரிமைப் பரீட்சையில் தேர்ச்சியடைவதாகும். அப்பரீட்சைக்குத் தயாராகுவதற்கு விண்ணப்பதாரிகள் கீழ்வரும் இணையத்தளத்தில் உள்ள *ஓர் அவுஸ்திரேலியப் பிரசையாகுதல் (Becoming an Australian citizen)* என்ற குடியுரிமைத் தகவல் கைநூலை வாசித்தறிய வேண்டும். அவர்கள் பரீட்சையில் தேறி, அவர்களது குடியுரிமை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், பகிரங்க குடியுரிமை நிகழ்வின் போது பின்வரும் பற்றுறுதிப் பிரகடனத்தை மேற்கொள்ளுமாறு அவர்கள் கோரப்படுவர்.

*‘From this time forward, under God,**
*I pledge my loyalty to Australia and its people*
*Whose democratic beliefs I share,*
*Whose rights and liberties I respect, and*
*Whose laws I will uphold and obey’.*

*People may choose whether or not to use the words ‘under God’.

*‘இத்தருணத்தில் இருந்து, இறை நாமத்தால் *அவுஸ்திரேலியாவுக்கும்*
*அதன் மக்களுக்கும் விசுவாசப் பிரமாணமளிக்கும் நான்*
*அவர்களது ஜனநாயக நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொள்கின்றேன்*
*அவர்களது உரிமைகளையும் சுதந்திரங்களையும் மதிக்கின்றேன்*
*அவர்களது சட்டங்களைப் பேணி ஒழுகுவேன்’.*

* ‘இறைவனின் நாமத்தால்’ என்று கூறுவதா இல்லையா என்பதை அவரவர் தீர்மானிக்கலாம்.

எல்லாவித கலாசாரங்களையும், மதங்களையும் கொண்ட அவுஸ்திரேலியர்கள் ஒரே சமுதாயத்தவராக ஒற்றுமைப்பட்டிருக்கும் அதேவேளை தத்தமது நம்பிக்கைகளையும், பாரம்பரியங்களையும் பேண முடியும்.

அவுஸ்திரேலியப் பிரசையாகுவதன் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு உமது விசுவாசத்தைத் தெரிவிப்பதோடு, உமது கலாசாரத்தின் மூலம் அவுஸ்திரேலியாவை வளப்படுத்தும் அதேவேளை பலமான, ஒன்றுபட்ட, சுமுகமான ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஏனைய அவுஸ்திரேலியருடன் தோளோடு தோள் நின்று உழைப்பதற்கு உம்மை அர்ப்பணிக்கின்றீர்.

ஓர் அவுஸ்திரேலிய பிரசையாவது பற்றிய மேலதிகத் தகவல்களை, அவுஸ்திரேலிய குடியுரிமை இணையம் மூலமாகவோ, குடியுரிமைத் தகவல் தொலைபேசி மூலமாகவோ பெற்றுக்கொள்ளாலாம்.

### மேலதிக இணையத் தகவல்:

- பார்க்கவும் www.citizenship.gov.au அல்லது தொலைபேசியில் அழைக்கவும்: 131 880